பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 19 செவ்வாய்க்கிழமை (04.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 341

## கிளாலியிலிருந்து 7 கி.மீற்றர் தூரத்தில் படையினர்

# குடாநாட்டுக்கான பாதை

# மிக விரைவில் திறக்கப்படுமாம்

## இராணுவத் தளபதி பொன்சேகா சொல்கிறார்

அனுராதபுரம், நவம்பர்4

கிளாலியில் உள்ள கடல் நீர் ஏரியில் இருந்து 7 கிலோ மீற்றர் தூரத்தில் எமது இராணுவத்தினர் இப்போது நிலைகொண்டுள்ளனர்.

கிளாலியை அவர்கள் மிக விரைவில் கைப்பற்றிவிடுவர்.

அதன்பின்னர் யாழ்ப்பாண குடாநாட்டுக்கான பிரதான விநியோகப் பாதை திறக்கப்பட்டுவிடும்.

அதேவேளையில் - ஏ9 பாதைக்கு கிழக்கே நான்கு டிவிசன்களை களத்தில் இறக்குவதன் மூலம், 50 கிலோ மீற்றர் நீளமான இடப்பரப்பை வசப்படுத்தி முல்லைத்தீவை கைப்பற்றிவிட முடியும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா. அனுராதபுர மாவட்டம் சாலியபுரவில் உள்ள கஜபா படையணியின் வெள்ளி விழா கொண்டாட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் இராணுவத் தளபதி இதனைத் தெரிவித்தார்.



(16 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் பொருளாதாரம் மிகவும் ஆபத்தான கட்டத்தில்

## அபாயச் சங்கு ஊதுகிறது சர்வதேச நாணய நிதியம்

கொழும்பு, நவம்பர்4

இலங்கையின் பொருளாதாரம் மிகக் கடும் அபாயத்தில் சிக்கியுள்ளது என எச்சரித் துள்ள சர்வதேச நாணய நிதியம், பொருளாதார வளர்ச்சி மேலும் குறைவடையலாம், பண வீக்கம் அதிகரிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளது.

இலங்கை குறித்த தனது வருடாந்த மதிப்பீட்டறிக்கையிலேயே சர்வதேச நாணய நிதியம் இதனைத் தெரிவித்துள்ளது.

வரவு - செலவுத்திட்டம் மிக மோசமாக நிர்வகிக்கப்படுதல், வெளிநாட்டுக் கடன்களில் தங்கியிருப்பது மற்றும் மிகைப்படுத்தப்பட்ட கடன்கள் காரணமாகவே இலங்கையின் பொருளாதாரம் இவ்வாறான மிக அபாயத்தில் சிக்கியுள்ளது எனச் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் பணவீக்கம் இவ்வருட

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளியானில் விமானத் தாக்குதல்

கிளிநொச்சி, நவ.4

வடமராட்சி கிழக்கு, முள்ளியான் பகுதியில் நேற்று விமானப்படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் இருவர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முள்ளியானில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது வான்படையின் மிக் -

(16 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே → 15 ஆம் பக்கத்தில்
★48 மணி நேரத்தில் பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறை.
★தொலைந்த அடையாள அட்டையை மீளப் பெறும் வழிமுறை.
★பல்கலைக்கழக சமூகத்தின் அறிக்கை

## யாழ். பல்கலையில் பகிஷ்கரிப்பு; துக்கம் அனுஷ்டிப்பு படையினர், பொலிஸார் குவிப்பு;அங்கு பதற்றம்

யாழ்ப்பாணம், நவ.4

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் செல்லத்துரை புருஷோத்மனின் மரணத்தையொட்டி நேற்று பல்கலைக்கழகத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. அத்துடன் பல்கலைக்கழக சமூகத்தினர் பகிஷ்கரிப்பிலும் ஈடுபட்டனர்.

இதனால் பல்கலைக்கழகச் செயற்பாடுகள் நேற்றுமுழுநாளும் பாதிக்கப்பட்டன. பல்கலைக்கழகச் சுற்றாடலில் பெருமளவு படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். அதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

மாணவன் புருஷோத்மனின் மறைவையொட்டி யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளைப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே →
க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்குரிய வரலாறு - 1

## ஞாயிறு இரவும் நேற்றுப் பகலும் கிளிநொச்சி நகரில் ஷெல் வீச்சு

கிளிநொச்சி,நவ.4

கிளிநொச்சி நகர் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவும் நேற்றுப் பகலும் படையினர் அகோர ஆட்டிலெறி, ஷெல் வீச்சுத் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர். இதனால் மக்கள் குடியிருப்புக்கள் பல அழிந்துள்ளன என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி நகரில் (16 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் நேற்று மாலை கடும் சமர்

வவுனியா,நவ.4

வன்னிவிளாங்குளம் பகுதியில் இருந்து மாங்குளம் நோக்கி நேற்றுப் பிற்பகல்2.30 மணியளவில் முன்னேறிய படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றுள்ளது.

முன்னேறிய படையினருடன் இடம்பெற்ற மோதலையடுத்து படையினர் பழைய நிலைகளுக்கு விரட்டப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

படையினரின் கடும் தாக்குதலுக்கு முகம்கொடுக்க முடியாது புலிகள் அந்தப் பகுதியில் இருந்து பின்வாங்கி விட்டனர் என படைத்தரப்பு அறிவித்துள்ளது.

இத் தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் தரப்புத் தெரிவித்துள்ளதாவது:-

வன்னிவிளாங்குளத்திலிருந்து மாங்குளம் நோக்கி சிறிலங்காப் படையினர் செறிவான ஷெல் சூட்டாதரவுடன் நேற்று நண்பகல் 12 மணியளவில் முன்நகர்வை மேற்கொண்டனர். இந்த முன்நகர்வுக்கு எதிராக விடுதலைப்புலிகள் தீவிர முறியடிப்பு (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் 29 உணவு லொறிகள் நேற்று மீண்டும் வன்னி சென்றன

கொழும்பு, நவ.4

வன்னியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளில் சிக்கி கடும் அவலங்களை எதிர்கொண்டுள்ள மக்களுக்கான மற்றுமொரு உணவுத் தொடரணியை ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டம் நேற்று அனுப்பி வைத்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மோதல் காரணமாக இடம்பெயர்ந்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு வாரங்களுக்கு விநியோகிக்க போதுமான உணவுப்பொருள் முல்லைத்தீவில்

வவுனியா, நவ.4

ஐ.நா.உலக உணவுத் திட்டத்தினால் அனுப்பப்பட்ட பதினெட்டு உணவு லொறிகளில் முல்லைத்தீவுப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளதாக அந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இவற்றில் எடுத்து வரப்பட்ட பொருள்களுடன் இரண்டு வாரத்துக்கான விநியோ

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தென்மராட்சி முன்பள்ளி சிறார்களுக்கு நாளை முதல் பால் வழங்க ஏற்பாடு

தென்மராட்சி பிரதேச முன்பள்ளி சிறார்களுக்கு நாளை புதன் கிழமை தொடக்கம் பால் வழங்கப்படவுள்ளது.

பிரதேச சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் அனுசரணையுடன் சாவகச்சேரி கால்நடை வளர்ப் போர் கூட்டுறவுச் சங்கத்தினால் பால் வழங்கப்படவுள்ளது.

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகம், மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலையம், கைதடி தெற்கு குடும்ப நல அலுவலர் பணிமனை, சாவகச்சேரி பிரதேச சபை, நாவற்குளி உப அலுவலகம் ஆகியவற்றிற்கு அருகாமையில் உள்ள பால் சேக ரிப்பு நிலையங்கள் ஊடாகவும் இவை தவிர்ந்த ஏனைய பகுதி களில் பாற் பண்ணையாளர்களிடமும் முன்பள்ளிகளுக்கான பால் கொள்வனவு செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கால் நடை வைத்தியர் செ.இரகுநாதன் தெரிவித்தார்.

இத் திட்டத்தில் 56 கிராம அலுவலர் பிரிவுகளில் இயங்கும் 83 முன்பள்ளிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த முன்பள்ளி சிறார்க ளுக்கு பால் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறார்களுக்கு பால் வழங்கும் திட்டம் பிரதேச செயலரின் நேரடி ஒழுங்கமைப் பில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## சூரன் போர் உற்சவம்

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் சூரன்போர் உற்சவம் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு முருகன் வெளி வீதி வலம் வருவார். அப் போது சூரன்போர் இடம்பெறும். (1)

* * *

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவிலில் சூரன்போர் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கும் திருக்கல்யாண உற் சவம் மறுநாள் புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கும் இடம்பெறவுள் ளன. (1-119)

* * *

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவிலில் சூரன்போர் உற் சவம் இன்று செவ்வாய் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

கந்தசஷ்டியை ஒட்டிய பாரணைப் பூஜை நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. (1-236)

## உலக உணவுத்திட்ட கல்விக்கான உணவு விநியோகம்

உலக உணவுத் திட்ட கல்விக்கான உணவுப் பொருள்கள் செயலகத்தால் வழங்கப்பட்டுவருகின்றன.

3 ஆம் தவணையின் மிகுதி 20 நாள்களுக்கான பொருள்களுக் கான வழங்கற்கட்டளைகள் கடந்த 31 ஆம் திகதி முதல் வழங்கப் பட்டு வருகின்றன.

இதுவரை வழங்கற்கட்டளைகளைப் பெற்றுக் கொள்ளாத ப.நோ.கூ.சங்கங்கள் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் அவற் றைப் பெற்று பொருள்களை களஞ்சியத்திலிருந்து பெற்று விநி யோகத்தை மேற்கொள்ளுமாறு திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் உணவுப் பொருள்களை பாடசாலைகளுக்கு வழங்கி முடிக்க வேண்டும் என்று அவர் அறி வுறுத்தியுள்ளார். (1)

### வான் விற்பனைக்கு

சைப்பிறா வான் (mini cap - பெற்றோல்) இல.HN- XXXX என்னும் தொடர் இலக்கமுடையது. உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- இல.45/23, கஸ்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
T.P 0777041527

### கமுகங் கன்றுகள் விற்பனைக்கு

ஒரு வருடம் பூர்த்தியடைந்த நல்லினக் கமுக்ங் கன்றுகள் பொதி செய்யப்பட்ட நிலையில் விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு: **K.R.**
270, கனகரத்தினம் வீதி, நாயன்மார்கட்டு. (79469)

### விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட தரமான தேக்கு மரப் பலகையும், சைனா யுக்கி தையல் இயந்திரமும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- மங்களா காட்சியறை,
536, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

### தவறிவிட்டது

தனங்கிளப்பைச் சேர்ந்த கிருஷ்ணசாமி மாணிக்கவாசகர் என்பவரது (512994296V) இலக்க தேசிய அடையாள அட்டை கடந்த முதலாம் திகதி கொடிகாமம் சந்தையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மீசாலை கிழக்கு, மீசாலை என்னும் முகவரியில் ஒப்படைக் கவும். சன்மானம் வழங்கப்படும். *(சி/555188)*

### ஒப்படைக்கக் கோரிக்கை

*கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியன்று, ரெலிகொம் நிறுவன யாழ்.பிரதான அலுவ லகத்தில் தாம் நிறுத்தி வைத்த 56081410 இலக்கம் கொண்ட லுமாலா துவிச்சக்கர வண்டிக்குப் பதிலாக L2210575 இலக்கம் கொண்ட எனது துவிச்சக்கர வண்டியை எடுத்துச் சென்றுள்ள ரெலிகொம் நிறுவன வாடிக்கையாளர் தயவுசெய்து ரெலிகொம் நிறுவன பாதுகாப்புப் பிரிவில் அதனை ஒப் படைத்து தமது துவிச்சக்கர வண்டியை பெற் றுக் கொள்ளவும்.*

*சி.சிவநாசன், உரும்பிராய் கிழக்கு.*

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா ஆச்சிப்பிள்ளை

சிறுப்பிட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஆச்சிப்பிள்ளை நேற்றுமுன்தினம் (02.11.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வள்ளிப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேதார ணியம் கந்தையாவின் (இளைப்பாறிய ஆசிரியர், புத்தூர் சோமஸ் கந்தா) அன்பு மனைவியும், டாக்டர் கிருஷ்ணராஜா (இளைப்பாறிய பல் வைத்தியர்), உமாதேவி (இளைப்பாறிய ஆசிரியர், சிறுப்பிட்டி இந்து பாடசாலை), மங்களேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியர், ஆவரங் கால் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2008) புதன் கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவு டல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி மத்தியிலுள்ள இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி மத்தி,* தகவல்:
*சிறுப்பிட்டி.* *(சி/55191)* டாக்டர் க.கிருஷ்ணராசா (மகன்).

### மாரிமுத்து கந்தசாமி



சரவணை கிழக்கு, வேலணை 9 ஆம் வட் டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட மாரிமுத்து கந்தசாமி நேற்று (03.11.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரி முத்து - இளையபிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தெய்வானைப் பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென் றவர்களான கதிரவேலு - அன்னம்மா தம்பதி யினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, விநாசித்தம்பி மற்றும் அன்னம்மா, இராசகிளி, மாணிக்கம் ஆகியோ ரின் பாசமிகு சகோதரனும், நாகபூசணி, நாகரட்ணம், கமலாம் பிகை ஆகியோரின் மைத்துனரும், கணேசலிங்கம், தேவி (இத் தாலி), றஞ்சினிதேவி, வசந்தி, மதிஅழகன் (இந்தியா), செல்வ லிங்கம் (இத்தாலி), புனிதவதி (வவா - லண்டன்), முகுந்தன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவறாணி, வரத ராஜா (இத்தாலி), காலஞ்சென்ற சிவாநந்தன் மற்றும் பொங் கனேஸ்வரன் (வவுனியா), இந்திராணி (இந்தியா), சத்தியேஸ்வரி (இத்தாலி), உதயகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், நிரோஷன் (இந்தியா), ஜீவவாணி, தர்சிகா, துவாரகன், நிவேஜன், கம்ஷா, ஜர்ஷன் (இத்தாலி), ஜர்ஷினி (இத்தாலி), சுயசாந், பானுஸ் ஷியா, சஞ்ஜை, பௌஷன் (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2008) புதன் கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சரவணை கிழக்கு,* மக்கள், மருமக்கள்,
*வேலணை.* *(79633)* பேரப்பிள்ளைகள்.


# நன்றி கூறுகின்றோம்





நேற்று (03.11.2008) திங்கட்கிழமை எமது ஸ்தாபனமான

**சிறி நதியா டிஜிற்றல் கலர் லாப் & ஸ்ருடியோ நிறுவனத்தை**

ஆரம்பித்து வைத்த HAYLEYS Consumer நிறுவனத்தின்

**திரு.செல்வரத்தினம் நிமால்**
(Business Unit Head)

மற்றும் அந்த நிறுவனத்தின் பிரதிநிதிகளான திரு.S.U.வீரக்கொடி (Technical Executive), திரு.ருக்சான்குமார (Sales Executive) ஆகியோருக்கும், விழாவில் கலந்துகொண்ட நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

லக்சன் பிளாசா கட்டடம்,
108 A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 021 222 8412

சிறி நதியா டிஜிற்றல் கலர் லாப்
& ஸ்ருடியோ,
சிறி நதியா நகை மாளிகை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மோசமடையும் பொருளாதாரம்: நாணய நிதியம் எச்சரிக்கை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது தற்போதைய பதவிக் காலத்தின் அரைவாசியை இன்னும் இரு வாரங்களில் பூர்த்தி செய்கின்றார்.

இந்த மூன்றாண்டு காலத்தில் அவரது 'மஹிந்த சிந்தனை' ஆட்சி அதிகாரம் இலங்கைத் தீவின் பொருளாதாரத்தை எங்கே கொண்டுபோய் நிறுத்தியிருக்கின்றது என்பதை அமெரிக்காவின், வாஷிங்ரனைத் தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச நாணய நிதியம் அம்பலப்படுத்தியிருக்கின்றது.

இலங்கையின் பொருளாதாரப் போக்குப் பற்றிய தனது வருடாந்த அவதானிப்பு அறிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அந்த அமைப்பு, அதிலேயே 'மஹிந்த சிந்தனை' பொருளாதாரக் கொள்கையால் நேர்ந்துள்ள பொட்டுக்கேட்டை அம்பலப்படுத்தியிருக்கின்றது.

ஆசியப் பிராந்திய நாடுகளில் - ஏன் உலகிலேயே ஓரிரு ஆபிரிக்க நாடுகளைத் தவிர்ந்து - அதி கூடிய பணவீக்கம் கொண்ட நாடு என்ற 'பெருமையை' - 'சாதனையை' - ஜனாதிபதி மஹிந்தவின் 'ஒப்பற்ற' ஆட்சியின் கீழ் இலங்கை நிலைநாட்டியிருக்கின்றது.

இந்தப் பிராந்தியத்தில் ஒருசில நாடுகளைத் தவிர, ஏனைய தேசங்களில் பணவீக்கம் இரட்டை இலக்கத்தைக் கூட எட்டவேயில்லை.

ஆனால் இலங்கையில் அது சராசரியாக 25 வீதத்தைத் தொட்டு சாதனை படைத்து நிற்கின்றது.

இலங்கை நாணயமான ரூபாவுக்கு செயற்கைத் தனமாக உயர்த்தப்பட்டிருக்கும் பெறுமதி, வெளிநாட்டுக் கடன்களை நம்பி, அதில் தங்கியிருக்கும் போக்கு, அரசின் வரவு - செலவுத்திட்ட நடவடிக்கைகளைக் கையாள்வதில் மிக மோசமான முகாமைத்துவம் ஆகியன இலங்கையின் பொருளாதாரத்தைப் பெரும் ஆபத்து ஏது நிலைக்குள் தள்ளியிருக்கின்றன என்பதை சர்வதேச நாணய நிதியம் வெளிப்படையாகப் போட்டுடைத்திருக்கின்றது.

சர்வதேசப் பொருளாதாரக் குழப்பங்கள், நிதிநிலைக் கூற்றுப் பலவீனங்கள், உயர் பணவீக்கம், வெளி நிதியிடல்களால் நேரும் அழுத்தங்கள் ஆகிய நெருக்கடிகள் ஒன்று சேர்ந்து இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மையை மோசமான ஆபத்துக்குள் தள்ளியிருக்கின்றன என சர்வதேச நாணய நிதியத்தின் இயக்குநர்கள் தமது வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

கண்மண் தெரியாமல் அதிகரித்திருக்கும் விலைவாசி ஏற்றம், வீணாகும் பொதுச் செலவினங்கள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தி, நிதி முகாமைத்துவக் கண்காணிப்பை இறுக்குவதற்காக உரிய சீர்திருத்தங்களைக் கொண்டுவந்து, நாட்டின் நாணயம் மீதான அழுத்தத்தை நீக்க வழிசெய்யுமாறும் நாணய நிதியம் இலங்கை அரசைக் கோரியிருக்கின்றது.

ஆனால் இந்த வற்புறுத்தல்களும், வழிகாட்டல்களும் இலங்கை ஆட்சி நிர்வாகத்தின் காதுகளில் ஏறுமா என்பதே ஒரே கேள்வியாகும்.

ஊழல், மோசடிகள், முறைகேடுகள், முறையற்ற பொருளாதாரக் கொள்கைகள், வீண் செலவினங்கள் என்று நாட்டின் வளம், தவறான ஆட்சி நிர்வாக முறையால் விரயமாகிக் கொண்டிருக்கின்றது.

மறுபுறம் பௌத்த - சிங்களப் பேரினவாதத் திமிரில் சிக்கிக் கிடக்கும் ஆட்சித் தலைமை, சிறுபான்மையினரை அடக்கித் தனது மேலாதிக்க மேலாண்மையை நிலைநிறுத்துவதற்காகக் கொடூர - குரூர - போர் வெறித் தீவிரத்தில் முனைப்பாக உள்ளது. அதன் காரணமாக அது, நாட்டின் முழு வளத்தையும் போரின் பேரழிவுகளுக்குக் கொட்டிக்கொடுத்து முழு நாட்டையுமே குட்டிச்சுவராக்கி நிற்கின்றது.

நாட்டின் நிதி நிலைமை மிக மோசமாக இருக்க, 'மஹிந்த சிந்தனை' அரசு மட்டும் தன்பாட்டுக்கு - டாம்பீகமாக - உள் கட்டுமானத் திட்டங்களை முன்னெடுப்பதற்காகப் பெரும் தொகை நிதியைத் திரட்டி செலவிடும் உத்தேசம் பற்றி அறிவித்து வருகின்றது.

இத்தகைய செலவினப் போக்கு மோசமான விளைவுகளை - பொருளாதாரப் போக்கில் விபரீதங்களை - ஏற்படுத்தும் என்று நாணய நிதியம், இலங்கை பற்றிய தனது வருடாந்தக் கண்காணிப்பு அறிக்கையில் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

இதேசமயம், இரண்டு வருட காலத்தில் திருப்பிச் செலுத்தும் கடப்பாட்டுடன் 30 கோடி அமெரிக்க டொலரை (சுமார் 3 ஆயிரத்து 300 கோடி ரூபாவை) 'சிண்டிக்கேட்' முறைக் கடனாகவும், சர்வதேச வர்த்தக வங்கிகளிடமிருந்து 15 கோடி அமெரிக்க டொலரை (சுமார் 1600 கோடி ரூபாவை) வர்த்தகக் கடனாகவும் பெறும் எத்தனத்தில் இலங்கை அரசு உள்ளது.

இவ்வாறான குறுகிய காலக்கடனை, வர்த்தக வங்கிகள் போன்ற தரப்புகளிடமிருந்து உயர் வட்டிக்கு இலங்கை வாங்குவது, கடனைத் திருப்பி அடைக்க முடியாத 'வங்குரோத்து' நிலைக்கு நாட்டைத் தள்ளும் என்றும் சர்வதேச நாணய நிதியம் எச்சரித்திருக்கின்றது.

ஏற்கனவே நாட்டின் பொருளாதாரம் படுத்தே விட்டது என்பதை அந்த நிதியம் சுட்டிக்காட்டத் தவறவே இல்லை. 2007 இல் 6.8 வீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி, 2008 இல் 6.1 வீதமாகவும், 2009 இல் அது 5.8 ஆகவும் வீழும் என்பது எதிர்பார்க்கப்பட்டதே.

இந்த ஆட்சி முறைமையின் அடிப்படைச் சிந்தனைப் போக்கில், மாற்றம் ஏற்படாதவிடத்து, பொருளாதாரச் சீர்திருத்தம் என்பது இங்கு சித்திக்கப் போவதில்லை என்பது உறுதி.

---

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற

# அமெரிக்காவின் நிலைப்பாட்டால் இலங்கைச் செய்திகள் அனைத்துலக ஊடகங்களில் முக்கியத்துவம் பெறுவதில்லை

### பேராசிரியர் பீற்றர் ஷோல்க் சொல்கிறார்

பேர்லின், நவ.4

அனைத்துலக ஊடகங்களில் இலங்கைச் செய்திகள் முக்கிய இடத்தைப் பெறாதமைக்கு அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற நிலைப்பாடே காரணம்.



இவ்வாறு தெரிவித்திருக்கிறார் சுவீடனின் உப்சலா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பீற்றர் ஷோக்.

உல்லாசப் பயணிகளின் சொர்க்கமாக விளங்கும் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் என்னும் தலைப்பில் ஜேர்மனியில் உள்ள சுட் காட் நகரில் நடைபெற்ற விவாத அரங்க ஒன்றில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜேர்மனியின் பிரபல அரசியல் கட்சியான சமூக ஜனநாயகக் கட்சியின் பல்கலைக்கழக மாணவர்களுக்கான இளையோர் அமைப்பு (Jusos) இந்த விவாத அரங்கினை ஏற்பாடு செய்திருந்தது.

ஹொஹென்ஹெய்ம் பல்கலைக் கழகத்தின் சார்பில் செல்வி துஷ்யந்தி மனோகரன் ஒழுங்கு செய்திருந்த இந்த அரங்கினை டாக்டர் திருமதி கெல்மன் இராஜநாயகம் நெறிப்படுத்தினார்.

இதில் சிறப்புப் பேச்சாளர்களாக பிரான்ஸ் மனித உரிமைகள் மையத்தைச் சேர்ந்த எஸ்.வி.கிருபாகரன், பேராசிரியர் பீற்றர் ஷோல்க் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பேராசிரியர் பீற்றர் ஷோக் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியவை வருமாறு:-

பெண்கள் மீதான பாலியல் வன்முறை மிகவும் கொடுமையானது. இலங்கையிலும் பெரும் எண்ணிக்கையான பெண்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அனைத்துலக சட்டப்படி பாலியல் வன்முறை என்பது சித்திரவதை. ஆனால் இலங்கையில் இத்தகைய குற்றவாளிகள் ஒருபோதும் சட்டத்தின்முன் நிறுத்தப்பட வில்லை - என்றார்.

80களில் அனைத்துலக ஊடகங்களில் இலங்கைச் செய்திகள் முக்கிய இடத்தைப் பெற்றன. தற்போது ஏன் அது அதிகம் கண்டுகொள்ளப்பட வில்லை எனக் கேள்வி ஒன்று அந்த விவாத அரங்கில் எழுப்பப்பட்டது. அதற்குக் காரணம் அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற நிலைப்பாடுதான் எனப் பேராசிரியர் பீற்றர் ஷோக் பதிலளித்தார்.

இந்த விவாத அரங்கில் உரையாற்றிய பிரான்ஸ் மனித உரிமைகள் மையத்தைச் சேர்ந்த எஸ்.வி.கிருபாகரன் தெரிவித்தவை வருமாறு:-

இடம்பெயர்ந்த வன்னி மக்களின் நிலை மிகவும் மோசமாகவுள்ளது. கடந்த சில வாரங்களாக மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டு வீச்சுக்கள் நடைபெறுகின்றன. இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 50 ஆயிரத்தை தாண்டியுள்ளது. இவர்களுக்கான உணவு வழங்கல் இல்லை. தற்போது மழைகாலம், ஒதுங்க இடமில்லை. ஒரேயொரு நிறுவனம் மட்டுமே இவர்களுக்காக உதவுவதற்கு அங்கு உள்ளது.

ஒருபுறம் மனித உரிமைகள் மதிக்கப்படுவதில்லை. மறுபுறம் பொருளாதார மையங்கள் அழிக்கப்படுகின்றன. இலங்கையில் 2 ஆயிரம் வருடகால வரலாறுடைய தமிழர்கள் குறிவைத்து அழிக்கப்படுகின்றமை இன அழிப்பே - என்றார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக பல்வேறு கேள்விகள் அங்கு எழுப்பப்பட்டன. இவற்றுக்குப் பேச்சாளர்கள் விடையளித்தனர்.

இந்த விவாத அரங்கில் டென்மார்க், இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளிலிருந்தும் ஊடகவியலாளர்களும், அரசியல் ஈடுபாடுடையவர்களும் கலந்துகொண்டனர். (50)

## ஊர்காவற்றுறை அன்ரனிஸ் கல்லூரியில் போதிய கட்டட வசதிகள் இல்லை

### இதனால் மாணவர்களின் கற்றலில் பாதிப்பு

ஊர்காவற்றுறை,நவ.4

ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரியில் போதிய வகுப்பறை வசதிகள் இல்லை. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள வகுப்பறைக் கட்டடங்களும் மிகவும் பழைமை வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. இதனால் நவீன கற்றல் வசதிகளின்றி மாணவர்கள் கற்கவேண்டிய நிலையில் உள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் அருட்திரு.ஜே.ஏ.ஜேசுதாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் இவ்விடயம் பற்றி ஆராயப்பட்டது.

'1ஏபி' தரப் பாடசாலையன இக் கல்லூரியில் சுமார் 500 வரையான மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். அநேகமான மாணவர்கள் விடுதியில் தங்கியிருந்தே கல்வி பயின்று வருகின்றனர்.

எனினும் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப போதிய வகுப்பறைக் கட்டடங்கள் இல்லை. இதனால் பொதுமண்டபத்தில் தற்காலிக வகுப்பறைகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. பாடசாலை நிகழ்வுகளைப் பொது மண்டபத்தில் நடத்தும் சந்தர்ப்பங்களில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு இடை யூறு ஏற்படுகின்றது.

பல வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடங்களே இன்றும் பயன்பாட்டில் உள்ளன. இதுவரை மேலதிக வகுப்பறைகள் அமைக்கப்படவில்லை.

எனவே அரச உயர் அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு போதிய வகுப்பறைக் கட்டடங்களை அமைத்துத் தருமாறு கோருவதெனப் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (202-127)

## ஆண்டு நிறைவு விழாவும் சஞ்சிகை வெளியீடும்

தாவடி,நவ.4

யாழ்.இந்துக் கல்லூரி சேவைக் கழகத்தின் 17ஆம் ஆண்டு நிறைவு விழாவும், ''மனிதம்'' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

செல்வன் ம.சிவஜீவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் யாழ். மேற்றரக் கிளை பிரதம முகாமையாளர் ஆர்.ஜெயேந்திரா பிரதம விருந்தினராகவும், யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர் லோ.துஷிகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

முன்னாள் உப அதிபர் பொ.மகேஸ்வரன் மலரை வெளியிட்டு வைக்க, ஆசிரியர் வா.சிவராசா மதிப்பீட்டு உரையினை நிகழ்த்தவுள்ளார்.

(202-149)

## நவாலி சென்.பீற்றர் தேவாலயத்துக்கு புதிய பங்குத்தந்தை

நவாலி, நவ.4

நவாலி சென்.பீற்றர் தேவாலயத்துக்கு பங்குத் தந்தையாக யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் பல வருடங்கள் பணியாற்றிய அருட்தந்தை ஜோன்மௌலீஸ் இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கு பணியாற்றிய அருட்தந்தை ஆர்.எக்ஸ்.நேசராசா குருநகர் புனித யாகப்பர் தேவாலயத்துக்கு' இடமாற்றம் பெற்றுள்ளார்.

இப்பகுதி மக்கள் அருட்தந்தை நேசராசாவின் சேவையைப் பாராட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை பிரியாவிடை நடத்தவுள்ளனர்.

(202-100)

### நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 20 | 05.11.2008 |
| | புதன்கிழமை |
| திதி: | ஸப்தமி |
| | பி.ப.05.17 வரை |
| நட்சத்திரம் : | உத்தராடம் |
| | மு.ப.11.05 வரை |
| சுபநேரம் : | 04.35 - 06.05 |
| ராகுகாலம் : | 12.05 - 01.35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதிய மழை பெய்யாமையால் நெற்பயிர்கள் கருகும் நிலையில்

யாழ்ப்பாணம்,நவ.4

போதிய மழைவீழ்ச்சி இன்மையால் குடாநாட்டு வயல் நிலங்களில் விதைக்கப்பட்ட நெற்பயிர்கள் கருகி அழியும் நிலை ஏற்பட்டுவிடுமோ என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த மாத இறுதிப் பகுதியில் பெய்த கடும் மழையை அடுத்து விவசாயிகள் மும்முரமாகத் தமது வயல்களில் நெல்லை விதைத்தனர். பயிர்களும் நன்றாக முளைத்துள்ளன.

நெற்பயிர்கள் முளைத்துள்ள விவசாயிகள் மழையை எதிர்பார்த்து வானத் தைப் பார்த்தவண்ணம் உள்ளனர். விதைப்புக் காலங்களில் பெய்த மழை யைத் தொடர்ந்து, பின்னர் மழை பெய்ய வில்லை.

இன்னும் சில தினங்களுக்குள் மழை பெய்யாவிட்டால் நெற்பயிர் கள் கருகி அழியும் அபாயநிலை தோன்றியுள்ளதாக விவசாயிகள் பெரிதும் அஞ்சுகின்றனர்.

(203-236-224)

## அரச வங்கி ஊழியர்களுக்கு ஜனவரி முதல் ஓய்வூதியத் திட்டம்

கொழும்பு, நவ.4

அரச வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஓய்வூதியத் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது.

அரசாங்க வங்கிகளின் தலைவர்களை நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் சந்தித்தபோது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

உழைக்கும் சமுதாயத்தின் உரிமைகளை அரசாங்கம் ஒருபோதும் பறித்துவிடாது. இந்த ஓய்வூதியத் திட்டத்துக்காக அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி அரசாங்க வங்கி ஊழியர் ஓய்வூதிய நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நிதியத்தில் சேர்ந்து 10 வருட அங்கத்துவத்தைப் பூர்த்தி செய்தவர்கள் ஓய்வூதியத் திட்டத்தின் அனுகூலங்களைப் பெறத் தகுதி பெறுவார்கள் என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

(202)

# அணியின் நலனைக் கருத்தில் கொண்டே 18 ஆண்டுகள் கடுமையாக உழைத்தேன்!

## ஓய்வு பெற்ற பின்னர் கும்ப்ளே தெரிவிப்பு



மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியில் தாடையில் ஏற்பட்ட காயத்தையும் பொருட்படுத்தாது 'பண்டேஜ்' அணிந்து விளையாடும் கும்ப்ளே...

டில்லி, நவ.4

கிரிக்கெட் வாழ்க்கை முழுவதும் தாம் சுயநலமில்லாமல் அணியின் நலனை முன் வைத்தே விளையாடியுள்ளார் என சர்வதேச போட்டியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள இந்திய அணித் தலைவர் அனில் கும்ப்ளே கூறியுள்ளார்.

ஓய்வு பெறுகின்றமை பற்றி செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் கூறியவை வருமாறு:-

''ஓய்வு பெறும் முடிவை எடுப்பது கடினமாக இருக்கவில்லை. 18 ஆண்டுகள் விளையாடிய பிறகு விலகுவது என்பது கடினமானதுதான். என்றாலும், என்னுடைய உடல் ஓய்வு பெறும் முடிவை எடுக்க வேண்டும் என்று கூறிக் கொண்டே வந்தது.

மேலும் என்னால் இயன்ற அளவுக்கு சிறப்பாகப் பந்து வீச முடியவில்லை. நேற்று முன்தினம்தான் ஓய்வு பெறுவது பற்றித் திடீரென முடிவு செய்தேன். கையிலேற்பட்ட காயம் காரணமாக எப்படியும் நாக்பூர் டெஸ்ட்டில் விளையாட முடியாது. எனவே ஓய்வு பெறத் தீர்மானித்தேன்.

டில்லி மைதானம் எனக்கு மிகவும் விசேடமானது. இங்கு ஓய்வு பெறுவதை அறிவிப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் நூறு சதவிகித ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருக்கிறேன். நிறைய விமர்சனங்களைச் சந்தித்திருக்கிறேன்.

ஆனால் என்னை நானே ஊக்கப்படுத்திக் கொண்டேன். சுயநலமில்லாமல் அணியின் நலனை முன்வைத்து ஆடியிருக்கிறேன். அவ்வாறே நான் ரசிகர்களால் நினைவில் கொள்ளப்பட விரும்புகிறேன்''

எனது கிரிக்கெட் வாழ்க்கையில் பல்வேறு நிகழ்வுகள் நினைவிலிருந்து என்றும் நீங்கா. 1990ஆம் ஆண்டு அசாருதீன் தலைமையில் முதலாவது தொடரில் பங்கேற்றமை, கோட்லாவில் ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டுகளையும் வீழ்த்தியமை போன்று நிறைய உள்ளன. குறிப்பாக, டில்லியை என்னால் மறக்கமுடியாது. வீரராகவும், அணியாகவும் அற்புதமான புள்ளி விவரங்களை இங்கு பதிவு செய்துள்ளேன்.

சக வீரர்களிடம் ஓய்வு பெறுவதைத் தெரிவித்தபோது ஒவ்வொருவரும் நான் கௌரவப்படும்விதமான வாழ்த்துகளைத் தெரிவித்தனர். சச்சின் டெண்டுல்கர், ராகுல் டிராவிட், லக்ஷ்மன், ஷேவாக், இளம் வீரர்கள், முன்னாள் தலைவர் அசாருதீன் போன்ற முன்னிலை வீரர்களுடன் விளையாடியுள்ளேன்.

எனது திறமை குறித்து சர்ச்சை எழுந்தபோதெல்லாம் நான் கவலைப்பட்டமை கிடையாது. அதற்கு எப்போதும், ஆட்டம் மூலமே பதில் சொல்ல முயல்வேன். 18 ஆண்டுகளுக்கு முன்பே எனது பந்துவீச்சைக் குறை சொன்னார்கள். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இத் தொடரில் விளையாடமுடியாமல் போயிருந்தால் அதை எனது கிரிக்கெட் வாழ்க்கையில் அடைந்த ஏமாற்றமாகவே கருதியிருப்பேன்.

அணியுடன் நாக்பூர் செல்லமாட்டேன். ஆனால் போட்டியின்போது வீரர்களுடன் இருப்பேன். அப்போட்டி சௌரவ் கங்குலிக்கு கடைசிப் போட்டியாகியுள்ளது. அவருக்கும், சச்சின் டெண்டுல்கர், லக்ஷ்மன் ஆகியோரது சிறப்புகளுக்காகவும் இந்திய கிரிக்கெட் சபை நடத்தும் பாராட்டு விழாவில் கலந்து கொள்வேன் என்றார் கும்ப்ளே.



ஏற்கனவே ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்ற கும்ளே, நேற்று முன்தினம் டெஸ்ட் போட்டியில் இருந்தும் ஓய்வு பெறுகிறார் என அறிவித்தார். அவரைத் ஏந்திவரும் சக வீரர்கள்...

# கும்ப்ளேயின் முடிவை கேட்டதும் அழுதார்களாம் சக வீரர்கள்!

புதுடில்லி, நவ. 04

கும்ப்ளேயின் திடீர் ஓய்வைக் கேட்டு சக இந்திய வீரர்கள் அழுதனர் என்று இந்திய தேர்வுக்குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

''கிரிக்கெட் அரங்கில் கும்ப்ளேயின் போராடும் குணத்தை முன்னாள் வீரர்கள் வெகுவாகப் புகழ்ந்துள்ளனர். இவரது ஓய்வைக் கேட்டு சக இந்திய வீரர்கள் அழுதுவிட்டனர்'' என்று ஸ்ரீகாந்த் கூறினார்.

''கும்ப்ளே தனது ஓய்வு பெறும் முடிவை என்னிடம் சொன்னார். அப்போது சக இந்திய வீரர்கள் உணர்ச்சிவசப்பட்டு அழுதனர். அவர்களது பெயரைச் சொல்ல விரும்பவில்லை. கும்ப்ளே ஒரு சகாப்தம்'' என்றார் ஸ்ரீகாந்த்.

இவரது ஓய்வு குறித்து இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் குறிப்பிடுகையில்,

இந்திய கிரிக்கெட்டின் மிகச் சிறந்த தூதராக கும்ப்ளே திகழ்கிறார். சர்ச்சைகளில் சிக்காதவர். கிரிக்கெட் களத்தில் விட்டுக் கொடுக்காமல் போராடும் இவர், உண்மையான 'ஜென்டில்மேன்' வீரர். இவரை ஓய்வு பெறும்படி நிர்ப்பந்தம் அளிக்கப்படவில்லை.

முன்னாள் இந்திய அணித் தலைவர் ரவி சாஸ்திரி கூறுகையில், இந்திய அணிக்கு சோகமான நாள் என்று தான் சொல்ல வேண்டும். ஆனாலும் சரியான நேரத்தில் ஓய்வு பெறும் முடிவை எடுத்துள்ளார் கும்ப்ளே. இவரது ஓய்வு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் - என்றார்.

கவாஸ்கர் குறிப்பிடுகையில்- ''கும்ப்ளே மனதளவில் சோர்ந்துவிட்டார். அதனால் தான் ஓய்வு பெறும் முடிவை எடுத்துள்ளார். இவரது இடத்தை அமித் மிஸ்ரா நிரப்புவார்'' என்றார்.

''கும்ளேயுடன் சேர்ந்து விளையாடியது மிகப் பெரிய கௌரவம். அடுத்த தலைமுறை வீரர்களுக்கு ஊக்க சக்தியாகத் திகழ்கிறார். மேற்கிந்தியத் தீவுகளில் நடந்த போட்டியில் தாடையில் ஏற்பட்ட காயத்தை பொருட்படுத்தாது 'பண்டேஜ்' அணிந்து பந்துவீசியமையை என்னால் எப்போதும் மறக்க முடியாது'' என்றார் டெண்டுல்கர்,

கங்குலி கூறுகையில்- ''கும்ப்ளே இடத்தை எளிதில் நிரப்ப முடியாது. சுண்டு விரல் காயத்துக்கு 11 தையல் போட்ட நிலையில் பந்துவீசியமை, ஓவல் டெஸ்டில் சதம் அடித்தமை போன்றவற்றை மறக்க முடியாது'' என்றார்.

# அடுத்த டெஸ்டுக்கு தலைவர் டோனி

புதுடெல்லி, நவ.4

கும்ப்ளே தலைவர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றமையைத் தொடர்ந்து நாக்பூரில் எதிர்வரும் 6ஆம் திகதி தொடங்கும் அவுஸ்திரேலியாவுக்கெதிரான கடைசி டெஸ்ட் போட்டிக்கான இந்தீய அணியின் தலைமைப் பொறுப்பை டோனி வகிப்பார் என்று தேர்வுக் குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் அறிவித்துள்ளார்.

இந்த மாதக் கடைசியில் தொடங்கும் இங்கிலாந்துக்கு எதிரான 7 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடருக்கும் டோனி தலைவராக நீடிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்துக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டிகளுக்கான தலைவர் யார் என்பது போட்டி தொடங்கும் முன்பு முடிவு செய்யப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.




# கில்கிறிஸ்டின் திடீர் ஓய்வு ஏன்?

## சுயசரிதைப் புத்தகத்தில் அவர் விளக்கம்!

சிட்னி, நவ.04

அவுஸ்திரேலியாவின் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான அடம் கில்கிறிஸ்ட் திடீரென சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றமைக்கு சிட்னி டெஸ்ட் பிரச்சினையே காரணம் என்ற அதிர்ச்சிகரமான தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

முரண்பாடுகளுக்கு மத்தியில் அவுஸ்திரேலியாவின் சிட்னியில் இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே டெஸ்ட் போட்டி நடந்தது. அந்தப் போட்டி அவுஸ்திரேலிய அணிக்குப் பல்வேறு வகையில் இடையூறை அளித்தது. இதில் பெரிய அடி கில்கிறிஸ்டின் திடீர் ஓய்வு தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவுக்கு எதிரான அந்தத் தொடரின் போது, கில்கிறிஸ்டின் விக்கெட் காப்பு குறித்து விமர்சகர்கள் கேள்வி எழுப்பினர். இதன் எதிரொலியாகவே கில்கிறிஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற முடிவு செய்தார் எனத் தெரிய வருகிறது. சமீபத்தில் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற கில்கிறிஸ்ட் தனது கிரிக்கெட் அனுபவங்களைத் தொகுத்து ட்ரூ கலர்ஸ் என்ற பெயரில் சுயசரிதை புத்தகத்தை எழுதியிருக்கின்றமை தெரிந்ததே. இதில் மேற்கண்ட தகவல்கள் தெரிய வந்துள்ளன.

நான் அப்போது ஓய்வு முடிவு பற்றி சிந்திக்கக் கூட இல்லை. ஆனால் எனது விளையாட்டு உணர்வு குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. மேல் மட்ட அளவில் பலத்த விமர்சனம் கிளம்பியதால் நான் அதிக உணர்ச்சி வசப்பட்டேன். சிட்னி டெஸ்ட் பிரச்சினையால் நான் ஓய்வு பெற வேண்டியது அவசியமாயிற்று என்று கில்கிறிஸ்ட் அந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், மேற்கிந்தியத் தீவில் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டிக்குப் பிறகு ஒரு நாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவது என்றும், டெ்ஸ்ட் போட்டியில் பிரச்சினை ஏற்பட்டு தனது மனது பாதிக்காத வகையில் தொடர்ந்து ஆடுவது என்று முதலில் முடிவு செய்திருந்தேன் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.



தவிர எனது சகோதரி குடும்பத்தினர் இது தான் எனது கடைசி டெஸ்ட் என்று கருதி டிக்கெட்டுகளை முன்பதிவு செய்து வைத்திருந்தனர். ஆனால் நான் இது குறித்து முடிவெடுக்கவில்லை.

ஒரு வழியாக ஒரு நாள் போட்டியில் இருந்து ஓய்வு பெற நான் முடிவு செய்தேன். ஆனால் டெஸ்டில் இருந்து ஓய்வு பெற நான் முடிவு செய்யவில்லை. இதனால் கடைசி டெஸ்ட் நடந்த அடிலெய்டிற்கு வரும்படி எனது மனைவியைக் கூட நான் கேட்டுக் கொள்ளவில்லை என்றும் அடம் குறிப்பிட்டிருக்கிறார்.

அடிலெய்ட் போட்டியில் நாங்கள் நாணயச் சுழற்சியில் தோல்வியடைந்தோம். இதனால் நாள் முழுவதும் களத்தடுப்புச் செய்ய வேண்டியதாயிற்று. அந்தப் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் மற்றொரு சதம் அடித்தார். அந்தப் போட்டியில் என்னால் முழு அளவில் கவனம் செலுத்த இயலவில்லை. உண்மையிலேயே ஒரு நாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதா? அல்லது இரண்டிலும் இருந்து ஓய்வு பெறுவதா? என்பது குறித்து என்னை நானே கேட்டுக்கொண்டேன் என்றும் கில்கிறிஸ்ட் அந்தப் புத்தகத்தில் தெரிவித்திருக்கிறார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் அடம் கில்கிறிஸ்ட் ஐ.பி.எல். போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்காக ஆடிவந்தார். இந்த அணியின் தொடர் தோல்வியால் வி.வி.எஸ். லக்ஷ்மன் தலைமைப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக பிற்பகுதியில் கில்கிறிஸ்ட் தலைவராக நியமிக்கப்பட்டார்.

# போர்முலா - 1 கார்ப் பந்தயத்தில் பிரிட்டன் வீரர் புதிய சாதனை!

கார் பந்தயங்களில் மிகவும் பிரபலமானது 'போர்முலா 1' போட்டி ஆகும். இந்த ஆண்டுக்கான 'போர்முலா 1' கார்ப் பந்தயம் 18 சுற்றுகளைக் கொண்டது.

இந்தப் போட்டியின் 18 ஆவது மற்றும் கடைசிச் சுற்றுப் பந்தயம் பிரேஸில் நாட்டில் உள்ள சாபாவ்லோ நகரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

'போர்முலா 1' போட்டியில் இங்கிலாந்து வீரர் ஹமில்டன் பட்டம் பெறுவாரா, பிரேஸில் வீரர் பெலிப் மாசா பட்டம் பெறுவாரா என்ற பரபரப்பு இருந்தது. ஏனெனில், இருவருக்குமிடையே 7 புள்ளிகள் மட்டுமே வித்தியாசம் இருந்தது.

18 சுற்றுகள் முடிவில் ஹமில்டன் 98 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்து சம்பியன் பட்டம் பெற்றார். இளம் வயதில் 'போர்முலா 1' பந்தயத்தில் சம்பியன் பட்டம் பெற்றவர் [illegible] அவர் படைத்தார். அவருக்கு 23 வயதாகிறது. இதற்கு முன்பு 2005ஆம் ஆண்டு ஸ்பெயின் வீரர் அலோன்சா 24 வயதில் 'போர்முலா 1' போட்டியில் சம்பியன் பட்டம் பெற்றிருந்தார்.

ஹமில்டன் அவுஸ்திரேலியா, மொனாக்கோ, இங்கிலாந்து, ஜேர்மனி, சீனா ஆகிய இடங்களில் நடந்த போட்டிகளில் வெற்றி பெற்றார்.

பெலிப் மாசா 97 புள்ளிகளைப் பெற்று 2ஆவது இடத்தைப் பிடித்தார். அவர் பகரைன், துருக்கி, பிரான்ஸ், ஐரோப்பிய கிராண்ட்பீரி, பெல்ஜியம், பிரேஸில் ஆகிய இடங்களில் நடைபெற்ற 6 போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தார்.

சிமிரெய்க்கோனன் (பின்லாந்து) 75 புள்ளிகள் பெற்று 3ஆவது இடத்தையும், ராபர்ட் குபிகா (போலந்து) 4ஆவது இடத்தையும், முன்னாள் சம்பியன் அலோன்சா (ஸ்பெயின்) 5ஆவது இடத்தையும் பிடித்தனர்.

அணிகள் பிரிவில் பெராரி 172 புள்ளிகள் பெற்று முதலிடத்தைப் பிடித்தது. மெக்லரன்



(151 புள்ளிகள்) 2ஆவது இடத்தையும், பி.எம். டபிள் சவ்பேர் (135 புள்ளிகள்) 3ஆவது இடத்தையும் பிடித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றுடன் பூர்த்தியாகின்றது கந்தசஷ்டி விரதம் இம்முறை ஏழு நாள்கள் அனுஷ்டிக்கப்படும் வகையில் அமைகிறது

இன்று செவ்வாய்க்கிழமை இவ்வாண்டுக்கான கந்தசஷ்டி விரதம் பூர்த்தியாகிறது.

ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையை அடுத்து வருகின்ற பிரதமைத் திதியில் கந்தசஷ்டி விரதம் ஆரம்பமாகிறது என்ற விதிமுறைக்கமைய கடந்த ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதி ஆரம்பமான இவ்வாண்டுக்கான கந்தசஷ்டி விரதம், ஐப்பசி மாதத்து சஷ்டி திதியான இன்று செவ்வாய்க்கிழமை முடிவு பெறுகிறது. அந்தவகையில் இவ்வாண்டு கந்தசஷ்டி விரதம்ஏழு நாள்களாகஅனுஷ்டிக்கப்பட அமைந்துள்ளது.



கந்தசஷ்டி விரதத்தின் கடைசி நாளான இன்று முருகப்பெருமானின் திருக்கோயில்களில் சூரன்போர் உற்சவம் நடந்தேறுவதுடன் இவ்விரதம் முடிவுக்கு வருகிறது.

முருகப்பெருமான் உறையும் திருத்தலங்களில் இந்த கந்தசஷ்டி விரதம் பக்திபூர்வமாக சைவசமயிகளால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. ஆண்டாண்டு காலமாகச் சைவ மதத்தினரால் ஆசார சீலத்துடன் பக்தி சிரத்தையுடன் அனுஷ்டிக்கப்படும் இவ்விரதம் தனித்தன்மையும் தனிச்சிறப்பும் வாய்ந்த ஒன்று எனக் கூறுவதில் எள்ளளவும் தவறில்லை.

சைவசமயிகளால் பெரிதும் போற்றப்படுபனவும், சைவசமயம் சார்ந்த கருத்துகளை அதிகமாகக் கொண்டு விளங்குபவையுமான கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் ஆகியவற்றில் கந்தபுராணம் தத்துவக்கருத்துகளையும் வாழ்க்கை நெறிகளையும் நமக்குத் தெளிவுபடுத்தும் வகையில் கச்சியப்ப சிவாச்சாரியாரால் உருவாக்கி வழங்கப்பட்டிருக்கிறது.

கந்தபுராணத்தில் திருச்செந்தூரில் முருகன் தங்கியிருந்தவேளை வியாழ பகவான்மூலம் நாம் சூரனை அறிகிறோம்.

காசிபருக்கும் மாயைக்கும் தோன்றிய மூன்று ஆண் பிள்ளைகளுள் மூத்தவன் சூரன். அவனையடுத்தோர் சிங்கனும் தாரகனுமாவர். சூரனை ஆணவமலத்துக்கும், சிங்கனைக் கன்ம மலத்துக்கும் தாரகனை மாயா மலத்துக்கும் ஒப்பிடும் கந்தபுராணம், முருகனது கைவேலான ஞானசக்தி இம்மூன்று மலங்களையும் அழித்து அருள்வதாகக் குறிப்பிடுகிறது.

கதையம்சம், வாழ்க்கை அமைப்பு என்பவற்றின் அடிப்படையில் சூரன் வாழ்க்கையை நோக்கினால் அங்கு எண்ணற்ற பயன்மிக்க நெறிகளும் கொள்கைச் சிறப்புக்களும் பொதிந்திருப்பதை உணர இயலும்.

நன்றி மறந்த பாவம் ஒருவனை அழிக்கும் என்பது கந்தபுராணத்தில் சூரன் மூலம் நாம் அறியும் ஓர் உண்மையாகும். கந்தபுராணத்தில் செய்நன்றி கொன்ற சூரனே 'வரம்பில் ஆற்றல் பெற்று உய்ந்தான்' எனக் கூறப்படுவதிலிருந்து பாவம் செய்தவர்கள்கூட முருகன் கருணைபெற்றால் சூரன் பெருமை பெற்றமை போன்று சிறப்புற வாழலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

தொலையாது போர்செய்த சூரன், தம்பியரை, புத்திரரை, உறவினரை படைகளை என்று போரில் இழந்த நிலையிலும் தன் ஆணவம் வலிகெடாது நின்றான். அந்த நிலையில்கூட முருகப்பெருமான் அவனுக்குக் காட்சி கொடுத்தருளினார்.

அந்தநிலையில், முருகனைக் கண்ணால் காணும் பாக்கியம் சூரனுக்குக் கிட்டியது. முருகப்பெருமானின் நல்லுணர்வை, தெய்வீக மனதை, ஞானத்தை அவனால் பெற முடிந்தது. அதனால் அவனது நிலையில் மாற்றம் உருவாயிற்று. சக்கையாக இருந்த அவன் வாழ்வு சாறாக மாற்றமுற்றது. அர்த்தமுள்ளதாகியது.

ஐப்பசி மாதத்துச் சஷ்டித் திதியன்று முருகப்பெருமானிடம் போரில் தோல்வி கண்ட சூரபத்மன் சேவலும் மயிலுமாக முருகனை அழகு செய்து தாக்கத் தொடங்கினான். அது அவன் செய்த தவமேயாகும்.

நாம் முருகப்பெருமானை வணங்கும்போது அவர் ஏறியமர்ந்துள்ள மயிலையும் சேர்த்தே வணங்குகிறோம். சேவலும் மயிலும் போற்றி என்று முருகப்பெருமானை நாம் போற்றித் துதிக்கும்போது அது சூரனையே குறிக்கிறது என்பதால் தீய சூரனும் தீமை அகன்று முருகனுடன் இணைந்ததால் வாழ்த்தும் பெருமையும், முருகப்பெருமானின் அடியவர்களால் போற்றித் துதிக்கப்படும் பேறும் சூரனுக்குக் கிட்டியுள்ளனவல்லவா?

சூரன் வலிகெட்டு நிலைமாறினானே தவிர அவன் அழியாப் பெருவாழ்வு பெற்றான்.

இத்துணைச் சிறப்புப்பெற்ற இந்தச் சூரசங்கார உற்சவம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பிரசித்திபெற்ற முருகன் திருத்தலங்களான நல்லூர் கந்தசுவாமி கோயில், செல்வச்சந்நிதி முருகன் கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் மற்றும் ஊர்தோறும் அமைந்துள்ள முருகன் திருத்தலங்களிலும் ஆண்டாண்டு காலமாக வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

சூரசங்கார உற்சவத்தை அடுத்து முடிவுறும் கந்தசஷ்டி விரதத்தையடுத்து, முருகன் அருள்வேண்டி உண்ணா நோன்பு அனுஷ்டித்த முருக பக்தர்கள், சூரசங்கார உற்சவத்துக்கு மறுநாள் காலையில் சூரிய உதயத்தின்போது தமது விரதத்தை முடித்துக் கொள்ளும் விதத்தில் பாரணை செய்து தமது விரதத்தைப் பூர்த்திசெய்து கொள்வது வழக்கம்.

## வேலவனின் போர் இன்று

தையலார் வீடு எங்கும்
தனித்திருந்து கவசம் ஓத
மை விழி மாதர் கண்ணால்
மழையெனக் கண்ணீர் மல்க
பையவே ஆண்கள் வேறாய்
பரிந்தவன் புகழைப் பாட
ஐயனே அபயம் என்று
அடியவர் அழுது வேண்ட
தூயபேர் மணி ஒலிக்க
துலங்கிட தூப தீபம்
கையிலே வேலைத் தாங்கி
கனக மா மயில் மீதேறி
போயிவன் புரியும் போரால்
புவிமிசை அமைதி பூக்கும்
சேயிவன் பெருமை செப்ப
செந்தமிழினில் வார்த்தையேது?

- விகடகவி.

# தேசிய மட்டத்தில் வெல்லும் இளந்தலைமுறையினால் சர்வதேச ரீதியிலும் சாதனை படைக்க முடியும்

## யாழ்.அரச அதிபர் கூறுகிறார்

நல்லூர்,நவ.4

தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொண்டு சாதனைகளை ஏற்படுத்தி எமது பிரதேசத்திற்குப் பெருமை சேர்க்கும் இளந்தலைமுறையினால் சர்வதேச ரீதியிலும் கூட புகழை ஈட்டித்தரமுடியும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் மாவட்ட ரீதியிலான தடகளப் போட்டிகளின் இறுதி நிகழ்வு யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஜே.எவ்.ரூபசிங்கம் தலைமையில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற் றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து அரசாங்க அதிபர் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகள் மட்டம், பிரதேச செயலக மட்டம், மாவட்ட செயலக மட்டம் ஆகியவற்றில் போட்டிகள் நடைபெறுகின்றன.

எமது இளத்தலைமுறையினர் விளையாட்டுக்கள், உடற்பயிற்சிகளில் கலந்துகொண்டு நல்ல உடல் வளமும் உளவளமும் கொண்டவர்களாக உருவாகவேண்டும். இதற்குப் பொது நிறுவனங்கள் தமது பங்களிப்பை வழங்குவது அவசியம்.

எமது பிள்ளைகள் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக இங்கிருந்து தென்பகுதிக்குச் செல்லும்போது புதிய அனுபவங்களைப் பெறவும் தங்களது திறமைகளை அங்குள்ளவர்களுடன் பகிர்ந்துகொள்ளவும் வழி கிடைக்கும்.

இதன்மூலம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளமுடியும். பகைமையற்ற நட்புடன் கூடிய மனப்பாங்கை ஏற்படுத்தும் அம்சமாக விளையாட்டுத்துறை உள்ளது.

கல்வியுடன் விளையாட்டுகளிலும் பிள்ளைகளின் நாட்டம் செல்லவேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் விளையாட்டுத்துறையை வளப்படுத்தவேண்டிய அனைத்து உதவிகளையும் வழங்க மாவட்டச் செயலகம் தயாராகவே உள்ளது.

இளந்தலைமுறையினர் ஒழுக்கமும் கண்ணியமும் கடமையுணர்வும் கொண்டவர்களாகத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும் - என்றார்.

(203-111)

# கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.4

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான மாதாந்த கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(201)

* * *

யாழ்ப்பாணம், நவ.4

கோப்பாய்க் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோட்டக்கல்வி அலுவலர் கேட்டுள்ளார்.

(203)

# வேலணைப் பிரதேச சபையின் உள்ளூராட்சி விழா நாளை

## சிறப்பாகச் சேவையாற்றியோருக்கு விருதுகள்

மானிப்பாய்,நவ.4

தீவகம் தெற்கு வேலணைப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழா - 2008 நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணைப் பிரதேச சபையின் தேவா அரங்கில் நடைபெறவுள்ளது.

வேலணை பிரதேச சபை செயலாளர் கை.மகேந்திரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

18 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாகச் சேவையாற்றிய 5 ஊழியர்களுக்கு 'சிறந்த உள்ளூராட்சிச் சேவையாளன்' விருது வழங்கப்படவுள்ளது. அத்துடன் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

பொ.கருணாசேகரன், க.சண்முகம், இ.சுப்பிரமணியம், த.உதயகுமார், இ.பேரின்பநாதன் ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் அரச சேவையில் 40 வருடங்கள் பணியாற்றிய வேலணை பிரதேச சபை செயலாளர் கை.மகேந்திரலிங்கத்துக்கு 'சிறந்த நிர்வாக அதிகாரி' விருதும் இவ்விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது.

நயினாதீவு பிரதேச வளர்ச்சிக்காகவும் அபிவிருத்திக்காகவும் பயன்தரு மரங்களை உருவாக்கி நடுகை செய்து வரும் அலுவலர் இ.பேரின்பநாதன் 'பசுமையாளன்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

தீவகம் தெற்குப் பகுதியில் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாகச் சிறந்த ஊடகப் பணியாற்றி வரும் ஊடகவியலாளர்களான இ.சற்குருநாதன், என்.இராமச்சந்திரன் ஆகியோர் 'கலைச்சுடர்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், தீவக வலய கல்வி பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரீ.மீரா, சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி அதிகாரி சி.பகீரதன், ஆய்வு உத்தியோகத்தர் வி.பரமேஸ்வரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வேலணைப் பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஆ.திருநாவுக்கரசு, இலங்கை வங்கி ஊர்காவற்றுறை முகாமையாளர் கு.சிவஞானசுந்தரம் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(50-95)

# தேசிய இளைஞர் சேவைமன்ற அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,நவ.4

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு நிதியில் நிதி ஒதுக்கீடு எதுவும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சில திட்டங்களையும் பயிற்சிகளையும் மேற்கொள்வதில் போதிய நிதி வசதி இல்லை என்று கூறப்படுகிறது.

எனவே, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்ய எவராவது முன்வரவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

(203-111-236)



தமிழர் தாயகத்தில் இலங்கை அரச மேற்கொண்டு வரும் இனப்படுகொலை மற்றும் ஆட்கடத்தல்களைக் கண்டித்தும், உலக நாடுகள் இதற்கு உடன்நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக்கோரியும் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் கடந்த சனியன்று அவுஸ்திரேலிய இளையோர் அமைப்பினால் நடத்தப்பட்ட அமைதிப் பேரணியில் கலந்துகொண்டோரைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சொல்லிக்காட்டவா சோறு போட்டீர்கள்?"

**நல்லது.** மீண்டும் அந்தக் காலம் அரும்பியிருக்கிறது. ஈழத்தமிழர் நலனுக்காக ஒட்டு மொத்த தமிழகமுமே களம் இறங்கியிருக்கும் செய்திதான் அது. அம்மக்களின் நெடுங்காலப் போராட்டத்துக்கு ஆதரவாக ஆக்க பூர்வமாக என்ன செய்யப்போகிறோம் நாம் என்பதுதான் எம்முன் உள்ள கேள்வி.

என்னென்னவெல்லாம் செய்யப் போகிறோம் என்பதைக் காட்டிலும் என்னென்னவெல்லாம் செய்யக்கூடாது என்பதில் கவனத்தைக் குவித்தாக வேண்டிய வேளை இது. அது நாம் காலக்குதிரையை சற்று கழுத்தைத் திருப்ப அனுமதித்தால் மட்டுமே நடந்தேறக்கூடிய விடயம்.

முதலில், சமாதான மேடைகளில் பரிமாறப்பட இருப்பது ஈழத் தமிழர் குறித்ததான பிரச்சினை என்பது கவனத்துக்கு வருமேயானால்... இந்தத் தமிழர்களது பிரச்சினைகள் குறித்து எந்தெந்தத் தமிழரெல்லாம் கூடி விவாதிக்கப் போகிறார்கள் என்கிற வினாவும் கூட எழுந்தே தீரும். அதில் ஏ.கே.அந்தோனி தொடங்கி எம்.கே.நாராயணனில் தொடர்ந்து சிவசங்கர் மேனனில் வளர்ந்து இலங்கையில் இருக்கும் இந்தியப் பிரதிநிதி அலோக் பிரசாத் வரைக்கும் பலரும் இந்த மொழிக்குடும்பத்துக்குள் அடங்கி விட முடியாதவர்கள் என்பது பள்ளிச் சிறுவனுக்குக் கூட தெரியும். இவர்களெல்லாம் தமிழர்கள் குறித்து விவாதிக்கக் கூடாது என்பதில்லை. ஆனால், எவருடைய பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட இருக்கிறதோ அவர்களது தரப்பைச் சார்ந்த ஓரிருவராவது அதில் அடங்கியிருந்தால் இன்னும் கொஞ்சம் அது அர்த்தமுள்ளதாக இருக்குமே என்பதுதான் ஆதங்கம்.

எண்பதுகளின் மத்தியில் இதை சரிவர கணக்கில் கொள்ளாமல் ரொமேஷ் பண்டாரி என்கிற வெளியுறவு அதிகாரியை திம்பு பேச்சுவார்த்தையில் தலையிட வைத்ததன். விளைவு... அமைதிக்கு பதிலாக அனர்த்தத்தில் போய் முடிந்தது. பேச்சுவார்த்தையில் இருந்து ஒட்டுமொத்தமாக அனைத்து போராளிக் குழுக்களுமே வெளிநடப்பு செய்தனர். பொறுப்பற்ற அதிகாரியின் போக்கால் போராளிகள் வெளியேறியதை மத்திய அரசு புரிந்து கொள்ளாததால் அன்ரன் பாலசிங்கம், சத்தியேந்திரா, சந்திரகாசன் மூவரும்நாடுகடத்தப்பட்டனர்.அதையொட்டி தமிழகத்தில் எழுந்த போராட்டமும்... அதற்கு மத்திய அரசு வேறு வழியின்றி பணிந்ததும்... இன்னமும் நினைவில் நிற்கும் நினைவுகள்.

அடுத்து வந்த 'அகிம்சைப் படை' காலங்களில் தமிழரின் இனப் பிரச்சினையைக் கையாண்ட ஜே.என்.தீட்ஷித் ஆகட்டும் கல்கத் ஆகட்டும் தமிழ் குறித்தோ... தமிழர் குறித்தோ... "அ"னா, "ஆ"வன்னா கூட அறியாதவர்கள் என்பதும் அனைவரும் அறிந்த விடயம்.

இரண்டாவதாக, இலங்கையின் இராணுவத்தை ஸ்ரீலங்கா இராணுவம் என்றழைப்பதே யதார்த்தத்திற்குப் புறம்பான விஷயம் என்பதுதான். அதன் இராணுவத்தில் ஒரு தமிழர் கூட இல்லாத நிலையில் அதை சிங்கள இராணுவமாக மட்டுமே பார்ப்பதும், அழைப்பதும்தான் சரியாக இருக்க முடியும். அப்போதுதான் அங்கு நடப்பது இனச்சண்டை அன்று இனப்படுகொலை என்கிற உண்மை புலப்படும். சரி. அப்படி இருக்கிற இராணுவமும் என்ன யோக்கியதையில் இருக்கிறது என்பதை ஹெய்ட்டி லீலைகளே உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டன.

ஐ.நா.அமைதிப்படையில் மக்களைப் பாதுகாக்கப் போன சிங்கள இராணுவத்தினர் 108 பேர் ஹெய்ட்டி நாட்டுப் பெண்களை(யும்) பாலியல் வல்லுறவு கொண்ட குற்றத்துக்காக கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளப்பட்டனர். அமைதி காக்கப் போன இடத்திலேயே இத்தகைய ஆட்டம் போட்டவர்கள்... எதிர்த்தாக்குதல் நிகழும் இடங்களில் எத்தகைய ஈனச்செயல்களில் ஈடுபட்டிருப்பார்கள் என்பதற்கு கோணேஸ் வரிகளே சாட்சி.

மூன்றாவது, இறையாண்மை குறித்து இடத்துக்கு இடம் மாறுபடும் வியாக்கியானங்கள். ஒரு நாட்டில் உள்ள இரு இனப் பிரிவுகள் ஒன்றோடொன்று இணைந்திருப்பதோ... விலகிக் கொள்வதோ அது அவை இரண்டும் சம்பந்தப்பட்ட விஷயம். ஆனால், பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டு வங்காள தேசத்தை உருவாக்கும்போது தோன்றாத இறையாண்மை ஈழத்தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளாகும்போது மட்டும் தோன்றுவதுதான் நெருடலான துயரம்.

அதுவும் எப்படிப்பட்ட நேச நாட்டின் இறையாண்மையைக் காப்பாற்றப் போகிறோம்...?

இந்தியா - பாகிஸ்தான் போரின்போது பாகிஸ்தான் பக்கம் நின்ற நாட்டின் இறையாண்மையை...

இந்திய - சீன யுத்தத்தின்போது பௌத்தத்தின் பெயரால் சீனாவின் பக்கம் நின்ற நாட்டின் இறையாண்மையை...

இன்றைய கணம் வரை பாகிஸ்தானோடும். சீனாவோடும் நூலிழை கூட இடைவெளி இல்லா உறவோடு ஆயுதங்களை வாங்கிக் குவிக்கும் நாட்டின் இறையாண்மையை...

இந்தப் புவிசார் அரசியல் சூழலின் சட்சமம் நேருவின் மகளுக்குப் புரிந்தது.

விளைவு? ஒடுக்கப்படும் இனத்தினை நோக்கி அவரது கரங்கள் நீண்டன. நாடெங்கிலும் ஆயுதப் பயிற்சி முகாம்களும்... அரசியல் ரீதியான அனுசரணையும் ஈழப் போராளிகளுக்கு வாய்த்தன.

அதன்பின்னர் வந்த அயலுறவுக் கொள்கை வகுப்பாளர்களோ ராஜதந்திரத்துக்கான புதியதொரு அகராதியையே படைத்தனர்.

எதிரிகளைக் கூட நண்பர்களாக மாற்றும் வல்லமை படைத்த ராஜதந்திரம் விடைபெற்று... நண்பர்களைக் கூட எதிரிகளாக மாற்றும் ராஜதந்திரமும் அரங்கேறத் தொடங்கியதும் இன்னமும் நினைவில் நிற்கும் நிகழ்வுகள்தான்.

நான்காவதாக, தொடரான ஒடுக்குமுறையும் இனப்படுகொலையும் தொடரும் போது பூமிப்பந்தில் புதிய புதிய தேசங்கள் தோன்றுவதொன்றும் புதிரானதோ, எதிரானதோ அல்ல. சேர்பியா தொடங்கி ஒசீட்டியா வரைக்கும் உலக நிகழ்வுகளை உற்றுப் பார்த்தவர்களுக்கு அது புரியும். அப்படி மலரும் ஈழமும் இந்துமகா சமுத்திரத்தின் அரசியல் வானில் இந்தியாவுக்குத் துணையாகத்தான் இருக்கும் என்பது தான் அப்பட்டமான யதார்த்தம் என்பதும் புரியும்.

ஐந்தாவதாக, துயரப்படும் ஓர் இனத்துக்கான எமது உதவி என்பது எத்தகைய பிரதிபலனும் கருதாமல் நாம் எமது கடமையைச் செய்கிறோம் என்பதே. எண்பதுகளின் பிற்பகுதியில் தமிழகத்தில் ஓங்கி ஒலித்த ஈழத்தமிழர் ஆதரவுக் குரல்களும்... போராட்டங்களும்... மத்திய அரசினை கொழும்பை நோக்கி ஒரு கோபப்பார்வையை வீச வைத்தது. அடுத்து இலங்கையின் வான் எல்லைக்குள் இந்தியப் போர் விமானங்கள் துணையோடு உணவுப் பொட்டலங்கள் வடக்கு கிழக்கில் வாடிய உயிர்களை நோக்கி வீசப்பட்டன. தமிழகமும், ஈழமும் நன்றிப்பெருக்கோடு நிமிர்ந்து நோக்கின.

ஆனால்... அடுத்து வந்த நாட்களோ...? "இந்திய - இலங்கை வெளியுறவுத்துறை அதிகாரிகள் ஆலோசனை..." "இந்திய - இலங்கை வெளியுறவு அமைச்சர்கள் பேச்சுவார்த்தை..." என நகர்ந்து இறுதியில் ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தில் போய் முடிந்தது. எந்தவொரு ஒப்பந்தமும் போரிட்டுக் கொள்கின்ற இரு தரப்பாருக்குள் நிகழவேண்டுமே அன்றி சமரசம் செய்யச் சென்ற நடுவரே உடன்படிக்கையில் கையெழுத்திடுவதென்பது உலகம் கண்டிராத விந்தை.

அமைதிக்கான ஒப்பந்தம் என்பது இலங்கை அரசுக்கும் போராளிகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்க வேண்டும். சமரசம் செய்யச் சென்ற ராஜீவ்காந்தி அதில் காட்சிக் கையொப்பமிட்டிருக்க வேண்டும். அதுதான் நியதி.



ஆனால்...உணவுப் பொட்டலங்களின் பெயரால் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட கட்டாயப்படுத்தப்பட்டனர் போராளித் தலைவர்கள். இவ்வளவு உதவிகள் செய்த மத்திய அரசை ஏற்றுக்கொண்டு கையெழுத்துப் போட்டால்தான் என்ன? என்கிற எண்ணத்தினையும் அது ஏற்படுத்தியது. நடுவராக இருந்த அரசே இன்னொரு தரப்பாக உருமாறி ஒப்பந்தம் போட்டுக்கொண்டதும்... அப்படிப்பட்ட ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளச் சொல்லி நிர்ப்பந்தப்படுத்தியதும் ...ஏற்படுத்திய துயரம் தாளாமல் சென்னையில் நடந்த கூட்டத்தின்போது ஒரு போராளி கேட்டார்.

"சொல்லிக் காட்டவா சோறு போட்டீர்கள்?" இதுவும் நினைவில் நிற்கும் நிகழ்வுதான்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இறுதியாக... அண்டைநாடு... பஞ்சசீலம்... இறையாண்மை... உள்நாட்டு விவகாரம்... எல்லாம் தாண்டி 'நேச' நாட்டுக் கடற் படையினரால் காவுவாங்கப்பட்ட சொந்த நாட்டு மீனவர்கள் மட்டும் இதுவரை ஐநூற்றுச் சொச்சம்பேர்.

எதிரி நாட்டு படையான பாகிஸ்தானியரால் கூட மீனவர்கள் எவரும் இப்படிக் கொல்லப்பட்டதில்லை.

**பாமரன்**

இந்தியக் கடற்படையும் பாகிஸ்தானிய மீனவர்களை இப்படிக் கொன்றதில்லை.

அவ்வளவு ஏன்...எதிரும் புதிருமான கியூபாவும் அமெரிக்காவும் கூட மீனவர்கள் விடயத்தில் இவ்விதம் நடந்து கொண்டதில்லை.

இங்கு மட்டும் ஏன் இப்படி?

இன்று மனச்சாட்சியுள்ள எவருள்ளும் எழும் கேள்வி இதுதான்.

அப்படியாயின் ... தமிழர்கள் என்பவர்கள் யார்...?

அவர்கள் ஈழத்தில் பிறந்திருப்பினும் சரி. இந்தியாவில் பிறந்திருப்பினும் சரி தமிழர்கள் என்பவர்கள் யார்...?

இதுவே இன்று எம் முன் உள்ள ஒரே கேள்வி. ✱

*நன்றி: சண்டே இன்டியன்*


## தேவை - செய்தியாளர்கள்



பின்வரும் பிரதேசங்களில் செய்தியாளர்களாகப் பணிபுரிவதற்கு அனுபவம் உள்ள அல்லது நாட்டம் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ☐ 21 வயதுக்கு மேற்பட்டவர்கள்.
- ☐ நாட்டு நடப்புக்களைக் கண்டறிவதில் நாட்டம் உள்ளவர்கள்.
- ☐ ஜி.சி.ஈ.உயர்தரத்தில் சித்தி அடைந்திருப்பது விரும்பத்தக்கது.
- ☐ தமிழ் மொழியில் சரளமாக எழுதும் ஆற்றல்தேவை

கடைசியாக பயின்ற பாடசாலை, அதிபர், வாழ்விடப் பகுதி கிராமசேவகரிடம் இருந்து பெறப்பட்ட நற்சான்றிதழ், கல்வித் தராதரப் பத்திர சான்றிழ்களும் பிரதிகளும் மற்றும் சிபார்சு செய்யக்கூடிய தகுதி உள்ள பிரமுகர்களின் நற்சான்றிதழ்களுடன் 15.11.2008 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

★உடுவில், ★ஏழாலை, ★குப்பிளான், ★புன்னாலைக்கட்டுவன், ★உரும்பிராய், ★இருபாலை, ★ கல்வியங்காடு, ★சுதுமலை, ★வரணி, ★சரசாலை

பிரதம ஆசிரியர்,
உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்




நல்லூர் கோட்டத்திற்குரிய உள சமூக செயற்பாட்டு மையம் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. கோட்டக் கல்வி அதிகாரி கே.வி.குணசேகரம் செயற்பாட்டு மையத்தைத் திறந்து வைத்தார். முன்னதாகக் கோட்டக்கல்விப் பணிப்பாளருக்கு பாடசாலை அதிபர் மாலை அணிவித்து வரவேற்றபோது எடுக்கப்பட்ட படம். (04-119)




மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் நூற்றாண்டு வருடத்திலான ஆசிரியர் தின விழா அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது.

நிகழ்வில் பாடசாலை அதிபர் உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியும் பழைய மாணவருமான இ.த.விக்னராசா, ஓய்வு பெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு மற்றும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (203)



வல்வெட்டித்துறை றோ.க.த.க.பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெற்ற வாணிவிழா நிகழ்வில் வல்வை றோ.க.த.க., வல்வை அ.மி.த.க. பாடசாலைகளின் மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம். (203)




சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொதுநூல் நிலையத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி முன்பள்ளி சிறார்களிடையே 'கதை வேளை நேரம்' என்னும் நிகழ்வு அண்மையில் நடத்தப்பட்டது.

நிகழ்வில் பங்குபற்றிய முன்பள்ளிச் சிறார்களுடன் நூலகர் இ. தர்மலிங்கம், நூலக அபிவிருத்திச் சபை உறுப்பினர் வ.நாகராசா ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: தென்னவன்.)




ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலய மாணவர்களின் போக்குவரத்துக்கான வீதிக் கடவை சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தினரால் வரையப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையின் முன்பாக வீதிக் கடவை இன்மையால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். வீதிக் கடவை வரையப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். (86)



உடுவில் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் சோமசுந்தரம் சரஸ்வதி ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்ட கணனி ஆய்வுகூடம் மற்றும் வளநிலையம் ஆகியவற்றின் திறப்பு விழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கைக்கான கனேடிய அபிவிருத்திச் செயற்றிட்டப் பணிப்பாளர் சாள்ஸ்பார் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். பாடசாலை அதிபர் திருமதி சிராணி மில்சும் படத்தில் காணப்படுகின்றார்.

(படம்: நேசன்)



கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பரிசளிப்பு விழா கடந்த மாத மத்தியில் 19 ஆம் திகதி இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம்; சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட லயன் டாக்டர் வை.தியாகராஜா, மக்கள் வங்கியின் சுன்னாதிட்டிக் கிளை முகாமையாளர் ச.சிவபாலன் மற்றும் விருந்தினர்கள் பாடசாலை அதிபர் க.இ.இராசசேகரம் தலைமையில் விழா மேடைக்கு அழைத்து வரப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். (203)



பருத்தித்துறை கலைஞர் வட்டம் நடத்திய சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் உரையாற்றுவதையும் அருட்திரு எஸ்.டேமியன் அடிகளார், சாதனையாளர்களான ரீ.குலசிங்கம், எஸ்.இராஜகோபால், பீ.இரகுவரன், எஸ்.தணிகாசலம் ஆகியோருடன் கலைஞர் பீ.மகாதேவா, இலங்கை வங்கி முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசன், விழாத் தலைவர் கலைஞர் இரா.பஞ்சலிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆசிரியர்:- K.P.Rajakopal (B.A.) Geography Special - Colombo

# Special Guidance for O/L 2008 Students

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசம்பர்

General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008 December

T / 33 / I வரலாறு - I One hour

பகுதி - 1

இலக்கம் 01 - 05 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதாக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்தைப் பயன்படுத்துக.



01. ஆங்கிலேயர் கோப்பிச் செய்கையை தோட்டச் செய்கையாக முதன் முதலில் ஆரம்பித்தது கம்பளை "சிங்கப்பிட்டி" பகுதியில் ஆகும். அப்பகுதியைக் குறிக்கும் எழுத்து,
1) 1 2) 2 3) 3 4) 4


02. கி.பி 1818 இன் விடுதலைப் போராட்டத்தின்போது ஆங்கிலேய ஆட்சியாளர்களின் மிக மோசமான அடக்கு முறைக்கு உள்ளான பகுதியைக் குறிக்கும் எழுத்து,
1) 1 2) 2 3) 3 4) 4

03. விலியம் கிறகிரி ஆளுனரால் கந்தளாய்க்குளம் புனரமைக்கப்பட்டது. அதனைக் காட்டும் எழுத்து எது?
1) A 2) B 3) C 4) D

04. இலங்கையின் பண்டைய கிழக்கு மேற்கு வர்த்தகத்தினால் அபிவிருந்தியடைந்த இலங்கையின் துறை முகங்காளன மாதோட்டத்தையும் கொடவாயவையும் குறிக்கும் எழுத்துக்களைத் தெரிக?
1) AH 2) AE 4) EG 4) GH

05. அமெரிக்கரான ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்கள் பாணதுறா வாதம் பற்றிய தகவல்களை வாசித்து தெளிவு பெற்றமையாலேயே இலங்கைக்கு வந்தார். இந்த வாதம் நடைபெற்ற இடத்தைக் குறிக்கும் எழுத்து எது?
1) 1 2) 2 3) 3 4) 4

★ இலக்கம் 6 - 10 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்காக உலகப்படத்தைப் பயன்படுத்துக.




06. கி.பி 1857 இல் இந்தியாவில் பிரித்தானிய குடியேற்றத்திற்கெதிரான முதல் போரை நினைவுறுத்தும் முதல் நடைப்பயணம் முடிவடைந்த நகரத்தைக் குறிக்கும் எழுத்து எது?
1) E 2) F 3) G 4) H

07. கைத்தொழில் நாடாக வளர்ச்சிடையவதற்கு முன்னோடியான "ஈடோ" எனப்படும் டோக்கியோ நகரைக் குறிக்கும் எழுத்து எது?
1) H 2) F 3) D 4) C

08. சீனப்புரட்சியின்போது கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்ற பின் சியாங்காய் செக் தனது நண்பர்களுடன் தப்பி ஓடிய தீவைக் குறிக்கும் எழுத்துள்ள விடை எது?
1) 1 2) 2 3) 3 4) 4

09. மத்தியகால ஐரோப்பாவில் முக்கிய வியாபார கேந்திரா ஸ்தானமான கொன்ஸ்தாந்திநோபிள் நகரைக் குறிக்கும் எழுத்து எது?
1) A 2) B 3) C 4) D

10. இலங்கையைப்பற்றிப் குறிப்பிட்டுள்ள இந்திரகுப்த பேரரசனால் நிறுவப்பட்ட கல்வெட்டு அமைந்துள்ள இடத்தைக் குறிக்கும் எழுத்து எது?
1) E 2) F 3) G 4) H

11. அனுராதபுரக்காலத்தில் இலங்கை வரலாற்றில் புதுத்திருப்பத்தைஏற்படுத்திய நிகழ்வைக்கொண்ட விடை எது?
1) நான்காம் தர்ம மகா சபை, தென்னிந்தியப் படையெடுப்பு, பாகிய பிக்குவின் இலங்கை வருகை.
2) மகிந்த பிக்குவின் இலங்கை வருகை, மூன்றாம் தர்ம மகாசபை, தென்னிந்தியப்படையெடுப்பு.
3) தேவ நம்பியதிஸ்ஸ மன்னனின் வெளிநாட்டுக்கொள்கை, மூன்றாம் தர்மசபை, மகிந்த பிக்குவின் இலங்கை வருகை.
4) முதலாம் தர்ம மகாசபை, அரிட்ட குமாரன் பிக்குவாதல், பிக்குணி சாசணம் ஆரம்பித்தல்.

12. இந்தியாவின் வடமேற்குக் கணவாய் மூலம் வந்த ஆரிய சமூகத்தினர் விசேட கலாச்சாரத்தைக் கட்டி எழுப்பினர். அவர்கள் இந்தியாவிற்கு வரப்பயன்பட்ட கணவாய்,
1) மகரான் கணவாய். 2) போலான் கணவாய். 3) பரோடா கணவாய். 4)கைபர் கணவாய்.

13. இலங்கையின் வரலாற்றைக் கற்பதற்கான சிறந்த வரலாற்று மூலாதாரங்களாக நீர் தேர்ந்தெடுப்பவை,
1) வரலாற்று மூலாதாரங்களும் நாணயங்களும்.
2) தொல் பொருள் ஆராய்ச்சி மூலாதாரங்களும் வெளிநாட்டு ஆதாரங்களும்.
3) இலக்கிய மூலாதாரங்களும் தொல்பொருள் மூலாதாரங்களும்.
4) தொல்பொருள் ஆராய்ச்சி மூலாதாரங்களும் வெளிநாட்டு வம்சக் கதைகளும்.

14. மகதத்தைப் பேரரசாக மாற்றுவதில் முன்னணி வகித்த அரசர்களின் பெயர்களை வரிசைப்படி கொண்ட விடையைத் தெரிக.
1) பிம்பிசார, தனநந்தன், பிருகத்ரத்தன், அஜாசத்தன்.
2) அஜாசத்தன், பிம்பிசாரன், பிருகத்ரத்தன், சந்திரகுப்தமௌரியன்.
3) சந்திரகுப்தமௌரியன், பிம்பிசாரன், அஜாசத்தன், தனநந்தன்.
4) பிம்பிசாரன், அஜாசத்தன், மகாபத்ம நந்தன், சந்திரகுப்தமௌரியன்.

15. கி.பி முதலாம் நூற்றாண்டில் இலங்கையில் பாரிய குளங்களை அமைப்பதில் முன்னோடி அரசனாகக் கருதப்படுவன.
1) தாதுசேன மன்னன். 2) தேவநம்பிய திஸ்ஸ மன்னன்.
3) வசப மன்னன். 4) மகாசேன மன்னன்.

16. "பூமியில் விழும் ஒரு துளி நீரைத்தானும் பயன்படுத்தப்படாது கடலுக்கு விடக்கூடாது" எனக் கூறிய பொலன்னறுவைக் காலத்தில் வாழ்ந்த அரசன்,
1) முதலாம் விஜயபாகு மன்னன். 2) முதலாம் பராக்கிரமபாகு மன்னன்.
3) இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன். 4) நிஸ்ஸங்கமல்ல மன்னன்.

17. கி.பி 1594 இல் தந்துறைப்போரில் போத்துக்கேயரைப் படுதோல்வியடையச் செய்த மலை நாட்டு அரசன்,
1) முதலாம் இராஜசிங்க மன்னன். 2) இரண்டாம் இராஜசிங்க மன்னன்.
3) செனரத் மன்னன். 4) முதலாம் விமலதர்ம சூரிய மன்னன்.

18. இன்று வரை நடைமுறையிலுள்ள இலங்கையின் நீதித்துறை அமைப்பினை அறிமுகப்படுத்திய சமூகத்தவர்கள் யார்?
1) ஆங்கிலேயர். 2) ஒல்லாந்தர். 3) போர்த்துக்கேயர். 4) முஸ்லிம்கள்.

19. மானிட வாதத்தை முன்னிலைப்படுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்திய மக்கள் எழுச்சி,
1) பிரான்சியப்புரட்சி. 2) ஆங்கிலேயப்புரட்சி. 3) ருஷ்யப்புரட்சி. 4)கைத்தொழில்புரட்சி.

20. கி.பி 1818 இல் பிரித்தானியருக்கு எதிராக இலங்கையர் நடத்திய விடுதலைப்போரில் தலைமை தாங்கியோரின் பெயர்களை மட்டும் கொண்ட சரியான விடை,
1) மௌரவில் கெப்பிட்டிபொல, கொங்காலோகொட பண்டா, மடுகல்லே திசாவ.
2) பூட்டாவரால, கிவுலேகெதர, மொகொட்டால, மடுகல்லே திசாவ.
3) மௌரசவில கெப்பிட்டிபொல, மடுகல்லே திசாவ, பூட்டாவரால.
4) குடாபொல தேரர், வீரபுரன் அப்பு, மடுகல்லே திசாவ.

21. 1815 கண்டி ஒப்பந்தம் கைச்சாத்திட்ட சமகாலத்தில் ஐரோப்பாவில் கைச்சாத்திடப்பட்ட முக்கியமான சமாதான ஒப்பந்தம்,
1) மக்னா காட்டா ஒப்பந்தம். 2)டில்சில் ஒப்பந்தம். 3) பரிஸ் ஒப்பந்தம். 4)வியானாஒப்பந்தம்.

22. பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் இலங்கையின் ஜனநாயக பிரதிநிதித்துவப் பணயத்தில் ஏற்பட்ட முக்கிய அரசியல் சீர்திருத்தம்,
1) குறுமக்கலம். 2) டொனமூர். 3) கோல்புறுக். 4) மெனிங்.

23. A - டொரிங்டன் பிரபு B - ஆர்தரகோர்டன். C - ஹென்றிபோட்.
C - றொபேட் பிரௌன்றிக். D - வில்லியம் கிரகிரி.
மேலே காட்டப்பட்டுள்ள பிரித்தானிய ஆளுனர்களுள் தேசிய விவசாயத்திற்குச் சேவையாற்றிய ஆளுனர்களை மட்டும் கொண்டுள்ள விடை எது?
1) ACD. 2) ACE. 3) BDE. 4) BCD.

24. A - மனிங். B - மக்கலம். C- டொனமூர். D - கோல்புறுக்.
D - சோல்பரி.
மேலே தரப்பட்டுள்ள அரசியல் சீர்திருத்தங்கள் பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கால ஒழுங்கு கொண்ட வரிசை எது?
1) ECADB. 2) DBACE. 3) ABCDE. 4) DCAEB.

25. கி.பி 1871 இல் ஜெர்மனி ஒன்றுபட்டமை,
1) மெட்டரிக்கின் தலைமையில் ஆகும். 2) பிஸ்மார்க்கின் தலைமையில் ஆகும்.
3) ஹிட்லரின் தலைமையில் ஆகும். 4) வில்லியம் கைசரின் தலைமையில் ஆகும்.

26. இரண்டாம் உலகயுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஐரோப்பாவை மீளத்திருத்துவதற்காக முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டம்,
1) பேர்ல்லின் டோக்கியோ அச்ச அணி. 2) ஐக்கிய நாடுகள் சபை.
3) மார்ஷல் திட்டம். 4) நட்பு நாடுகள் அணி.

27. 1812 இல் பிறௌன்றிக் ஆளுனர் இலங்கையின் கல்வி விருத்திக்காக மிஷனரி சபையின் உதவியைப் பெற்றார். வட பிரதேசத்தில் கல்வி முறையைக் கட்டியெழுப்புவதற்காக பொறுப்பளிக்கப்பட்ட நிறுவனம்,
1) இங்கிலாந்து மிஷனரி சங்கம். 2) அமெரிக்க மிஷனரி சங்கம்.
3) திருச்சபை மிஷனரி சங்கம். 4) பப்டிஸ்ட் மிஷனரி சங்கம்.

28. குடியேற்ற நாடாக இருந்த காலத்தில் இலங்கையின் முதலாவது பௌத்த பாடசாலையை நிறுவிய சங்கம்,
1) பரண விஞ்ஞானார்த்த சங்கம். 2) மது ஒழிப்பு இயக்கம்.
3) இலங்கை தேசிய சங்கம். 4) பௌத்த இளைஞர்சங்கம்.

29. கலாச்சார மறுமலர்ச்சியுடன் சிங்கள தமிழ் எழுத்துத்துறையிலும் வளர்ச்சி ஏற்பட்டது. வீரகேசரி தினகரன் பத்திரிக்கைகள் ஆரம்பித்த ஆண்டுகள் முறையே,
1) 1888, 1930 2) 1909, 1931 3) 1930, 1931 4) 1902, 1909

30.

| | A | | B |
|---|---|---|---|
| 1) | நடேச ஐயர் | அ - | பஞ்சமகா கொள்கையை நடாத்தியமை. |
| 2) | ஹென்றிபேதிரிஸ் | ஆ - | தேசிய நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கியமை. |
| 3) | தோமஸ்மெழிட்லண்ட் | இ - | தோட்டத்தொழிலாளர்களுக்குத் தலைமை வகித்தமை. |
| 4) | கோல்புறுக் | ஈ - | அரச அதிகாரிகளுக்கு தனியார் நடவடிக்கையில் ஈடுபட அனுமதி வழங்கியமை. |
| | | உ - | இராசகாரிய முறைமையை மீண்டும் ஏற்படுத்தியமை |

"அ" நிரலிலுள்ள பெயருடன் சரியாகப் பொருந்தும் "ஆ" நிரலின் செயற்பாட்டைக் கொண்ட விடை,
1) CAEB. 2) BCAD. 3) CDAD. 4) CBED.

31. கி.பி 1948 இன் இலங்கையின் சுதந்திரத்துடன் பொருந்தாத கூற்று எது?
1) மகாதேசாதிபதி முறை ஏற்படுத்தப்பட்டது.
2) இரு சபை கொண்ட பாராளுமன்றம் ஏற்படுத்தப்பட்டது.
3) பிரதமர் தலைமையிலான மந்திரி சபை ஏற்படுத்தப்பட்டது.
4) நிறைவேற்று அதிகார சபை ஏற்படுத்தப்பட்டது.

32. நீண்ட நடைப்பயணங்களுக்கு சீன வரலாற்றில் முக்கிய இடமுண்டு. கீழேயுள்ளவற்றுள் பொருந்தாத கூற்று எது?
1) சியங்காய் செக்கின் படையினர் கம்யூனிஸ்டுக்களைத் துன்புறுத்தல்.
2) மாஓசேதுங் கம்யூனிஸ்ட் கட்சியின் இணையற்ற தலைவராதல்.
3) கம்யூனிஸ்ட் கட்சியின் பால் மக்கள் கவரப்படல்.
4) சியெங்காய் சேக்கின் இராணுவம் சீனாவில் இருந்து தப்பியோடுதல்.

33. 17 ஆம் நூற்றாண்டில் இருந்து ஜப்பான் மானியமுறைக் கொள்கையை மேற்கொண்டது. இக் கொள்கையை மாற்றுவதற்கு காரணமாக அமைந்த காரணி,
1) டவுண் செண்ட் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியமை.
2) சோகுன்கள் பதவிக்கு வந்தமை.
3) டொகுகாவா இயாசு பதவிக்கு வந்தமை.
4) ஜப்பானில் ஏற்பட்ட இரட்டை ஆட்சி முறை.

34. பிரான்ஸ் குடியேற்ற வாதத்தில் ஈடுபட்டவுடன் ஐரோப்பாவின் ஏனைய நாடுகளுடன் யுத்தில் ஈடுபட்டது. இந்நிகழ்வினால் இலங்கை அரசியலைப் பாதித்த முக்கிய காரணி,
1) பிரஞ்சு மக்களுக்கு எதிராக இலங்கை கரையோரப் பகுதியினை ஆண்ட ஒல்லாந்தருக்கு ஆங்கிலேயர் உதவ முன் வந்தமை.
2) "ஸ்டெட் கோல்டர்" இலங்கையின் ஒல்லாந்து ஆளுனருக்கு கடிதம் அனுப்பியமை.
3) ஆங்கிலேயர் 1795 ஆகஸ்ட் மாதம் ஒல்லாந்தரைத் தாக்கி திருகோணமலைத் துறைமுகத்தைக் கைப்பற்றியமை.
4) இலங்கையிலருந்தவாறே கடற்படையை இலகுவாக நிர்வகிக்கலாம் என முடிவு செய்தமை.

35. முதலாம் உலக யுத்தத்தின்போது அச்ச நாடுகள் குழுவில் இருந்த நாடுகளின் தொகுதி,
1) ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, துருக்கி.
2) பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா, ஐக்கியநாடு, பிரித்தானியா
3) பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி, ரஷ்யா.
4) பிரான்ஸ், துருக்கி, அமெரிக்கா, ஐக்கிய நாடு, ரஷ்யா.

36. ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நாடுகள் ஐந்தினைக்கொண்ட விடை எது,
1) ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, பெரிய பிரித்தானியா, சீனா.
2) பெரிய பிரித்தானியா, சீனா, ஜேர்மனி, ரஷ்யா, பிரான்ஸ்.
3) ஐக்கிய அமெரிக்கா, பெரிய பிரித்தானியா, ரஷ்யா, பிரான்ஸ், சீனா.
4) பெரிய பிரித்தானியா, பிரான்ஸ், சீனா, ரஷ்யா, ஜப்பான்.

★ இலக்கம் 37 முதல் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும்போது தரப்பட்டுள்ள 1, 2, 3, 4 ஆகிய கூற்றுக்களில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.
1) A சரி B சரி
2) A சரி B பிழை
3) A பிழை B பிழை
4) A பிழை B சரி

| | A நிரல் | B நிரல் |
|---|---|---|
| 37. | கி.பி 1914 - 1918 வரை முதலாம் உலக மகா யுத்தம் நடைபெற்றது. | முதலாம் உலக மகா யுத்தத்திற்கு 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் ஏற்பட்ட நிகழ்வுகள் அடிப்படையாக அமையவில்லை. (...........) |
| 38. | கி.பி 1941 இன் போது ஐக்கிய அமெரிக்கா பொருளாதாரத்திலும், யுத்த ஆயுதங்களிலும் பலம் வாய்ந்ததாக இருந்தது. | ஜப்பான் பேர்ல் துறைமுகத்திற்கு குண்டு போட்டமையால் அமெரிக்கா பலம் வாந்த நாடாக உருவெடுத்தது. (..........) |
| 39. | கி.பி 1945 இல் சர்வதேச சங்கம் ஏற்படுத்தப்பட்டது. | ஜெர்மனி சர்வதேச சங்கத்தை ஏற்படுத்துவதில் முன்னோடியாக இருந்தது. (...........) |
| 40. | அமெரிக்கா பொதுவடைமை வாதத்தின் பாதுகாவலராகவும் சோவியத் ருஷ்யா ஜனநாயகத்தின் பாதுகாவலராகவும் மாறினார். | இரண்டாம் உலக யுத்தத்தின் பின் அமெரிக்காவும் ரஷ்யாவும் இரு பெரிய வல்லரசு நாடுகளாக மாறின. (...........) |

★ பகுதி I இற்கான விடைகளும் பகுதி II வினாத்தாளும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட தேவையுடைய பிள்ளைகளும் சமூகத்தில் மதிக்கப்படவேண்டியவர்களே

**நமது நாட்டில் நடைபெறும் அசாதாரண சூழ்நிலைகளின் மத்தியில் தமது வாழ்வோடு போராட்டம் நடத்தி பல வேதனைகளின் மத்தியிலே சாதனை படைத்துவரும் விசேட தேவையுள்ளவர்கள் பற்றி சமூகத்தின் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் இதற்காகக் கல்வி உலகம் இவர்கள் பால் கொண்டிருக்கும் அக்கறையையும் ஈடுபாட்டையும் மேலும் வளர்த்துக் கொள்வதற்காகவும் இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது.**

ஆரம்ப காலங்களில் உடல், உள பாதிப்புக்குள்ளானவர்கள் பிறப்பு, மறுகணம் இறப்பு என்ற நிலையில் உயிரை உயிராக மதிக்காது காக்கைகளுக்கும் கழுகுகளுக்கும் இரையாக மலையுச்சியிலிருந்து வீசப்பட்டமைக்கும், பெற்றோர்களே தமது குழந்தைகளைக் கொலை செய்யும் அளவுக்கு துணிந்தமைக்கும் வரலாறுகள் பல சான்று பகிருகின்றன. அதனைத்தொடர்ந்து ''முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா?'' என்று வினவிய சமூகம் அக்கால மன்னர் ஆட்சிக் காலங்களில் அவர்களை பகடைக் காய்களாகப் படை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியது என்பது வரலாறு.

## வலிகாமம் கல்வி வலயத்தில் இவர்களுக்கென விசேட செயற்றிட்டம்




உயிரைக் கொல்வது பாவம் என நினைத்த அக்கால சமய, சமூக அமைப்புகள் இவர்களைத் தமது பராமரிப்பில் வைத்துப் பாதுகாக்கப் பராமரிப்பு நிலையங்களை ஆங்காங்கே நிறுவி அவர்களின் வாழ்வுக்கு உயிரூட்டத் தொடங்கின.

19ஆம் நூற்றாண்டில் இவ்வாறான விசேட உதவியை வேண்டி நிற்கும் பிள்ளைகளுக்கும் கல்வி புகட்டவேண்டும் என உலகளாவிய ரீதியிலே மனித உரிமைக் கோஷங்கள் எழுப்பப்பட்டதன் விளைவாக வதிவிடப் பராமரிப்பு நிலையங்கள் விசேட பாடசாலைகளாக உருவாக்கம் பெற்றன.

யாழ்ப்பாணத்தில் நவீல்ட் பாடசாலையும், கொழும்பு இரத்மலானையில் ஒரு பாடசாலையும் இவர்களுக்காக அரசால் நிறுவப்பட்டு கல்வி புகட்டப்பட்டு வந்தன.

1989ஆம் ஆண்டு 'யுனெஸ்கோ'வினால் சிறுவர் உரிமை சாசனம் கைச்சாத்திடப்பட்டதன் விளைவாகச் சிறுவரின் உரிமைகளைப் பாதுகாக்கப் பல நாடுகளும் முன்வந்தன.

18 வயதுக்குட்பட்ட அனைவரும் சிறுவர்களாக மதிக்கப்பட்டு அவர்களுக்கான வாழும் உரிமை, பாதுகாக்கும் உரிமை, பங்கேற்கும் உரிமை, சமகல்வி வாய்ப்புரிமை அடிப்படை உரிமைகளாகக் கருதப்படுகின்றன.

1990ஆம் ஆண்டு தாய்லாந்தின் ஜொம்ரென் நகரில், யுனெஸ்கோவினால் எல்லோருக்கும் கல்வி என்ற சாசனத்தின் மூலம் சிறுவர்கள் அனைவருக்கும் கட்டாயக்கல்வி வழங்க நமது நாடும் கையெழுத்திட்டது.

1994ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டின் சலமன்ஹா என்ற இடத்தில் 'உட்படுத்தல் கல்வி' அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன்மூலம் உலக நாடுகள் அனைத்தும் விசேட உதவி தேவைப்படும் மாணவர்கள் அனைவரும் சாதாரண பாடசாலைகளில், சாதாரண மாணவர்களுடன் வகுப்பறையில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட உரித்துடையவர்கள் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டன.

இதனடிப்படையில் 2010ஆம் ஆண்டு உட்படுத்தல்கல்வி ஆண்டாகப் பிரகடனப்படுத்த அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றமை வரவேற்கத்தக்கதாக அமைந்துள்ளது. இதனடிப்படையில் வீட்டுக்குள்ளே பூட்டி முடக்கப்பட்ட உடல், உள பாதிப்புக்குள்ளான மாணவர்கள் வெளிக்கொணரப்பட்டு அவர்களுக்கான அடிப்படைக் கல்வியைப் பெற வாய்ப்பும் வசதியும் அளிக்கப்படவேண்டிய தேவையுள்ளது.

இதற்கான முன்னெடுப்புகளை அரசு தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது. அதேவேளை அதற்கு உறுதுணையாக அரச, அரசசார்பற்ற சமூக, சமய தொண்டு நிறுவனங்கள் உதவ முன்வரவேண்டும்.

இலங்கையின் தென்பகுதிகளில் விசேட கல்வித்துறைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் 2005ஆம் ஆண்டு தொடக்கமே வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு கல்வி வலய மட்டங்களில் இச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் விசேட உதவி தேவைப்படுவோர் 13 வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மீத்திறன் கூடிய மாணவர்கள், கற்றலில் இடர்படுவோர், பேச்சுக் குறைபாடுடையோர், மனவளர்ச்சி குன்றியோர், மெல்லக் கற்போர், பார்வைக் குறைபாடுடையோர், கேட்டல் குறைபாடுடையோர், அங்கக் குறைபாடுடையோர், நோய்க் குறைபாடுடையோர், ஒன்றுக்கு மேற்பட்ட குறைபாடுடையோர், மூளை பாதித்தவர், உளப்பாதிப்புக்குள்ளானவர், டவுன்சிங்ரோம்/ஒடிசம் குறைபாடுடையோர்.

மேற்கூறப்பட்ட வகையினரைச் சரியான முறையில் இனங்கண்டு அவர்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், அவர்களுக்கு உரியவேளையில் உரிய தேவைகளை நெறிப்படுத்தி வழிப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு ஒவ்வொரு அதிபரினதும் ஆசிரியரினதும் கைகளிலேயே தங்கியுள்ளது.



அந்தவகையில் விசேட கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் வலிகாமம் கல்விவலயம், ஆண்டுதோறும் விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள், பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள், பாடசாலை தோறும் மருத்துவ பரிசோதனைகள், சிறுவர் முகாம்கள், மாற்று ஆற்றலுள்ளோர் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே சித்திரம், இசை, நடன, நாடக, பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகள் என்பவற்றை நடத்தி வருகின்றது.

விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான மூக்குக் கண்ணாடி, காதுகேள் கருவி, சக்கர நாற்காலி, கற்றல் உபகரணங்கள் என்பவற்றையும் வழங்கி வருகின்றது.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் இவ்வாண்டு பெறப்பட்ட தகவல் அடிப்படையில் பின்வரும் நான்கு கோட்டங்களிலும் இனங்காணப்பட்ட விசேட தேவையுள்ள மாணவர்கள் விவரம் வருமாறு:

| கோட்டங்கள் | பார்வை | கேட்டல் | பேச்சு | நோய் | விவேகக் குறைபாடு | அங்கவீனம் | கற்றல் இடர் | உளம் | மூளை பாதிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சங்கானை | 129 | 28 | 23 | 121 | 225 | 09 | 353 | 85 | 02 |
| சண்டிலிப்பாய் | 182 | 42 | 34 | 261 | 140 | 14 | 417 | 171 | 07 |
| தெல்லிப்பளை | 112 | 19 | 16 | 65 | 64 | 08 | 178 | 56 | 01 |
| உடுவில் | 76 | 07 | 20 | 64 | 58 | 04 | 136 | 42 | 05 |
| மொத்தம் | 499 | 96 | 93 | 511 | 487 | 35 | 1084 | 354 | 15 |

மேலும் இனங்காணப்படவேண்டிய மாணவர்கள் தொடர்பான ஆய்வுகள் தற்போதும் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். இனங்காணப்பட்ட இம் மாணவர்களுக்கு வலிகாமம் கல்வி வலயத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் வருமாறு:

*✱ மெய்வல்லுநர் போட்டி*

இம்முறை 47 பாடசாலைகளிலிருந்து 376 விசேட உதவி தேவைப்பட்ட மாணவர்கள் பங்குபற்றி தமது திறன்களை வெளிக்காட்டியதுடன் சமூகத்தில் தம்மாலும் எதனையும் சாதிக்கமுடியும் என்பதனை நிரூபித்துக்காட்டினர்.

*✱ விழிப்புணர்வுக் கருத்தரங்கு*

எமது பிரதேச பிரதான பாடசாலைகளுடன் அயற்பாடசாலைகளையும் இணைத்துப் பெற்றோர், ஆசிரியர், மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் ஒவ்வொரு மாதமும் வரும் போயா தினங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

இக்கருத்தரங்கில் சிவபூமி பாடசாலை, ஆர்க் பாடசாலை, வாழ்வக மாணவர்கள் தமது ஆற்றல்களை கலைநிகழ்வுகள் மூலம் வெளிப்படுத்திப் பாராட்டுகளைப் பெற்று வருகின்றனர்.

*✱ மருத்துவப் பரிசோதனை முகாம்*

மாதம் தோறும் இரண்டு தடவைகள் யாழ்.போதனா வைத்தியசாலை தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவுடன் இணைந்து பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று மாணவர் உடல், உள, சமூகப் பாதிப்புகள் தொடர்பாக ஆராய்ந்து, கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆலோசனைகளும், வழிகாட்டலும் மேற்கொள்ளப்பட்டதுடன், மேலதிக சிகிச்சைக்காக ஈ.வத்தியசாலைக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

*✱ சிறுவர் முகாம்*

வலிகாமம் கல்வி வலய விசேடகல்வி அலகில் மாதம் தோறும் இனங்காணப்பட்ட மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாணவர் விருப்புடன் பங்கேற்று தமது அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்து வருகின்றனர்.

**நி.முருகானந்தன்**
*விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர்,*
*வலிகாமம் கல்வி வலயம்.*

*(12ஆம் பக்கம் பார்க்க)*

# போட்டியில் வெற்றிபெறுவேன் என நினைத்தேன் முதலிடம் கிடைக்கும் என்று எண்ணவேயில்லை

## ஓவியப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற ஐங்கரன் கூறுகிறார்



சித்திரப்பாட ஆசிரியர், அதிபருடன் ஐங்கரன்

ஓவியப் போட்டியில் வெற்றிபெறுவேன் என்ற அபார நம்பிக்கை எனக்கு இருந்தது. ஆனால் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெறுவேன் என நான் நினைக்கவே இல்லை என்று முகத்தில் மலர்ச்சியுடன் கூறுகிறார் கரணவாய் மகா வித்தியாலய மாணவன் ச.ஐங்கரன்.

கல்வி அமைச்சால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் கரணவாய் மகாவித்தியாலயத்தில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவன் ச.ஐங்கரன் சிரேஷ்ட பிரிவில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

பரிசில் பெற்ற ஐங்கரன் தனக்குக்கிடைத்த இந்தப் பரிசு தொடர்பாகக் கூறியமை வருமாறு:

தரம் 10இல் கல்வி பயிலும் நான் சிறுவயதில் இருந்தே ஓவியம் வரைவதில் ஆர்வமாக இருந்தேன். பாடசாலையிலும் சித்திரத்தை ஒரு பாடமாகக் கற்று வருகின்றேன்.

ஏதாவது தெரியாதுவிட்டால் ஆசிரியர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதில் மிகவும் ஆர்வமாக இருந்தேன். இப்போதும் எனக்கு அந்த ஆர்வம் இருக்கின்றது.

பாடசாலை மட்டங்களில் அனைத்துப் போட்டிகளிலும் நான் வெற்றியடைந்தே வருகின்றேன். அகில இலங்கை ரீதியில் போட்டிக்குச் செல்லுமாறு சித்திரப் பாட ஆசிரியர் த.கௌசல்யா என்னிடம் கேட்டபோது, நான் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை என்னிடம் இல்லை.

ஏனைய பாடசாலை மாணவர்களுடன் போட்டி போட்டு வெற்றி பெறுவேனா என்ற எண்ணமே என்னிடம் இருந்தது.

அத்துடன் போட்டிக்குச் செல்வதற்குத் தேவையான நிதி வசதி எங்கள் குடும்ப சூழ்நிலையில் என்னிடம் இல்லை என்றும் ஆசிரியரிடம் கூறினேன்.

அவர் அதனை எங்கள் பாடசாலை அதிபர் [illegible]லிங்கத்திடம் தெரிவித்தார். அதனைக் கேட்ட அதிபர் என்னை அழைத்து தோளில் தட்டி இந்த வாய்ப்பு உனக்குக் கிடைத்துள்ளது. நீ நழுவவிடாது போட்டிக்குச் செல்லத்தான் வேண்டும் என்று கூறினார்.

இதுதொடர்பாக யாழ்.அரச அதிபர் கே. கணேஸுக்குத் தெரிவித்துள்ளோம். போக்குவரத்து வசதி கிடைத்தால் போட்டிக்குச் செல்வீரா என என்னிடம் கேட்டார். நான் அதற்குச் சம்மதித்தேன்.

எனது திறமையையும் ஏழ்மையையும் புரிந்துகொண்டு நான் விமானத்தில் கொழும்பு செல்வதற்கான ஏற்பாடுகளை அரச அதிபர் செய்து கொடுத்தார்.

நான் எனது உறவினர் ஒருவரின் உதவியுடன் கொழும்பு சென்று போட்டியில் பங்குபற்றினேன். முதலிடத்தையும் பெற்றுக்கொண்டேன்.

இந்த வெற்றி மூலம் எனது பாடசாலைக்கு மட்டுமல்ல தமிழ் மாணவர்களுக்கும் பெருமை சேர்த்துக்கொடுத்துள்ளேன். இது எனக்குப் பெருமையாக உள்ளது.

**வல்லழகனார்**

இந்த வெற்றிக்கு எனது பாடசாலை அதிபர், ஆசிரியர் மட்டுமன்றி அரச அதிபரும் காரணம். அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையினரை அடிமைப்படுத்த எண்ணும் நாட்டில் சுதந்திரத்தை நிலைநிறுத்த எவராலும் முடியாது

**நாட்டின் கடந்தகால வரலாற்றின் சீர்கேடுகளைக் கவனத்தில் கொண்டு தம்மைத் திருத்திக்கொள்ளாது மேற்கொள்ளப்படும் யுத்த வாதங்கள் என்றும் காத்திரமான பெறுபேறுகளைத் தரமாட்டாது என்பதைத் தெளிவுபடுத்தும் இக் கட்டுரை 'ராவய' பத்திரிகையில் 19.10.2008இல் வெளிவந்துள்ளது.**

**சுதந்திர ஊடக இயக்கத்தின் இயக்குநரும் பிரபல பத்திரிகையாளருமான சுனந்த தேசப்பிரியவால் எழுதப்பட்ட அக் கட்டுரையின் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.**

கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றிக்கொண்டதைப் போன்று, அரசு வடக்கையும் நிச்சயம் கைப் பற்றிக்கொள்ளும். அரசு அத்தகையதொரு வெற்றியை ஈட்டிக்கொள்ளும் போது, விடுதலைப் புலிகள் அமைப்பு முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்பட்டுவிடும். அந்தப் புறச்சூழல் அமையும்போது வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு ஜனநாயக ரீதியிலான அரசியல் வாய்ப்புகள் கிட்டுவதோடு புதியதொரு தடம் பதித்தலுக்கான வாய்ப்பும் சமுக நிலையும் உருவாகக்கூடுமென்றொரு கருத்தும் நம்பிக்கையும் இன்று நாட்டில் நிலவுகிறது. அந்தக் கருத்துகள் மற்றும் நம்பிக்கைகள் தொடர்பானதொரு விவாத அரங்கொன்று கூட இத்தினங்களில் 'ராவய' பத்திரிகை ஊடாகக் கொண்டு செல்லப்படுவதையும் காணமுடிகிறது. உண்மையில் அந்த விவாத மேடை இன்றைய நடப்பு விவகாரங்களைப் பொறுத்தவரை மிகப் பொருத்தமானதே.

இதனிடையே, இதுவரையில் மூலையில் ஒதுக்கி வைக்கப்பட்டுக் கவனிப்பாரற்றுக் கிடந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு மாநாட்டை அவசர அவசரமாகக் கூட்டிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சர்வதேச நாடுகளின் செவிகளுக்கு எட்டும் விதமானதொரு உரையையும் நிகழ்த்தினார். அதாவது, இலங்கையின் குடிமக்களான தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காணப்படவேண்டியுள்ளது என்ற அவசியத்தைத் தனது அரச ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், அத்தகையதொரு தீர்வை எட்டுவதற்குத் தமது அரச தயாராகி வருகிறது என்பதையும் வெளிப்படுத்துவதாகவே அவரது அந்த உரை அமைந்திருந்தது. ஆனாலும், அரசியல் தீர்வு என்ற உருவில் தாம் மனதில் உருப்போட்டு வைத்திருப்பது எது என்பதை வெளிப்படுத்தாவிருப்பதில் அவர் மிகுந்த கவனத்துடனேயே இருந்தபோதிலும், மஹிந்த ராஜபக்ஷ அரசின் உண்மையான கோட்பாடு, இனப்பிரச்சினைக்கு யுத்தமய ரீதியிலான தீர்வேயென்பது அனைவரும் அறிந்துள்ளதொரு வெளிப்படையான விடயமேயாகும்.

அதற்கமைய, மஹிந்த அரசின் இன்றைய இருப்பு, யுத்த வெற்றிகளின் மீதே தங்கியுள்ளது. மேற்படி அரசின் யுத்த - அரசியல் தலைமைத்துவத்திலிருந்தும், அரசின், அரச சார்ந்த கருத்தாழம் மிக்க அமைப்புகளின் கோட்பாடுகள் போன்றே அடுத்த ஆண்டு தொடர்பாக முன் வைக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தின் மூலமாகவும் கூட, யுத்த ரீதியிலான தீர்வின் மீது வைக்கப்பட்டுள்ள நம்பிக்கை வெகுவாகப் புலப்படுகிறது. அந்த வகையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்நாட்டுத் தமிழ் மக்களின் பிரச்சினை அரசியல் பிரச்சினையே அல்ல. அது வெறும் நிர்வாகப் பிரச்சினை மட்டுமே என நம்புமொரு அரசியல் தலைவரேயாவார்.

இதனிடையே, அரசினால் முன்னெடுத்துச் செல்லப்படும் இந்த யுத்தத்தின் மூலம் விடுதலைப்புலிகளை நிர்மூலமாக்கிவிடுவது சாத்தியமே எனவும், அதன் பின்னர், தமிழர் - அரசியலில் ஜனநாயகவாத வளர்ச்சிக்குப் பெருமளவி லான வாய்ப்புகள் உருவாகக்கூடுமெனவும், விக்ரர் ஐவனால் முன்வைக்கப்படும் கருத்து வெளிப்பாடுகளை விமர்சித்து கடந்த வாரத்தில் ராவய பத்திரிகைக்கு குமார் ரூபசிங்க தமது கருத்து வெளிப் பாடுகளை வழங்கியிருந் தார். அதாவது,



சுனந்த தேசப்பிரிய

இப்பிரச்சினை தீர்க்கப்படுவ தற்கு அதிகாரம் பகிர்ந்தளிக் கப்படும் அரசமைப்பு ரீதியிலான நடவடிக்கைகள் மற்றும் தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து வழங்கப்படும் நிர்வாகச் செயற்பாடுகள் அமைய வேண்டியதை வலியுறுத்தும் வகையில் தமது கருத்துகளை அவர் முன்வைத்திருந்தார்.

புத்திஜீவிகளால் முன்வைக்கப்படும் மேற்படி விவாதமேடையுடன் நேரடிப் பங்களிப்பற்ற விதத்தில் கடந்தவார ராவய பத்திரிகைக்குத் தமது கருத்துகளை வழங்கியிருந்த பத்தி எழுத்தாளரான ஜயதேவ் உயன்கொட, இன்றைய இலங்கை ராச்சியத்தைப் புதிதாக உருவாக்கிவிடும் - அல்லது புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்திவிடும் திட்டமொன்று இன்று களமிறக்கப்பட்டுள்ளதாகவும், பாதுகாப்புப் பிரிவின் முக்கியஸ்தர்கள், இராணுவத் தலைவர்கள், ஜாதிக ஹெல உறுமய அமைப்பு மற்றும் விமல் வீரவன்ஸவின் கட்சி என்பவை அத்திட்ட நடைமுறையின் பங்காளிகளேயெனவும் குறிப்பிட்டிருந்தார். அதுமட்டுமல்லாது, ஸ்ரீலங்கா என்பது சிங்களவர்களுக்கே உரிய நாடே எனவும், அநாவசியமாகக் கோரிக்கைகளெதையும் முன்வைக்காத நிலையில் மட்டுமே ஏனைய இன மக்கள் அங்கு வாழ முடியுமெனவும் அண்மையில் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவால் வெளிப் படுத்தப்பட்ட கருத்து வெளிப்பாடு, மேற்படி கூட்டுச் சக்தியின் கருத்து நிலைப்பாடே யெனவும் ஜயதேவ உயன்கொட குறிப் பிட்டிருந்தார்.

எவ்வாறோ, மஹிந்த ராஜபக்ஷ அரசின் ஆட்சி அதிகாரத் தராச, இன்றைய அளவில், முற்றுமுழுதாகவே அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு எதிராக எம் யுத்தத்தினாலும், அடக்குமுறை மூலமகவும் தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகவே கருதி நிர்வாகம் செலுத்தப்படவேண்டும் எனக் கருதும் தீவிர சக்திகளின் கரங்களுக்கு மாறியுள்ளதாகவே கொள்ள முடிகிறது. அந்தவகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வலது கரம் போன்று அவருடன் நெருங்கியிருந்த மங்கள சமரவீர வெளியேற்றப்பட்டதன் மூலமும் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே படுகொலையுற்ற தன் மூலமும் ஏற்பட்ட இடைவெளி, மேற் குறிப்பிடப்பட்ட தீவிரசக்திகளை இட்டே நிரப்பப்பட்டுள்ளது.

தமிழர் - அரசியல் கனத்தில், இது குறித்து நாம் வினவி நிற்போமானால், இன்று மாத்திரமல்ல, இலங்கைக்குச் சுதந்திரம் கிடைக்கப்பெற்ற 1948 ஆம் ஆண்டிலிருந்தே தமிழ் மக்களுக்கு மாற்றாந் தாய் மனப்பான்மை காட்டுமொரு அரசியல் தோற்றமே இலங்கையில் நிலவிவந்துள்ளதாகவே அவர்களின் பதில் அமையக்கூடும். அதற்கமைய, விடுதலைப்புலிகள் அமைப்பை யுத்தத் தின் மூலம் நிர்மூலமாக்கிவிடுதல் மற்றும் அந்த அமைப்பின் தலைவரை உயிரற்ற சடலமாக சிங்கள மக்கள் முன் காட்சிக்கு வைத்தல் என்ற விதமாகப் பேசப்படும் வார்த்தைகள் ஒன்றும் தமிழ் மக்களுக்குப் புதியவை அல்ல. ஏனெனில், 1948 ஆம் ஆண்டு முதலே அவர்கள் முகம் கொடுக்க வேண்டி நேர்ந்திருந்த யதார்த்தம் இரும்பினாலும் இரத்தத்தினாலும் போன்றே அரசியல் ஏமாற்றுக்களின் மூலம் அவர்களது சாத்வீக சமாதான முறையிலான கோரிக்கைகள் அடக்கி ஒடுக்கப் பட்டமையே அதற்குக் காரணமாகிறது. விடுதலைப்புலிகள் அமைப்பு நிர்மூல மாக்கப்படுதல் என்பதன் மூலமாக சிங்கள மக்கள் மத்தியில் எழும் உணர்வு மற்றும் தமிழ் மக்கள் மத்தியில் எழும் உணர்வுக்கிடையிலான வித்தியாசத்துக்கு அந்த வரலாறே காரணமாகிறது. அதற்கமைய, அந்த உணர்வின் மூலம் சிங்கள மக்கள் உவகை கொள்கின்றார்கள். தமிழ் மக்கள் பீதிவயப்படுகின்றனர்.

பிரபாகரனின் வரலாற்றுக்குப் பின்னர் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிட்டுமெனச் சிந்திக்கும் தரப்பினர் இன்று மறந்துபோயுள்ளதும் அந்த வரலாற்றையேயாகும். அந்தக் கடந்த காலத்தையேயாகும். அதாவது பிரபாகரனின் தோற்றத்துக்கு முன்னரான இனப்பாகுபாட்டு அரசியலையேயாகும். தமிழ் மக்களுக்கு ஜனநாயகவாதம் கிட்டாமல் போனமைக்கு பிரபாகரனே காரணகர்த்தா என்ற ஓரளவுக்கு ஏற்கக்கூடிய இன்றைய அணுகலானது, வெறும் யுத்தக் கடப்பாடாகக் கருதப்படுவதற்கு பிரபாகரனுக்கு முன் னரான காலகட்டம், இந்த ஆய்வுகளுக்கு உரித்துடையது அல்ல என்பதே காரணமாகிறது.

1948 ஆம் ஆண்டு முதல் பிரபாகரன் களமிறங்கிய 1981 ஆம் ஆண்டு வரையில் இந்நாட்டை நிர்வகித்த அனைத்து நிர்வாகிகளும் இந் நாட்டின் தமிழ் மக்களது பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று அவசியமென்பதை ஏற்றுக்கொண்டுள் ளனர். ஆனால் அந்த நிர்வாகிகள் எவரொரு வருக்கும் அத்தெளிவை, செயலுருவிலான அரசியல் வேலைத்திட்டமொன்றாகச் செயற்படுத்துவதற்கு அவசியமான தைரியம் இருக்கவில்லை. அவ்வாறின்றேல், அரசியல் அதிகாரத் தராசின் மூலம் அதற்கு இடமளிக்கப்படவில்லை. அதுமட்டு மல்லாது, இன்று பிரபாகரன் என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களது ஆயுதப் போராட்ட அரசியல் ஆரம்பமானதன் பின்னர் கூட இற்றை வரையிலும் இந்நாட்டில் நிர்வாகம் செலுத்தும் எந்தவொரு அரசியல்வாதிக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அரசியல் தீர்வொன்றை சட்டமாக்கி விடுவதற்கும் கூட இயலாதுபோனது. அது ஒரு புறமிருக்க இந்திய அமைதிப்படையின் பிரசன்னத்துடனேயே இந்த நாட்டுக்கு மாகாணசபை நிர்வாக முறைமையும் கிட்டியது. அந்த இந்தியத் தலையீடு அமையாதவிடத்து அதுவும் கிட்டியிருக்க மாட்டாது. மாகாணசபை முறைமை நிறுவப்பட்ட 1988 ஆண்டிலிருந்து இற்றைவரையான இருபதாண்டு கால அனுபவமும் கூட அதற்குரிய அரசு மைப்பின் 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படாதிருப்பதற்கு மற்றும் அதைச் செயலிழக்கச் செய்வதற்கு இந்நாட்டின் நிர்வாகத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட எண்ணற்ற எத்தனங்களும் முயற்சிகளுமாகவே காணப்படுகின்றன.

எவ்வாறோ, இலங்கையரசின் யுத்த வெற்றிகள் மூலம் தமிழ் மக்களுக்கு ஜனநாயகவாதம் பெற்றுக் கொடுக்கப்படும் என்ற வாதத்தை உண்மையிலிருந்து வெகு தொலைவுக்கு இட்டுச் செல்வது, இலங்கை அரசியலின் அறுபதாண்டு கால நடை முறைப்போக்கும் மஹிந்த ராஜபக்ஷ அரசின் யுத்த முனைப்பு அரசியலுமே ஆகும். அந்த வரலாற்றைக் கவனத்தில் கொள்ளாத எந்தவொரு ஆய்வும் இறுதியில் இலங்கையின் - பிரபாகரனுக்கு முன்னரான அரசியலையே பிரபாகரனுக்குப் பின்னரான அரசியலாக அமைத்து விடுவதற்கே அனுகூலம் வழங்கும். அந்த நிலைப்பாட்டில் பெறப்படும் வெற்றியானது தமிழ் மக்களை அடி மைப்படுத்துவதேயாகும். அதன் காரண மாகவே அது, வெற்றியாக அல்லாது நாட்டின் தோல்வியாக மீளவும் மாற்றமடை யக் கூடும். ஏனெனில் சிறுபான்மை மக்களை அடிமைப்படுத்தும் சமுதாயமொன்று ஒருபோதும் சுகந்திரம் பெற மாட்டாது என்பதே அதற்குக் காரணமாகும். ★

**தமிழில் : ராஜா**

---


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 . 08 . 1929



உதிர்வு 28 . 10 . 2006

**திருமதி கந்தையா மகேஸ்வரி**

திதி: ஷஷ்டி

*அன்பாலும் பாசத்தாலும் கூடிக்குலாவிய தாய்மனை*
*அன்னையின் அரவணைப்பை இழந்து தவிக்கிறது.*
*ஆண்டுகள் இரண்டு ஆகிவிட்டதம்மா!*
*ஆறாது துயர் எம் ஆயுள் உள்ளவரை*

விதானையார் வீதி,
இருபாலை, கோப்பாய்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், க.அருளானந்தம் (மகன்).**

(79517)



## 40ஆவது 13ஆவது ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 31 07 1931 மறைவு 04 11 1968



தோற்றம் 22 07 1932 மறைவு 18 11 1995

அமரர்கள்

பேதுருப்பிள்ளை அல்பிரேட்    அல்பிரேட் மாக்கிரேட்

அன்புத் தெய்வங்களே! எங்கள் உயிர் உள்ளவரை உங்களை மறவோம். உங்கள் ஆன்ம சாந்திக்காக என்றும் வேண்டுகின்றோம்.

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக யாழ். அருள் ஆச்சிரமத்தில் 08.11.2008 சனிக்கிழமை காலை 6 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

823, அஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (79615)

**பிள்ளைகள் குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் தன்னியக்க இயந்திர சேவையின் ஆரம்ப நிகழ்வு கடந்த மாத இறுதியில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை வங்கியின், வடமாகாண முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் பிர.அருமைநாயகம் பணப்பரிமாற்ற இயந்திர அறையை நாடா வெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வங்கியின் யாழ்.மேற்றரக்கிளை முகாமையாளர் எஸ்.ஜெயேந்திரா, பருத்தித்துறைக் கிளையின் முகாமையாளர் கே.பி. ஆனந்த நடேசன் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்த இரண்டு படங்களிலும் காணலாம். 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான திட்டத்தில் பரிசு பெற்ற ஒருவருக்கு ஒரு பவுண் தங்க நாணயத்தை பிரதம விருந்தினர் வழங்குவதை நான்காவது படத்தில் காணலாம். *(படங்கள்: சுந்தா)*

# சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற முதியோர் தின நிகழ்வுகள்

நவாலி, நவ.4

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவும் முதியோர் சங்கங்களும் இணைந்து முதியோர் தின நிகழ்வுகளைக் கடந்த சனிக்கிழமை சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் நடத்தின.

பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மங்கள வாத்தியம், ஆனைக்கோட்டை மக்களின் பொய்க்கால் குதிரையாட்டம், சீனடிசிலம்படி, தீப்பந்த விளையாட்டு என்பவற்றுடன் விருந்தினர்கள் மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மங்கள விளக்கேற்றல், ஆசியுரைகள் என்பவற்றைத் தொடர்ந்து முதியோரின் விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் விசேடமாக ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கணேசரத்தினம் (வயது-60) என்பவர் மோட்டார் சைக்கிளை கயிற்றில் கட்டி அதனை வாயால் கடித்து சில நிமிட நேரம் தூக்கி வைத்திருந்து சாகசம் செய்தார்.

அத்துடன் மற்றொருவர் 40 கிலோ எடையுடைய இரு குண்டுகளை கட்டித்தூக்கி இருதோள்களிலும் தொங்கவிட்டவாறு நிற்க அக்குண்டுகள்மீது மற்றொரு நபர் பாரிய சுத்தியலால் அடித்து சாகசம் படைத்தனர். தொடர்ந்து முதியோர் கௌரவிப்பு இடம்பெற்றது. (203-100)

# தேசிய கல்வி நிறுவக பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.4

தேசிய கல்வி நிறுவக 2002/2004 கல்வியாண்டு கல்விமாணிப் பட்டதாரி மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இவர்கள் தமக்குரிய மேலங்கிகளை எதிர்வரும் 17 ஆம் திகதி தேசியக் கல்வி நிறுவகத்தில் பற்றுச்சீட்டு, அழைப்புக் கடிதம் என்பனவற்றைக் காட்டிப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ்.பிராந்திய இணைப்பாளர் திருமதி த.வில்வநாதன் தெரிவித்துள்ளார். (203)

# மீள்மதிப்பீட்டு கலந்துரையாடல் இன்று

அச்சுவேலி, நவ.4

வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஜி.ரி.இசற் நிறுவனத்தின் வேலைத் திட்டங்கள் தொடர்பான மீள் மதிப்பீட்டு கலந்துரையாடல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

கலந்துரையாடல் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது.

முற்பகல் நடைபெறும் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், ஜி.ரி.இசற் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதம ஆலோசகர் போல்றைஸ், ஜி.ரி.இசற் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்.இராஜசிங்கம், பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் ஆகியோர் கலந்து கொள்வர்.

பிற்பகல் நடைபெறும் கலந்துரையாடலில் ஜி.ரி.இசற் வேலைத்திட்ட இணைப்புக்குழு உறுப்பினர்களும் இவர்களுடன் கலந்துகொள்வர். (203-11)

# ஈழத் தமிழர்களின் பாரம்பரிய கலை வடிவங்களை வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லும் 'வானவில்' குழு

யாழ்ப்பாணம், நவ.4

ஈழத் தமிழர்களின் பாரம்பரிய கலை வடிவங்களை வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லும் திருமறைக் கலாமன்றத்தின் கலைப் பயணங்களின் தொடர்ச்சியாக மற்றுமொரு கலைக் குழுவினர் கடந்த 21 ஆம் கலைப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்திரு.நி.மரியசேவியர் அடிகள், பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் ஆகியோருடன் சென்றுள்ள இக் கலைக்குழுவுக்கு 'வானவில்' எனப் பெயரிடப் பட்டுள்ளது. 'வானவில்' குழுவினர் வெளி நாடுகளில் இயங்கும் திருமறைக் கலாமன்றங்களுடன் இணைந்து பல்வேறு கலை நிகழ்வுகளைத் தற்போது நடத்தி வருகின்றனர்.

இவற்றில் நாடக, நடன அளிக்கைகள், அரங்கப் பட்டறைகள், நூல் வெளியீடுகள் என்பன அடங்கும்.

இதுவரை ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, லண்டன் உட்பட பல நாடுகளில் கலை நிகழ்வுகளை நடத்தியுள்ள 'வானவில்' குழுவினர் தொடர்ந்தும் இன்னும் பல நாடுகளில் கலை நிகழ்வுகளை நடத்தவுள்ளனர். (203)




# வலி.தென்மேற்கில் .முன்பள்ளி மாணவருக்கு பசுப்பால் வழங்கும் திட்டம்

நவாலி, நவ.4

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அனைத்து முன்பள்ளி மாணவர்களுக்கும் பசுப்பால் வழங்கும் திட்டம் இந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் சுற்று நிருபத்தின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (203-100)

## வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலய சூனியப் பகுதியில்

# மக்கள் பாவனைக்கு விடப்பட்ட காணிகளில் பொருள்கள் சூறையாடப்படுவதாக விசனம்

யாழ்ப்பாணம், நவ.4

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உயர்பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையாக உள்ள சூனியப் பிரதேசத்தில் பொருள்கள் சூறையாடப்படுகின்றன என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சூனியப் பிரதேசத்தில் உள்ள காணிகளின் சொந்தக்காரர்கள் அங்கு சென்று பார்வையிடுவதற்கும் அவற்றைத் துப்புரவு செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் அப்பகுதிக்குச் செல்பவர்களால் ஏனையவர்களின் பொருள்கள் சூறை சூறையாடப்படுகின்றன என விசனம் தெரிவிக்கப்படுகிறது.கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் வலி.வடக்குபிரதேசசெயலர் பிரிவு, உடுவில் பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றில் குறிப்பிட்ட பகுதிகளில் மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வர அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதனைச் சாட்டாக வைத்து குறிப்பிட்ட பகுதிகளுக்குச் செல்லும் திருடர்கள் அங்குள்ள மரங்களை வெட்டியும் அங்கு உள்ள வீடுகளின் ஓடுகள், யன்னல்களை கழற்றியும் எடுத்துச் செல்கின்றனர் என பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச செயலர்கள் மற்றும் உயர் அதிகாரிகளிடம் பொது மக்கள் முறையிட்டுள்ளனர். (203-86)

# வலி. கிழக்கில் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது

யாழ்ப்பாணம், நவ.4

வலி கிழக்கு பிரதேசத்தில் கோதுமை மாவுக்கு பெரும் தட்டுப்பாடுநிலவி வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியில் கோதுமை மா இன்றி பாவனையாளர் சிரமம் அடைந்து வருகின்றனர்.

அத்துடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளிலும் கோதுமை மா கையிருப்பில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தனியார் வர்த்தக நிலையங்களில் கோதுமை மா ஒரு கிலோ 90 ரூபாவரை விற்பனை செய்யப்படுவதாகவும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-224)

# சான்றிதழுக்காகக் கற்பது என்று இருத்தல் கூடாது உங்கள் அறிவு சமூகப் புலத்திற்குச் செல்ல வேண்டும்

## யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் கூறுகின்றார்

நல்லூர், நவ.4

சான்றிதழுக்காக கற்பது என்று இருத்தல் கூடாது. உங்கள் அறிவு நீங்கள் வாழும் சமூகப் புலத்திற்குக் கொண்டு செல்லப்படவேண்டும். அறிவைப் பயன்படுத்துவதும் பயன்பாட்டைச் சமூகம் பெற உதவுவதும் உங்களது கடமை.



யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் இவ்வாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழகபுறநிலைப்படிப்புகள் அலகினால் மேற்கொள்ளப்பட்ட முன்பள்ளிக் கல்வி, அடிப்படை ஆங்கிலம், மனித உரிமைகளும் சமூக உரிமைகளும் ஆகிய கற்கை நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை புறநிலைப் படிப்பு அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் துணைவேந்தர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியவை வருமாறு:-

உலகில் மனித உரிமைக்குக் குரல் கொடுப்பதுபோல் சமூக உரிமைக்குக் குரல் கொடுக்கப்படுதில்லை.

சமூக உரிமை பற்றி மிகவும் அமைதியாகவே பேசப்படுகின்றது. இது அறியாமையா அல்லது அறிந்தும் அறியாமையா என்பது தெரியவில்லை. எனினும், மக்கள் மத்தியில் சமூக உரிமை குறித்துப் பேசப்படுகின்றது. சமூக உரிமை பற்றிக் கற்க வேண்டும்.

உலகத் தொடர்புக்கு ஆங்கில அறிவு அவசியம். தாய்மொழி கண்போன்றது. பிறமொழி கண்ணாடி போன்றது. உலகத்தைப் புரிந்துகொள்ள ஆங்கிலம் முக்கியம்.

பாலர்கல்வி ஒரு பிள்ளையின் வாழ்க்கைக்கு மிகவும் அடிப்படையான ஒன்று. அதனால்தான் வெளிநாடுகளில் பாலர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். இங்கு முன்பள்ளிகள் இருந்தாலும் அவை உரிய அளவிற்குக் கவனிக்கப்படுவதில்லை.

இது கல்வித் திணைக்களத்திற்குள்ளும் கல்வி அமைச்சுக்குள்ளும் இருந்தாலும் பல்கலைக்கழகத்தில் அந்தத்துறை முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும்.

எல்லோருக்கும் கல்வி என்ற நிலைக்கு அனைவரையும் கொண்டு செல்வதே இந்தக் கற்கை நெறியின் நோக்கம்.

புறநிலைகள் [illegible] முன்னாள் துணை[illegible] பிள்ளை அவர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார் இந்தப் பயிற்சி நெறிகள் மூலம் பெரும்பாலானவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

கலைப்பிரிவில் மட்டுமன்றி ஒவ்வொரு பிரிவிக்கும் இது விரிவுபடுத்தப்படும்- என்றார்.

### குறைந் செலவில் நிறைந்த கல்வி

வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை உரையாற்றும்போது:-

குறைந்த செலவில் நிறைந்த கல்வியைப் பெறும் வாய்ப்பு அனைவருக்கும் கிடைத்துள்ளது.

நாட்டின் நிலைமை சீராகும் பட்சத்தில் மாலை, இரவு நேரங்களில்கூட இந்தப் பயிற்சி நெறிகளை நடத்த முடியும்.

புறநிலைப்படிப்பின்ஊடாக நீங்கள்விரும்பிய கல்வியைப் பெறக்கூடியதாக உள்ளது.

நிறைவான கல்வியாக இதனைப் பெறும் பட்சத்தில் நேர்முகப் பரீட்சைகளில் சரியான உறுதியான பதில்களை வழங்கும் சந்தர்ப்பமும் கிடைக்கும்.காத்திரமான விடையளிக்கும் போது உங்கள் சான்றிதழ்கள் பெறுமானவையாகும்.

கற்கை நெறியில் பயில்பவர்கள் பல்கலைக் கழக வகுப்பறைக்குச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் தொண்டவர்களாக பலதரப்பட்ட கற்கை நெறிகளுக்காகத் தம்மைத் தயாராக்கிக் கொள்வார்கள்.

வருங்காலத்தில் ஒரே நேரத்தில் மேலும் பல கற்கை நெறிகளை ஏற்படுத்தி மாணவர் நன்மை பெற வழியமைக்கப்படும் - என்றார். (203-111)

# அச்சுவேலி தெற்கில் வீடுகள் கையளிப்பு

அச்சுவேலி, நவ.4

அச்சுவேலி தெற்கில் ஜி.ரி.இசற் நிறுவனத்தின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அச்சுவேலி தெற்கு நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோயில் முன்றிலில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், ஜி.ரி.இசற் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதம ஆலோசகர் போல்றைஸ், ஜி.ரி.இசற் நிறுவன யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.இராஜசிங்கம், வலி கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் உட்படப் பலர் கலந்துகொள்வர். (203-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட
திரு.திருமதி உதயசூரியன் றஞ்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## செல்வன் மதன்

அவர்கள்

தனது முதலாவது பிறந்த தினத்தை 04.11.2008 இன்று தனது இல்லத்தில்
கொண்டாடுகின்றார் இவரை அப்பா, அம்மா, அக்கா, தாத்தா, அப்பம்மா,
அம்மம்மா, மாமா, பெரியதாத்தா, அம்மம்மா, சித்தா, அன்ரா,
பெரியப்பா, பெரியம்மா, அக்கா மற்றும் உற்றார், உறவினர் நண்பர்கள்
அனைவரும் எல்லாம் வல்ல முருகப் பெருமானின் அருள் பெற்று
பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றார்கள்.



குடும்பத்தினர்.



### கார் விற்பனைக்கு

16 - xxxx இலக்க, வெள்ளைநிற NISSAN SUNNY கார் உடன் விற்பனைக் குண்டு.
தொடர்பு: இல.241, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P.No. 021 222 8076
(79626)

### பாலன் மில்ஸ்

தேங்காய், கொப்பறா, இலுப்பைப் பருப்பு, என் போன்றவற்றை 3 கிலோவில் இருந்து 1000 கிலோவரை உடன் எண்ணெய்யாக ஊற்றிப் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் NO.1 - R.S.T. மார்க் தேங்காய் எண்ணெயும் பெற்றுக் கொள்ளலாம். கிறைண்டிங் மில் அனுபவமுள்ள வேலை ஆள் தேவை.

பாலன் மில்ஸ்,
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.
(79631)

### அறைகள் வாடகைக்கு

பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய அறைகள் ஆண்களுக்கு உண்டு. மாணவர்கள், அலுவலர்கள் விரும்பத் தக்கது. உணவு வசதியுமுண்டு.
தொடர்பு: 077958244
(79607)

### தேவை

மெஸ்மெரிசம் தெரிந்தவர்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 122/4, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(78626)

### காணி விற்பனைக்கு

மாலிசந்தி, அல்வாய் வீதியில் 150 மீற்றர் தூரத்தில், வீதி ஓரத்தில் 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: முத்துச்சாமி
ஸ்ரீகாந்தி, மாலிசந்தி,
அல்வாய் தெற்கு, அல்வாய்.
(79627)


## விசேட தேவையுடைய...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி...)

***மாற்று ஆற்றலுள்ளோர் தினப்போட்டி**

சாதாரண மாணவர்கள் விசேடதேவையுள்ள மாணவர்களைத் தமது நண்பர்களாக, சகோதரர்களாக ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை விருத்தி செய்யும் நோக்குடன் இவ்வருடமும் சித்திர, இசை, நடன, நாடகப்போட்டிகளும் பேச்சு, கவிதை, கட்டுரைப்போட்டிகளும் கோட்ட, வலய மட்டங்களில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

***உபகரணம் வழங்கல்**

இனங்காணப்பட்ட 72 மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகளும், 02 காதுகேள்கருவிகளும், 02 சக்கரநாற்காலிகளும், கற்றல் உபகரணப் பொதிகளும் எமது நிதியிலிருந்தும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனும் வழங்கப்பட்டன.

***மாற்று ஆற்றலுள்ளோர் தினம்**

மாற்று ஆற்றலுள்ளோர் தினத்தை சிறப்பாகக் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தினத்தில் எமது பாடசாலை மாணவர்களுடன் சிவபூமி, ஆர்க், வாழ்வக மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளையும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

***ஆசிரியர்களுக்கான செயலமர்வு**

சிறந்த வளவாளர்களின் உதவியுடன் ஆண்டு தோறும் செயலமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆர்க்,சிவபூமி, வாழ்வகம் ஆகிய விசேட நிலையங்களிலும் விசேட செயலமர்வுகள் நடத்தப்பட்டன. இதுவரை 712ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், 236 இடைநிலைக்கல்வி ஆசிரியர்கள், 114அழகியற்கல்வி ஆசிரியர்கள், 73பட்டதாரி ஆசிரியர்கள், 47தற்காலிக இணைப்பு ஆசிரியர்கள், என மொத்தம் 1182 பேருக்கு விசேட கல்வியின் அடிப்படைக் கருத்துக்கள், உட்படுத்தல் கல்வியின் முக்கியத்துவம் மற்றும் கற்றல், கற்பித்தல் நுட்பங்கள் என்பன பற்றியும் அறிவூட்டல் செயலமர்வுகள் நடத்தப்பட்டுமேலும் அனைத்து ஆசிரியர்களுக்கும் தொடர் செயலமர்வுகள் நடத்தவும் திட்டமிடப் பட்டுள்ளது.

விசேட கல்வித் துறை வளர்ச்சிக்குப் பலரும் தமது ஒத்துழைப்பை நல்கும் போது நிச்சயமாக விசேட உதவி தேவைப்படு வோரிடையே மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பது நமது நம்பிக்கை.

அத்துடன் இவர்களின் மனங்களை சிதைக்கும் வார்த்தைப் பிரயோகங்களை நாம் தவிர்த்து அவர்களை நாம் மாற்று ஆற்றலுள்ளோர், மாற்று வலுவுள்ளோர், விசேட உதவி தேவைப்படு [illegible] தாகும். ✱


வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக
### உத்தியோகத்தர் நலன்புரிச் சங்க
### அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

#### வெற்றி இலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | முதலாம் பரிசு | - DVD Player | - 13590 |
| 02. | இரண்டாம் பரிசு | - Electric Oven | - 00530 |
| 03. | மூன்றாம் பரிசு | - Stand Fan | - 10522 |
| 04. | 15 ஆறுதல் பரிசில்கள் | - Wall Clocks | - 19412, |

14307, 17439, 05509, 19664, 12692, 17868, 11152, 06452, 04952, 18230, 14429, 03729, 12709, 02001

மேற்குறித்த சீட்டிழுப்பு வெற்றியாளர்கள் தமது அதிஷ்ட இலாபச் சீட்டுடன் 30.11.2008ஆம் திகதிக்கு முன்னதாக அலுவலக நேரத்தில் சமுகந்தந்து தமக்குரிய பரிசுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வி.கே.சண்முகநாதன்
செயலாளர்
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், கரவெட்டி

சி.சத்தியசீலன்
தலைவர்
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், கரவெட்டி

(8555183)


# வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளில்....



செலிங்கோ இன்சூரன்ஸ் நெல்லியடிக் கிளையின் காப்புறுதியாளர் சு.நாகேந்திரம் பிரான்சில் காலமானதையடுத்து அவருக்கான இழப்பீட்டுத் தொகையாக 2 லட்சத்து 12 ஆயிரம் ரூபாவும் கல்விக் கொடுப்பனவாக 3 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

மரணமானவரின் மைத்துனரிடம் கிளை முகாமையாளர் ரி.நிரோஜன் காசோலை வழங்குவதையும் விற்பனை நிறைவேற்று அதிகாரி வி.பாஸ்கரன், விற்பனை நிறைவேற்றுனர் ஜே.வெஸ்லி பிரசாந்த் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.




மக்கள் வங்கி சுன்னாகம் கிளையின் ஏப்ரல், மே மாதங்களுக்கான 'ஜயஸ்ரீ' சீட்டிழுப்பில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

பரிசில் பெற்ற ந.பாலசுப்பிரமணியம், வ.மூர்த்தி ஆகியோருடன் கிளை உதவி முகாமையாளர்களான சு.இராசமனோகரன், அ.தேவகுமாரன் ஆகியோர் நிற்கின்றனர்.




ஜனசக்தி காப்புறுதி நிறுவன நெல்லியடிக் கிளையில் காப்புறுதியாளராக இருந்து, அண்மையில் அகால மரணமடைந்த தயாபரனுக்கு 2 லட்சம் ரூபா காப்புறுதித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மரணமானவரின் மனைவியிடம் கிளை உதவி முகாமையாளர் க.செல்வராஜன் காப்புறுதித் தொகையை வழங்குகின்றார். அருகில் வியாபார அபிவிருத்தி நிறைவேற்று அதிகாரி சு.ஞானேஸ்வரன், விற்பனை ஆலோசகர் ஞா.ஜினோசன் ஆகியோர் நிற்கின்றனர்.



இலங்கை வங்கி மானிப்பாய் கிளையினர் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் பொன் அரும்புகள் மன்றத்தின் ஊடாக, ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் கற்கும் மாணவர்களுக்கு வங்கியியல் தொடர்பான கருத்தரங்கை அண்மையில் நடத்தினர்.

கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவர்களும் காங்கேசன்துறை கிளை முகாமையாளர் [illegible], மானிப்பாய் கிளை முகாமையாளர் க.இலட்சுமணசர்மா, வங்கி ஊழியர்களான [illegible]பேந்திரன், ரி.சுதாகரன் கல்லூரி அதிபர் கு.ஜெயவீரசிங்கம் மற்றும் ஆசிரியர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இராணுவத்தைப் புலிகளிடமிருந்து மீட்ட இந்தியா அப்பாவித் தமிழர்களை அரசிடமிருந்து காப்பாற்ற முடியாதா?

## 'விகடனு'க்கு வழங்கிய செவ்வியில் பழ. நெடுமாறன் கேள்வி

ஏழு வருடங்களுக்கு முன்பு சிங்கள இராணுவத்தின் வலிமை வாய்ந்த ஆனையிறவை முகாமை நிர்மூலமாக்கி, யாழ்ப்பாணத்தை நோக்கி புலிகள் முன்னேறினர். அப்போது யாழில் சிக்கிய 30 ஆயிரம் இராணுவத்தினரைக் காப்பாற்ற இந்தியா தலையிட்டு, புலிகள் மேற்கொண்டு முன்னேறக்கூடாது என்று தடை விதித்தது. எனவே, புலிகளுக்கு நிர்ப்பந்தம் கொடுத்ததைப் போல தமிழர்களைக் கொல்ல வேண்டாம் என இலங்கைக்கு இந்தியா நிர்ப்பந்தம் கொடுக்கமுடியாதா?

- இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளிவரும் விகடனுக்கு வழங்கிய செவ்வியில் பழ.நெடுமாறன் கேள்வியெழுப்பியுள்ளார்.

அத்துடன், அதுவொரு உள்நாட்டுப் பிரச்சினை என்று கைகழுவுவதற்கு இந்திய அரசின் உயர் பதவிகளில் இருக்கும் சில தமிழின எதிரிகள்தான் காரணம் என்றும் கூறியுள்ளார்.

அந்தச் செவ்வியின் விவரம் வருமாறு -

கே - ஈழத் தமிழருக்கான நிதி வசூல் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப - 2006ஆம் ஆண்டின் இறுதியில், தமிழகம் முழுவதிலுமிருந்து உணவு மற்றும் மருந்துப் பொருட்களைத் திரட்டினோம். அவற்றை பாதிக்கப்பட்ட மக்களிடம் சேர்க்கக்கோரி இந்திய செஞ்சிலுவைச் சங்கத்துக்குக் கடிதம் எழுதினோம். சில மாதங்கள் கழித்து, 'காலதாமத்துக்கு வருந்துகிறோம். நீங்கள், மத்திய அரசிடம் வலியுறுத்துங்கள்' என்று சொல்லிவிட்டனர்.

பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு, 'அரிசி, பருப்புகள் கெட்டுப் போகின்றன. மருந்துகள் காலாவதியாகும் திகதியை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. நீங்கள்தான் உதவ




வேண்டும்' என்று முதல்வர் கருணாநிதிக்கு கடிதம் எழுதினேன். எந்த நடவடிக்கையும் இல்லை. அதனால், 'நாங்களே படகுகள் மூலமாகப் பொருட்களை எடுத்துச் செல்வோம்' என்று அறிவித்தோம். உடனே, எங்களைக் கைது செய்தார்கள், ஆகவே, நான் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க நேரிட்டது.

அப்போது கருணாநிதி சார்பாக டாக்டர் ராமதாஸ் வந்து, 'முதலமைச்சருடைய வாக்குறுதியை நீங்கள் நம்பலாம். உடனே, உண்ணாவிரதத்தைக் கைவிடுங்கள்' என்றார். நானும் கைவிட்டேன். ஆனால், அதன் பிறகும் எதுவும் நடக்கவில்லை. எல்லாமே வீணாகி விட்டது. இருந்தாலும், இன்று அதே முயற்சியை தமிழக முதல்வர் எடுத்திருப்பது எனக்கு ஓரளவு நிம்மதியைத் தருகிறது. எப்படியாவது மக்களுக்கு நிவாரணப்பொருட்கள் போய்ச் சேர்ந்தால் சரிதான்.''

கே- இலங்கை அரசு, இந்தப் பொருட்களை, பாதிக்கப்பட்ட மக்களிடம் சேர்த்துவிட முடியுமா?''

ப- சுனாமி வந்தபோது அதிகம் பாதிக்கப்பட்டது ஈழத் தமிழர்கள்தான். இதற்காக உலகம் முழுவதிலுமிருந்து ஏராளமான உதவிப் பொருட்கள் குவிந்தன. இதை வழங்குவது குறித்து நோர்வேப் பிரதிநிதிகள் தலைமையில் இரண்டு சிங்களவர்கள், இரண்டு தமிழர்கள் கொண்ட குழு முடிவெடுக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டது. 'அப்படிச் செய்தால், அது புலிகளுக்குத்தான் போய்ச் சேரும்' என்று இலங்கை அதிபராக இருந்த சந்திரிகா அதற்கு ஒப்புக்கொள்ளாததுடன், அந்த உதவிப் பொருட்களைத் தன்னிடமே வைத்துக்கொண்டார். ஆக, சர்வதேச சமூகம் கொடுத்த உதவியையே தன்னிடம் வைத்துக்கொண்ட ஒரு அரசு, இப்பொழுது இந்தியா கொடுக்கும் உதவியை ஒழுங்கான முறையில் கொண்டுபோய் சேர்க்குமா என்ற ஐயம் எனக்கு இருக்கிறது. எனவே, இந்தப் பொருட்களை செஞ்சிலுவைச் சங்கம் அல்லது ஐ.நா. அமைப்பு மூலம் வழங்கவேண்டும். அதை மேற்பார்வையிட தமிழகப் பிரதிநிதிகளை அனுமதிக்கவேண்டும். இதற்காக சமயப் பெரியோர்களை இலங்கைக்கு அழைத்துச் செல்லலாம்.

கே- முதல்வர் கருணாநிதி அரசியல் ஞானி. அவர் இலங்கை வந்து பேச்சு நடத்த வேண்டும் என்று ஆங்கில நாளேட்டுக்கு அளித்துள்ள பேட்டியில் மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளாரே?

ப- இது பிரச்சினையைத் திசை திருப்புவதற்கான ஒரு தந்திரம்தான். ஏற்கனவே இந்திரா பிரதமராக இருந்தபோது, ஜி.பார்த்தசாரதி போன்ற மூத்த ராஜதந்திரிகள் மற்றும் அரசு பிரதிநிதிகள் அனுப்பப்பட்டு, வட்ட மேசை மாநாடுகள் நடத்தப்பட்டன. அதன்படி தமிழர்களிடம் அதிகாரங்களைக் கொடுப்பதற்கான 'அனெக்சர் - சி' திட்டத்தை ஜெயவர்த்தன ஒப்புக்கொண்டார்.

திட்டம் நிறைவேறுவதற்குள் இந்திரா படுகொலை செய்யப்பட்டுவிட்டார். உடனே திட்டத்தை குப்பையில் போட்ட ஜெயவர்த்தன, ஜி.பார்த்தசாரதி வந்தால் இனிமேல் பேசமாட்டோம் என்றும் சொல்லிவிட்டார். இப்படிப் பட்டவர்கள் வரிசையில்தான் மஹிந்த ராஜபக்ஷவும் வருகிறார். எனவே, அழைப்பை நம்பிப் போவது குறித்து முதல்வர்தான் முடிவு செய்யவேண்டும்.

கே- இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவிகளை அளிக்காவிட்டால், சீனாவும் பாகிஸ்தானும் முந்திக் கொள்வார்கள். இதனால் நமக்குத்தான் ஆபத்து என்பதல்லவா இந்திய அரசின் நிலைப்பாடு..?

ப- பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் சொல்கின்ற காரணம்தான் இது. இந்தியா ஆயுத உதவி அளித்துவருவதால் சீனாவிலும் பாகிஸ்தானிலும் ஆயுத வாங்குவதை இலங்கை நிறுத்திவிட்டதா என்ன? இலங்கைக்குப் பக்கத்தில் இந்தியா தவிர, வேறு எந்த நாடும் கிடையாது. அப்படியிருக்க, எதற்காக இவ்வளவு ஆயுதங்கள்? சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஏன் இவ்வளவு அக்கறை? ஒன்று இந்தியாவைத் தாக்க வேண்டும். அல்லது இலங்கைத் தமிழர்களைத் தாக்கவேண்டும். அதுதானே உண்மை! மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவை ஏமாற்றுகிறார். இந்திய அரசும் அதையே சொல்லித் தமிழர்களை ஏமாற்றுகிறது.

இந்திரா பிரதமராக இருந்தபோது, திருகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்கக் கடற்படை தளம் அமைப்பது பற்றி ஜெயவர்த்தன ரகசியப் பேச்சில் ஈடுபட்டார். இதை அறிந்ததும், 'இந்துமாக் கடலில் அந்நிய இராணுவத் தளம் அமைவது இந்தியாவுக்கு எதிரான செயல். இதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்' என்று பகிரங்கமாக எச்சரித்தார் இந்திரா. உடனே, பயந்துகொண்டு வாலைச் சுருட்டிக்கொண்டார் ஜெயவர்த்தன. அது மாதிரி இரும்புக் குரலில் சொல்வதற்கு இன்றைய இந்திய அரசுக்குத் துணிவில்லை.

கே- இலங்கையில் நடக்கும் இனப் போரைத் தடுத்து நிறுத்தவே முடியாதா?

ப- ஏழு வருடங்களுக்கு முன்பு சிங்கள இராணுவத்தின் வலிமை வாய்ந்த ஆனையிறவு முகாமை புலிகள் நிர்மூலமாக்கினர். மூவாயிரம் சிங்கள இராணுவத்தினர் அப்போது இறந்து போனார்கள். ஆனையிறவைத் தாண்டி யாழ்ப்பாணத்தை நோக்கி புலிகள் முன்னேறினார்கள். யாழ்ப்பாணத்தில் முப்பதாயிரம் சிங்களச் சிப்பாய்கள் சிக்கிக்கொண்டனர். அந்தக் கட்டத்தில் இந்தியா தலையிட்டு, புலிகள் மேற்கொண்டு முன்னேறக்கூடாது என்று தடை விதித்தது. அதைப் புலிகளும் ஏற்றுக்கொண்டார்கள். அவர்களுக்கு நிர்ப்பந்தம் கொடுத்ததைப்போல தமிழர்களைக் கொல்லவேண்டாம் என இலங்கைக்கு இந்தியா நிர்ப்பந்தம் கொடுக்கமுடியாதா? அது உள்நாட்டுப் பிரச்சினை என்று கைகழுவுவதற்குக் காரணம், இந்திய அரசின் உயர் பதவிகளில் இருக்கும் சில தமிழின எதிரிகள்தான். இங்கே, மத்திய உளவுத்துறையின் ஆணைப்படி அறிக்கை விடும் தலைவர்களில் ஜெயலலிதாவும் ஒருவர்.



கே- அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நீங்களும் கலந்து கொண்டீர்கள். அங்கே தமிழக எம்.பிக்கள் ராஜினாமா எச்சரிக்கை விடுக்கப்பட்டு, மத்திய அரசுக்கு கெடுவும் நிர்ணயிக்கப்பட்டது. அது பற்றி..?

ப- போர் நிறுத்தம் பற்றியும், இலங்கை இராணுவத்துக்கு மத்திய அரசு தொழில்நுட்ப உதவிகள் செய்வதை நிறுத்துவது பற்றியும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இந்த இரண்டு முக்கியமான தீர்மானங்களைப் பற்றி யாரும் கண்டுகொள்ளவே இல்லை. இலங்கை அரசின் பிரதிநிதிகளோடு பேசிவிட்டு தமிழகம் வந்து முதல்வரிடம் அதனைத் தெரிவித்த வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் இதுபற்றி வாயே திறக்கவில்லை.

அப்படி இருக்கையில், எம்.பிக்கள் ராஜினாமா என்கின்ற நிர்ப்பந்தம் அப்படியேதான் இன்னமும் இருக்கிறது. எனவே, முதல்வர் கலைஞர் மீண்டும் ராஜினாமா விடயத்தை முன்னிலைப்படுத்தி, மத்திய அரசை வற்புறுத்தி இலங்கைத் தமிழர் விடிவுக்கு வழிகோல வேண்டும். நாங்களும் இந்த விடயத்தைக் கலைஞரிடம் தொடர்ந்து வலியுறுத்துவோம் - என்றார் நெடுமாறன்.

# ஜெயலலிதாவுக்கு புலிகளுடன் தொடர்பாம்!

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் பொன்முடி

சென்னை, நவ. 4

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மூலம் விடுதலைப் புலிகளுடன் ரகசியத் தொடர்பு வைத்திருப்பவர் ஜெயலலிதா - என்று உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி குற்றம் சாட்டியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட போது, அந்த இடத்தில் அ.தி.மு.கவைச் சேர்ந்த ஒருவர் கூட இல்லாததே இதற்குச் சான்று என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு-

புலிகளுக்கு தி.மு.க. ஆதரவு என்பது போல புரளியைக் கிளப்பி காங்கிரஸுக்கும், தி.மு.கவுக்கும் மோதலை உருவாக்க ஜெயலலிதா முயற்சிக்கிறார். ராஜீவ் காந்தி படுகொலைக்கு முன், படுகொலைக்குப் பின் என்று ஈழத்தமிழர் விடயத்தைப் பகுத்து பார்த்து அங்கு வாழும் அப்பாவித் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கிறோம் என்று முதலமைச்சர் கருணாநிதி பல முறை கூறிய பிறகும், ஜெயலலிதா தன் பழைய பல்லவியை விடுவதாக இல்லை.

கூட்டணி கட்சித் தலைவரான ராஜீவ் காந்தி ஸ்ரீபெரும்புதூருக்கு வந்த போது, அதில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்து, கிருஷ்ணகிரி சென்றது ஏன் என்று இதுவரை அவர் பதில் சொல்லவில்லை. மேலும் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட அன்று அ.தி.மு.கவினர் ஒருவர் கூட அங்கு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அன்று முதல் இன்று வரை விடுதலைப் புலிகளோடு அவர் வைத்துள்ள ரகசிய தொடர்புதான் இதற்குக் காரணம். தமிழக அரசால் வழங்கப்படும் பொருட்கள் ஐ.நா. மூலமாக இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படும் என்று கருணாநிதி கூறிய பின்னரும், வசூல் செய்வதெல்லாம் விடுதலைப் புலிகளுக்கே என்று அவர் அறிக்கை விடுகிறார். புலிகள் மீதுள்ள பயத்தால் வைகோ மூலம் அவர்களுக்கு இன்றளவும் ஜெயலலிதா செய்யும் மறைமுக உதவிகள் விரைவில் வெளிவரும்.

வைகோவுடன் கைகோர்த்துக் கொண்டு தன்னைப் புலிகளின் எதிரி போல நாடகம் ஆடும் தந்திரம் மக்களுக்கு புரியும். 20 ஆண்டுகளுக்கு முன்பு கருணாநிதி பிறந்த நாளின் போது வசூலிக்கப்பட்ட தொகையைப் பிரித்து அனைத்து இலங்கைப் போராளிகளுக்கும் கொடுத்த போது, அ.தி.மு.க. ஆட்சியில் இருந்த காரணத்தால் அவர்களுக்கு கோபம் வந்துவிடும் என்ற எண்ணத்தோடு, அதை வாங்க மறுத்தவர்கள்தான் விடுதலைப் புலிகள்.

திரட்டப்படும் பணம் புலிகளுக்குச் செல்லும் என்ற சந்தேகம் மக்களுக்கு இல்லை.

இலங்கைத் தமிழ் பெண்களுக்கு 'நைற்றி' வழங்குகிறோம் என ஜெயலலிதா குற்றம் சாட்டியிருக்கிறார். அந்த உடை தமிழ் பண்பாட்டுக்கு விரோதமானதா?

தயாளு அம்மாள் 5 லட்சம் ரூபா காசோலை அளித்ததை பற்றி கூறியிருக்கிறார். சில ஆண்டுகளுக்கு முன்பு சன் டி.வியில் பங்குதாரராக இருந்து விலகியதற்காக கிடைத்த 100 கோடி ரூபாவில் இருந்து குடும்பத்தாருக்கு திருப்பி கொடுத்தது போக மீதி 9.50 கோடி ரூபா வங்கியில் தன் பெயரில் வைப்புச் செய்துள்ளார். அதற்கு மாதந்தோறும் வட்டியும் வருகிறது. முறையாக வருமானவரியும் கட்டியிருக்கிறார். ஜெயலலிதா போல வருமானவரியை கட்டாமல் வழக்குகளில் சிக்கி நீதிமன்றத்தில் நெடிய படிக்கட்டுகளை ஏறி இறங்கிக் கொண்டிருப்பவர் தயாளு அம்மாள் அல்ல. ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கைக்கு பதிலாகத்தான் இந்த அறிக்கை வெளியிடப்படுகிறது - என்றுள்ளது.

# 2020இல் செவ்வாய்க்கிரகத்துக்குச் செல்லும் அளவிற்கு இந்தியாவில் விஞ்ஞான வளர்ச்சி!

## அப்துல் கலாம் பெருமிதம்

திருச்சி, நவ.4

2020ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்திற்கு செல்லும் அளவிற்கு இந்தியாவில் விஞ்ஞான வளர்ச்சி ஏற்படும் - என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் நேற்றுமுன்தினம் திருச்சியில் இந்தியத் தொழில் கூட்டமைப்பு சார்பாக ஜோசப் கல்லூரியில் நடந்த விழாவிலும், போலியோவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செயற்கை கால்கள் வழங்கும் விழாவிலும் கலந்து கொண்டார். ஜோசப் கல்லூரியில் இளம் உள்ளங்கள் இந்தியாவின் எதிர்காலம் என்ற தலைப்பில் பாடசாலை மற்றும் கல்லூரி மாணவர்களுடன் அப்துல்கலாம் சந்தித்து கலந்துரையாடும் நிகழ்ச்சி நடந்தது.

பாடசாலைக் கல்லூரி மாணவ-மாணவிகள் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளித்து பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு-

அறிவு என்பது படைப்புத்திறன், மனத்தூய்மை, துணிச்சல் மூன்றும் சேர்ந்ததாகும். நல்ல எண்ணங்கள் நல்ல அறிவை கொடுக்கும். சந்திராயன் செயற்கைகோள் இந்தியாவின் மிகப் பெரிய சாதனையாகும். நவம்பர் 8ஆம் திகதி முதல் செயற்கைக்கோள் முழு அளவில் செயற்படத் தொடங்கி சந்திரன் பற்றிய முழுமையான தகவல்களை நமக்கு அனுப்பும். 2020 இல் செவ்வாய்க் கிரகத்திற்குப் போகக்கூடிய அளவில் நம்நாட்டில் விஞ்ஞான வளர்ச்சி ஏற்படும்.

2020இல் இந்தியா அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியடைந்த நாடாக நிச்சயம் விளங்கும். நம்மால் முடியும் என்று நினைத்தால் நம்மால் எதுவும் முடியும். நம்மால் முடிந்தால் அது இந்தியாவால் முடியும். நான் படிக்கும் காலத்தில் சிவசுப்பிரமணிய அய்யர் என்ற ஆசிரியர் எனக்கு பறவைகள் எப்படி பறக்கிறது என்பது பற்றி விளக்கிக் கூறினார். அதுவே எனக்கு ஆகாயத்தில் பறக்க வேண்டும் என்ற கனவை ஏற்படுத்தி ரொக்கெட் தயாரிப்பில் ஊக்கம் கொடுத்தது.

படித்த இளைஞர்கள் ஆர்வமுடன் அரசியலுக்கு வந்து சிறப்பாக செயற்பட வேண்டும். நாட்டின் வளர்ச்சி பற்றிய முக்கிய முடிவுகள்



எடுக்கும் இடம் அரசியல்தான். இளைஞர்கள் அரசியலுக்கு வந்து நல்ல முறையில் செயற்பட வேண்டும். இளைஞர்கள் தீயபழக்கங்களை விட்டுவிட்டு மனத்தூய்மையுடன் செயற்பட வேண்டும். மனத்தூய்மையை பெற்றோர்களிடம் இருந்தும் ஆரம்ப கல்வி ஆசிரியர்களிடம் இருந்தும் நாம் கற்றுக் கொள்ள முடியும்.

அமெரிக்காவை நம்பி நமது தகவல் தொழில்நுட்பத்துறை இல்லை. இந்தியாவிலேயே தகவல் தொழில் நுட்பத்துறையில் ஏராளமான வேலைவாய்ப்புகள் உள்ளது. அணுசக்தி மூலம் நமக்கு தேவையான யுரேனியம் கிடைக்க வாய்ப்பு உள்ளது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இன்று!

## வெல்வாரா ஒபாமா?

வாஷிங்டன்,நவ.04

இன்று நடைபெறும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக்கட்சி வேட்பாளர் பராக் ஒபாமா, குடியரசுக்கட்சி வேட்பாளர் ஜோன் மெக்கைன் ஆகியோர் உட்பட மொத்தம் ஆறு வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள்.

தற்போதைய ஆளுங்கட்சியான குடியரசுக்கட்சி சார்பில் அரிசோனா மாநிலத்தைச் சேர்ந்த செனட் உறுப்பினர் ஜோன் மெக்கைனும், எதிர்க்கட்சியான ஜனநாயக் கட்சி சார்பில் இலினாய்ஸ் மாநிலத்தைச் சேர்ந்த செனட் உறுப்பினர் பராக் ஒபாமாவும் போட்டியிடுகிறார்கள். இவர்களுக்கிடையேதான் நேரடிப் போட்டி நிலவுகிறது.

இவர்களைத் தவிர, லிபரேஷன் கட்சி சார்பில் முன்னாள் எம்.பி.பாப் பார், கொன்ஸ்டிடியூசன் கட்சி சார்பில் வானொலி தொகுப்பாளர் சக் பொல்ட்வின், கிரீன் கட்சி சார்பில் முன்னாள் பெண் எம்.பி சிந்தியா மெக்கினி, சுயேச்சையாக ரால்ட் நடேர் ஆகியோரும் போட்டியிடுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலுடன் துணை ஜனாதிபதித் தேர்தலும் இன்று நடைபெறுகிறது.


பராக் ஒபாமா


ஜோன் மெக்கைன்

இதில் குடியரசுக் கட்சி சார்பில் அலாஸ்கா மாநில ஆளுநர் சாரா பாலின் போட்டியிடுகிறார். ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோ பிடன் போட்டியிடுகிறார்.

இந்தத் தேர்தலையொட்டி, கடந்த ஜூனில் ஜோன் மெக்கைனும், ஒபாமாவும் தத்தம் கட்சி வேட்பாளராக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டனர். அதைத்தொடர்ந்து, வாக்காளர்களிடம் இருவரும் பிரசாரம் செய்யத் தொடங்கினர். இன்று நடைபெறும் தேர்தலையொட்டி ஜோன் மெக்கைன், விர்ஜினியா மாநிலத்தில் இறுதிக்கட்ட பிரசாரம் செய்தார். இந்த மாநிலத்தில், 1964 ஆம் ஆண்டிலிருந்து குடியரசுக் கட்சிதான் வெற்றி பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. அங்கு ஜோன் மெக்கைன் பிரசாரம் செய்கையில், கருத்துக் கணிப்பில் பின்தங்கி இருந்தாலும், முன்னேறி வருவேன் என்று கூறினார்.

நெவடா,கொலராடோ, மிசோரி ஆகிய மாநிலங்களில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஒபாமா இறுதிக்கட்ட பிரசாரத்தில் ஈடுபட்டார். இவை கடந்த தேர்தலில் புஷ்ஷுக்கு வெற்றி தேடித்தந்த மாநிலங்கள் ஆகும். ஒபாமா தனது பிரசாரத்தின் போது, 'எங்களுக்கு சாதகமான அலை வீசுகிறது. இந்த தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவேன். அமெரிக்காவில் முழுமையாக மாற்றத்தைக் கொண்டு வருவோம். எங்களால் முடியும்' என்று கூறினார்.

குடியரசுக் கட்சியின் துணை ஜனாதிபதி வேட்பாளர் சாரா பாலின், புளோரிடாவில் இறுதிக்கட்ட பிரசாரம் செய்தார். அப்போது அவர், ஒபாமா வெற்றி பெற்றால், வரியை உயர்த்தி விடுவார் என்று குற்றஞ் சாட்டினார்.

தேர்தல் நெருங்கும் வேளையில், ஒபாமாவுக்கு ஆதரவாக அவரது கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி கிளிண்டன் பிரசாரம் செய்தார். ஆனால் ஜோன் மெக்கைனுக்கு ஆதரவாக, ஜனாதிபதி புஷ் பிரசாரம் செய்யவில்லை. புஷ்ஷின் செல்வாக்கு சரிந்து விட்டதாக கருதப்படுவதால், அவரை யாரும் பிரசாரத்துக்கு அழைக்கவில்லை என்று தெரிகிறது.

இரு வேட்பாளர்களின் ஆதரவாளர்களும் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தல், தொலைபேசி மூலம் வாக்குக் கேட்டல் போன்ற வழிமுறைகளில் ஆதரவு திரட்டி வந்தார்கள்.

இந்தத் தேர்தலில் ஒபாமா வெற்றி பெற்று ஜனாதிபதியானால் அமெரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதி என்ற பெருமையை பெறுவார். அவர் ஹவாய் தீவில் பிறந்த ஆபிரிக்க அமெரிக்கர் ஆவார்.

கவர்ச்சிப் புயல் என்ற அடைமொழியுடன் பிரபலம் ஆகிவிட்ட சாரா பாலின், துணை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் முதலாவது பெண் துணை ஜனாதிபதி என்ற பெருமையைப் பெறுவார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுடன், பதவிக்காலம் முடிவடைந்த 11 மாநில ஆளுநர்களின் பதவிக்கான தேர்தலும், 33 மாநிலங்களில் செனட் தேர்தலும், அனைத்து மாநிலங்களின் பிரதிநிதிகள் சபை தேர்தலும் இன்று நடைபெறுகின்றன.

## லண்டனில் மீண்டும் அந்திராக்ஸ்!

கிழக்கு லண்டனில் மீண்டும் அந்திராக்ஸ் நோய் பரவுவதற்கான அபாயம் ஏற்பட்டுள்ளது. இசைக் கருவி தயாரிக்கும் தொழிலாளி பெர்னாண்டோ கோமஸ் (வயது 35) அண்மையில் அந்திராஸ் நோயால் பாதிக்கப்பட்டார்.

இதையடுத்து, மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர், ஒருவார காலமாகச் சிகிச்சை பெற்றார். எனினும், சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டார்.

இங்கிலாந்தின் லண்டன் நகரில் 2006 ஆம் ஆண்டும் அந்திராக்ஸ் நோய் தீவிரமாகப் பரவியது. எனினும், தீவிர தடுப்பு நடவடிக்கைகளால் இந்நோய் மேலும் பரவாமல் தடுக்கப்பட்டிருந்தது.

உலக அரங்கில்

## அரசியலில் இருந்து ஒதுங்கியுள்ள முஷாரப் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டோம்!

### பாக்.பிரதமர் அறிவிப்பு

இஸ்லாமாபாத், நவ. 04

''பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் அரசியலிலிருந்து ஒதுங்கியிருப்பதால், அவருக்கு எதிராக எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது'' என, பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி, துருக்கிய பத்திரிகையொன்றுக்குத் தாம் அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தம் பேட்டியில், இது தொடர்பாக மேலும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :-

''முன்னாள் ஜனாதிபதி முஷாரப் தற்போது அரச விவகாரங்கள் எதிலும் தலையிடுவதில்லை. அரசியல் விடயங்களில் அவர் அக்கறை செலுத்துவதில்லை. அரசியலிலிருந்து விலகியிருக்கும் வரை அவருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.

''தற்போது நாங்கள் பயனற்ற விடயங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, பயங்கரவாதம், வறுமை, பசி, நோய்கள் ஆகியவற்றிற்குப் பரிகாரம் காண்பதில் மும்முரமாக அக்கறை செலுத்துகின்றோம். சுகாதார நலன்கள், கல்வி மேம்பாடு ஆகியவற்றிலும் கூடிய கருத்துச் செலுத்துகின்றோம்.

''கடந்த பெப்ரவரியில் பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. மக்கள் மாற்றத்தை விரும்பியும், அதனை எதிர்பார்த்துமே வாக்களித்தார்கள். தேர்தலுக்குப் பின்னர் மக்களின் அபிலாஷைகளை அப்போது ஜனாதிபதியாகவிருந்த முஷாரப்பிடம் தெரிவித்துக்கொண்டோம்.

''அத்துடன் பதவி விலகுமாறும் அவரைக் கேட்டுக்கொண்டோம். நாடாளுமன்றத்தில் தமக்கு ஆதரவு கிடையாது என்பதை உணர்ந்து, அவரும் கௌரவத்தோடு தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டார்.

''எங்கள் பாகிஸ்தான் மக்கள் கட்சி முஷாரப்பிற்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்ற விசாரணைப் பிரேரணையொன்றைக் கொண்டு வரவும் முனைந்தது. எனினும் அதற்கு முன்னரே அவர் பதவி துறந்துவிட்டார்.''

இவ்வாறு பிரதமர் யூசுப் ராஸா கிலானி தம் பேட்டியில் விவரித்துள்ளார்.


## பிரேஸிலில் விமான விபத்து அதில் பயணித்த 5 பேரும் பலி

ரியோடிஜெனிரோ,நவ.4

தென்மேற்கு பிரேஸிலில் சிறு விமானம் ஒன்று நொறுங்கி விழுந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 5 பேர் உயிரிழந்தனர். பிரேஸிலின் எல்லையில் பராகுவே அருகே பரானா என்ற இடத்தில் இந்த விபத்து நிகழ்ந்ததாக பிரேஸிலின் தீயணைப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.இந்த விமானத்தில் பயணம் செய்த ஒரு பெண் உட்பட ஐந்து பேரும் விபத்தில் இறந்தனர் என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சோலோடா என்ற இடத்திலிருந்து அரபோங்காஸ் என்ற இடத்திற்குச் சென்று கொண்டிருந்த போது இந்த விமானம் விபத்துக்குள்ளானது. விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

## சதாமின் சொகுசுக் கப்பல் ஈராக்கில் ஏலத்துக்கு வருகிறது



ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூஸைனின் சொகுசுக் கப்பலை, ஈராக்கிய அரசு ஏலத்தில் விடுவதற்கு முன் வந்துள்ளது. இந்த சொகுசுக் கப்பல் இலங்கை நாணய மதிப்பில் 564 கோடி ரூபாவுக்கு ஏலம் போகக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சதாம் ஹுஸைன் ஆட்சியிலிருந்த போது அவருக்காக டென்மார்க் நாட்டு நிறுவனம் இந்த சொகுசுக் கப்பலை உருவாக்கியது. இந்தச் சொகுசு கப்பல் 270 அடி நீளம் கொண்டது. நீச்சல் குளம், திரைப்பட மாளிகை, ஹெலிக்கொப்டர் தளம், தங்கக் கட்டிலுடன் கூடிய படுக்கை அறை, தங்கத்தால் ஆன குழாய்களுடன் குளியல் அறை ஆகியவையும் இதில் இடம் பெற்றுள்ளன.

எனினும், ஒருநாள் கூட இந்தக் கப்பலில் சதாம் ஹுஸைன் பயணம் செய்தது கிடையாது. அரசியல் எதிரிகளால் ஆபத்து வந்து விடும் என்ற பயம்தான் இதற்குக் காரணம்.

சதாம் ஹுஸைனுக்குப் பின்னர் இந்த சொகுசுக் கப்பல் யாருக்கு என்ற சர்ச்சை எழுந்தது. சவூதி அரேபியாவிலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த கப்பல் எங்களுக்கே சொந்தம் என்று ஒரு ஜோர்தான் நிறுவனம் நீதிமன்றத்துக்குச் சென்றது. சதாம் ஹுஸைன் அந்தக் கப்பலை தங்களுக்கு தந்து விட்டார் என்றும் அந்நிறுவனம் கூறியது.

ஆனால் பிரான்ஸ் நீதிமன்றம் அந்தக் கப்பலை ஈராக்குக்கே சொந்தம் என்று தீர்ப்பு கூறியுள்ளது. இப்போது ஈராக்குக்கு சொந்தமான இந்தக் கப்பலை ஈராக் அரசு ஏலத்தில் விட முன்வந்துள்ளது.

## செயற்கை இருதயத்தைஉருவாக்கி பிரான்ஸ் மருத்துவர்கள் சாதனை!

பரிஸ்,நவ.04

மனிதனின் சொந்த இருதயத்தையொத்த செயற்பாடுகளைக் கொண்ட செயற்கை இருதயமொன்றை பிரான்ஸ் ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர். இருதய இயக்கம் பாதிக்கப்பட்ட - இருதய மாற்று சிகிச்சையொன்று சாத்தியமற்ற - நோயாளிகளுக்கு இந்த செயற்கை இருதயமானது வரப்பிரசாதமாக அமையும் என மேற்படி ஆய்வுக்குத் தலைமை தாங்கிய பிரான்ஸின் பிரபல இருதய சத்திர சிகிச்சை நிபுணரான மருத்துவ கலாநிதி அலெய்ன் கார்பெண்ரியர் தெரிவித்தார்.

கடந்த 15 வருட கால ஆராய்ச்சியின் பயனாக உருவாக்கப்பட்டுள்ள இந்த செயற்கை இருதயம் தொடர்பாக விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் மாநாடு பாரிஸில் இடம் பெற்றது. ''உயிரியல் இராசயன இழையங்களைப் பயன்படுத்தி முழுமையான செயற்கை இருதயம் உருவாக்கப்பட்டது உலகில் இதுவே முதற்தடைவையாகும்'' என மேற்படி இருதயத்தை உருவாக்கியுள்ள உயிரியல் மருத்துவ நிறுவனமான ''கார்மட்'' டின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பற்றிக் கொலம்பியர் தெரிவித்தார்.

''இந்த உயிரியல் இரசாயன இழையங்கள் விலங்குகளின் இழையங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டமையால் அவற்றை மனித உடல் நிராகரிப்பதற்கான வாய்ப்பு குறைவாகவுள்ளது'' என்றும் அவர் கூறினார்.

பொது மற்றும் இராணுவ பாவனைக்கான விமானங்கள், எறிகணைகள்,விண்கலங்கள் ஆகியவற்றை உருவாக்கி சந்தைப்படுத்தி வரும் விண்வெளி மற்றும் விமானப் பாதுகாப்பு நிறுவனத்தின் உப நிறுவனமாகவே 'கார்மட்' நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆய்வாளர்கள் இது குறித்து பின்வருமாறு விளக்கினார்கள்:-

மேலும் 15 புதிய செயற்கை இருதயங்களை உருவாக்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த இருதயங்களை எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் மனிதர்களுக்கு பொருத்தும் பரீட்சார்த்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

1980 களிலிருந்து செயற்கை இருதயங்களை உருவாக்குவதற்கான அநேக ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றில் அநேகமானவை இருதய மாற்று அறுவைச் சிகிச்சை வரை நோயாளியின் உயிரை தக்க வைப்பதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளன.

எனினும், அவை எவையுமே நீண்டகால அடிப்படையில் மாற்று இருதயமாக இயங்கும் வல்லமையைக் கொண்டிருக்கவில்லை. அந்தச் செயற்கை இருதயங்களைப் பொருத்துவதால் ஏற்படும் ஒவ்வாமை எதிர் விளைவுகள் மற்றும் குருதி உறைதல் போன்ற பிரச்சினைகள் காரணமாகவே அவற்றினை நோயாளிக்கு நிரந்தரமாக உபயோகிப்பது சாத்தியமற்றிருந்தது. எனினும், இப்புதிய மிருக இழையங்களால் உருவாக்கப்பட்ட செயற்கை இருதயத்தால் குருதி உறையும் அபாயம் குறைவு. - என்றார்.

## இந்தியப் பணக்காரர் லட்சுமி மிட்டலுக்கு 7 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபா நட்டம்

### சர்வதேச நிதி நெருக்கடியால்!

உலகின் மிகப்பெரிய பணக்காரர்கள் வரிசையில் இடம்பிடித்துள்ள இந்தியரான 'ஸ்டீல் மன்னன்' என்றழைக்கப்படும் லட்சுமி மிட்டலுக்கு சர்வதேச நிதி நெருக்கடியால் 7 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் சாதாரண சிறு முதலீட்டாளர்கள் முதல் மிகப்பெரிய தொழிலதிபர்கள் வரை பலரையும் ஆட்டம் காணச் செய்துவிட்டன. இதில் உலக அளவில் 'ஸ்டீல் மன்னராக' திகழும் லட்சுமி மிட்டலுக்கும் பலத்த அடி விழுந்திருக்கிறது.

இவரது நிறுவனத்தின் பங்குகள் அமெரிக்கா மற்றும் லண்டன் பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்பட்டுள்ளன.

கடந்த ஜூன் மாதம் அமெரிக்க சந்தையில் லட்சுமி மிட்டல் நிறுவன பங்கின் விலை அதிகபட்சமாக 104.77 டொலராக இருந்தது.

தொடர்ந்து ஏற்றப்பட்ட சரிவைத் தொடர்ந்து அது 25 டொலருக்கு வந்துவிட்டது. இதன் காரணமாக லட்சுமி மிட்டல் நிறுவனத்தின் மொத்த சந்தை மூலதனத்தில் 7 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதம் மொத்த சந்தை மூலதனம் 9 லட்சத்து 90 ஆயிரம் கோடி ரூபாவாக இருந்தது. தற்போது 2 லட்சத்து 40 ஆயிரம் கோடிரூபாவாகக் குறைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வருட பட்ஜெட்டில் யுத்தத்திற்கே முன்னுரிமை!

## போருக்கு செலவாகும் நிதி நாட்டிற்கு நல்ல முதலீடாம்

கொழும்பு. நவ. 04

விடுதலைப் புலிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கை தொடர்வதை அடிப்படையாகக் கொண்டே அரசின் அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டம் அமைந்திருக்கும் என்று பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

2008 வரவு - செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமான சவாலாகக் காணப்படுகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

"வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த வருமானத்தைப் பெறுவது இவ்வருடம் மிகவும் கடினமாகக் காணப்பட்டது. செலவுகள் அதிகரித்துள்ளன. இவற்றின் தாக்கம் இவ்வருட பற்றாக்குறையில் பிரதிபலிக்கும்" - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"2008இல் வரவு - செலவுத் திட்டத்தின் பாதுகாப்பிற்கு 16 ஆயிரத்து 600 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்தோம். புதிய வரவு - செலவுத் திட்டத்தில் அது மேலும் 2 ஆயிரத்து 800 கோடியால் அதிகரிக்கப்பட்டுள்ளது" என பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

"அரசு இவ்வாறு பாதுகாப்பிற்கு அதிகளவு நிதியை ஒதுக்குவதை நாட்டிற்கான முதலீடாகவே கருதுகின்றது. இவ்வாறு அதிகளவு நிதியை ஒதுக்கியதால்தான் கிழக்கு மாகாணத்தை எம்மால் கைப்பற்ற முடிந்தது" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"2009இல் சமாதானத்தைக் கொண்டுவர எண்ணியுள்ளோம் என்பதை சகல சமூகத்தினருக்கும் கூறுகின்றோம். 2009 வரவு - செலவுத் திட்டம் இதனை சாதிப்பதற்கான கடப்பாட்டைக் கொண்டிருக்கும்" - எனவும் அவர் கூறியுள்ளார்.

(அ-சி)

## காணாமற் போனவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், நவ.4

கட்டுடைப் பகுதியில் கடந்த முதலாம் திகதி காணாமற்போன இளைஞன் நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டார்.

மானிப்பாய், கட்டுடையைச் சேர்ந்த நாகராசா ஜெயமோகன் (வயது 32) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மல்லாகம் மேலதிக நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

சடலத்தில் சூட்டுக்காயங்களோ வெட்டுக்காயங்களோ காணப்படவில்லை என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலையாகவோ அல்லது பாம்பு கடி காரணமான மரணமாக இருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

சடலத்தை பிரேத பரிசேதனைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(1-25-78)

# யாழ். பல்கலைக்கழக மாணவர் மன்ற முன்னாள் தலைவரின் அகால மரணத்தால் பதற்றம்; பீடாதிபதிகள் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.4

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் கடந்த வருடத் தலைவராகச் செயற்பட்ட செல்லத்துரை புருஷோத்தமனின் அகால மரணமும் அதனைத் தொடர்ந்து மாணவர் மத்தியில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையும் எமக்கு ஆழ்ந்த கவலையைத் தருகின்றது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகள் இணைந்து கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், கலைப்பீடாதிபதி சோ.கிருஷ்ணராசா, மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி க.சிவபாலன், உயர்பட்டப்படிப்பு பீடாதிபதி பேராசிரியர் க.சத்தியசீலன், முகாமைத்துவ வணிகப் பீடாதிபதி க.தேவராஜா, விவசாய பீடாதிபதி கலாநிதி சிவமதி சிவச்சந்திரன், விஞ்ஞான பீட பதில் பீடாதிபதி கலாநிதி ஆர்.ஸ்ரீகரன் ஆகியோர் கையொப்பம் இட்டு இந்த அறிக்கையை விடுத்துள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் முன்னெடுக்கப்படும் கல்விச் செயற்பாடுகளில் இவ்வாறான நிலைமைகள் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்துகின்றன.

தொடரும் இத்தகைய அவலங்களை முடிவுக்குகொண்டுவருவதற்கு நிலைபேறான அரசியல் தீர்வு ஒன்றே வழியாகும் என பல்கலைக்கழக சமூகம் வலியுறுத்துகின்றது- என்றுள்ளது.

### மாணவர்கள் மீதான அச்சுறுத்தல்களை தவிர்க்குமாறு ஒன்றியம் வலியுறுத்து

பல்கலைக்கழக மாணவர்கள் மீதான அச்சுறுத்தல்கள் தவிர்க்கப்படவேண்டும் என்ற தலைப்பில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

யாழ். பல்கலைக்கழக மாணவர் விடுதியில் படையினர் நுழைந்து மாணவர்களைப் பதற்றத்திற்கு உள்ளாக்கும் வகையில் நடந்துகொண்டுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளால் எமது கல்வியும் வாழ்வும் பாதிக்கப்படுகின்றன. மாணவர்களை அச்சுறுத்துகின்ற இவ்வாறான செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும்.

01.11.2008 அன்று மாலை பல்கலைக்கழக விடுதிகளின் சூழலில் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டனர். பின்பு திடீரென ஆனந்தகுமாரசாமி விடுதிக்குள் நுழைந்த படையினர் மோப்ப நாய்களுடன் சோதனையிட்டதுடன் தமக்கு எதிராகச செயற்பட்ட பல்கலைக்கழக பழைய மாணவனைக் கொன்றுவிட்டதாகக் கூறியும் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டால் ஏனையோருக்கும் இதுதான் தண்டனை எனக்கூறி மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டனர்.

குறிப்பிட்ட மாணவன் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற பொழுது பெரும் உயிர் அச் சுறுத்தலுக்கு உள்ளானவர். தொடர்ந்தும் இவ்வாறு பல்கலைக்கழக மாணவர்கள் மீது அச்சுறுத்தல்கள் மேற்கொள்வதனை குறிப்பிட்ட தரப்பினர் நிறுத்துதல் வேண்டும்.

**கல்விச் செயற்பாடு முழுமையாகப் பாதிப்பு**

மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்த நேரத்தில் அச்சுறுத்தல் தன்மையுடன் படையினர் சோதனையிட்டதன் காரணமாக மாணவர்கள் பெரும் அச்சத்தின் மத்தியில் உளரீதியாகப் பாதிப்புக்குள்ளானார்கள். அத்துடன் மாணவர்களையும் விடுதியையும் படம் பிடித்துச் சென்றுள்ளனர். இதனால் மாணவர்களது கல்விச் செயற்பாடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டன. இரவுக்கான உணவு எடுப்பதற்கு மாணவர்கள் கடும் சிரமங்களை அனுபவிக்க நேர்ந்தது.

மிகவும் கொடுமையான சூழலில் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் நாம் கல்வியைக் கற்று வருகின்றோம். இவ்வேளையில் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் எமக்கு பதற்றத்தையும், அச்சுறுத்தலையும் ஏற்படுத்துவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமலிருக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-1)

# அவரச தேவைகளுக்கு வெளிமாவட்டம் செல்வோருக்கு 48 மணி நேரத்தில் பயண அனுமதி வழங்கப்படும்

## நடைமுறைகளை அறிவித்துள்ளது படைத்தலைமையகம்

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து அவசர தேவைகளுக்காக வெளிமாவட்டங்களுக்குச் செல்வோருக்கு 48 மணி நேரத்தில் பயண அனுமதி வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பதாகப் பலாலிப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

விண்ணப்பதாரி குடியிருக்கும் கிராம சேவை அதிகாரியினால் உறுதி செய்யப்பட்டு பிரதேச செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட பின்னர் அருகில் இருக்கும் இராணுவ முகாம்களில் பயண அனுமதி விண்ணப்பத்தை ஒப்படைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படடுள்ளது.

புதிய நடைமுறை சம்பந்தமாக படைத் தலைமையகம் விடுத்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அதன் பிரகாரம் ஒப்படைக்கப்பட வேண்டிய ஆணவங்கள் வருமாறு:-

* கிராம சேவை அதிகாரியிடமிருந்தோ அல்லது பிரதேச செயலரிடமிருந்தோ பூரணப்படுத்தப்பட்ட பயணப் பாதுகாப்பு அனுமதிப் படிவங்கள். (பிரதி - 01)
* பயணிப்போருடைய தேசிய அடையாள அட்டை. (பிரதிகள் - 02)
* இராணுவத்தினரால் வழங்கப்பட்டிருக்கும் குடும்பப்பதிவு அட்டை (பிரதிகள் - 02)
* பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டிருக்கும் குடும்பப்பதிவு அட்டை(பிரதிகள்- 02)
* அவரச தேவையை ஏற்றுக்கொள்வதற்கான ஆவணங்கள் / பக்ஸ் தகவல்கள். (பிரதிகள் - 02)
* கிராம சேவை அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்- அந்தக் கடிதத்தில் விண்ணப்பதாரர் தங்கியிருக்கும் முகவரி, தென் பகுதிக்குச் சென்று தங்கவிருக்கும் இடத்தின் முகவரி, அவசர தேவையும். (பயணிப் போர் பயங்கரவாத மற்றும் அரச விரோத செயற்பாடுகளுக்கு தொடர்பில்லை என்பதையும் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்)

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் விண்ணப்பத்தை பிரதேச செயலரின் அனுமதியின் பின்னர் அருகில் இருக்கும் இராணுவ முகாமில் ஒப்படைத்துப் பெறப்பட்ட பற்றுச் சீட்டை 48 மணித்தியாலங்களின் பின்னர் அந்தப் பிரதேசத்தின் சிவில் இணைப்பதிகாரி அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் பயணப் பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

அதனை விமானப் பயண வசதியை வழங்கும் தனியார் நிறுவனங்களான (ஏரோ லங்கா / எக்ஸ்போ எயார்) அல்லது கப்பல் பயண ஒழுங்குகளை மேற்கொள்ளும் மாவட்ட செயலகத்திலோ ஒப்படைத்து பயணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பயணச் சீட்டுடன் பயணப் பாதுகாப்பு அனுமதியை இராணுவத்தின் உட்செல்லும் அல்லது வெளிச்செல்லும் நிலையத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

தென்பகுதியில் பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்படும் அழிவு நடவடிக்கைகளை குறைத்துக் கொள்வதற்காகவே இந்நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய தேவை பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்திற்கு ஏற்பட்டுள்ளது- என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அடையாள அட்டையைத் தவறவிட்டோர் புதிதாகப் பெறுவதற்கு விண்ணப்பிக்கப் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம். நவ.4

குடாநாட்டில் தமது அடையாள அட்டைகளைத் தவறவிட்டவர்கள் அது குறித்துப் பொலிஸாரிடம் முதலில் முறைப்பாடு செய்வதோடு, புதிதாகப் பெறுவதற்கு விண்ணபிக்கும் போதும் பொலிஸாரின் விசாரணையின் பின்னரே சமர்ப்பிக்க வேண்டும்.

இது குறித்து பலாலிப் படைத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

தேசிய அடையாள அட்டையை ஒருவர் தவறவிடும் பட்சத்தில் உடனடியாக அது பற்றி அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய வேண்டும். அத்தோடு கீழ்வரும் உண்மையான தகவல்களைப் பொலிஸாரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

* தவறிய தேசிய அடையாள அட்டையின் இலக்கம் மற்றும் வழங்கப்பட்ட திகதி.
* முறைப்பாடு செய்பவரின் முழுப் பெயர் மற்றும் முகவரி.
* அடையாள அட்டை வழங்கப்படும்போது அதன் உரிமையாளர் தங்கியிருந்த பிரதேச செயலர் பிரிவு.
* முறைப்பாடு செய்பவரின் பிறந்த திகதி, பிறந்த இடம் மற்றும் வேறு பெயர்கள்.
* முறைப்பாடு செய்பவருக்கு அடையாள அட்டையின் இலக்கம் ஞாபகம் இல்லையெனில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் இலக்கம் மற்றும் வழங்கப்பட்ட திகதி.
* அடையாள அட்டை உரிமையாளரது தாய், தந்தை ஆகியோருடைய முழுப் பெயர்.

பொலிஸாரினால் அது பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதும் முறைப்பாட்டின் பிரதியொன்றை பெற்று அதனை கிராமசேவை அதிகாரியிடம் கையளித்து அவரால் வழங்கப்படும் விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து கிராம சேவை அதிகாரியினதும் பிரதேச செயலாளரினதும் அனுமதியின் பின்னர் மீண்டும் பொலிஸாரிடம் அதனைச் சமர்ப்பித்து மேற்படி விசாரணைகள் முடிவடைந்ததும் உங்கள் பிரதேச கிராம சேவை அதிகாரியிடம் கையளிக்கவேண்டும்.

வேறு ஒருவருக்குச் சொந்தமான தேசிய அடையாள அட்டையொன்றை இன்னொருவர் வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். வேறு ஒருவருடைய தேசிய அடையாள அட்டையொன்றைக் கண்டெடுத்தால் அதனை அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இதேவேளை -

யாழ். குடாநாட்டில் தமது தேசிய அடையாள அட்டைகளைத் தவறவிட்டவர்களின் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதுடன், போலியான ஆவணங்களுடன் முறைப்பாட்டின் பிரதியைச் சமர்ப்பித்து அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளப் பயங்கரவாதிகள் முயற்சிக்கின்றனர் என்பது பொலிஸாரின் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது தேசியப் பாதுகாப்பிற்குப் பெரும் அச் சுறுத்தலாக அமைந்திருப்பதுடன், முறைகேடான முறையில் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முயற்சிப் போருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது - என்றும் படைத்தரப்பினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர்கள் பதவி உயர்வுப் பரீட்சை

# சமுகமளிக்க முடியாமைக்கான காரணத்தை எழுத்தில் அனுப்பலாம்

கொழும்பு, நவ.4

கொழும்பில் இப்போது நடைபெற்று வரும் அதிபர் தரம் 2-II பதவிக்கு நேர்மு கப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள யாழ்ப் பாணம், வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர் கள் சமுகமளிக்க முடியாமைக்கான கார ணத்தை எழுத்து மூலம் அனுப்பினால் போதுமானது. மாற்று ஏற்பாடுகளை கல் வியமைச்சு மேற்கொள்ளும்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை ஆசி ரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்ராலின். கல்வியமைச்சின் செயலாளர் நிமால் பண் டாரவுக்கும் தமக்கும் இந்த விடயம் தொடர் பாகபேச்சுவார்த்தை நடைபெற்றதுஎன்றுஅவர் உதயனுக்கு நேற்று மாலை தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:-

கொழும்பில் தற்சமயம் நடைபெறும் அதிபர் சேவைக்கான நேர்முகப் பரீட் சைக்கு 1,200 பேர் அழைக்கப்பட்டுள்ள னர். அவர்களில் 400 பேர் தமிழ் மொழி மூல அதிபர்கள். தமிழ் மொழி மூல அதிபர்களில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த வர்கள் 50 பேர்.

இவர்கள் கொழும்பு வருவதில் உள்ள நெருக்கடிகள், சிக்கல்கள் தொடர்பாக கல் வியமைச்சின் செயலாளரைச் சந்தித்து விளக்கம் அளித்தேன்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேர்முகப் பரீட்சைக்கு கொழும்பு வருவதற்கு பாது காப்பு அனுமதி பெறக் காத்திருக்க வேண் டும். போக்குவரத்துக்கு 19 ஆயிரம் ரூபா செலவிடவேண்டும்.

இவ்வளவு கஷ்டத்துக்கு மத்தியில் வந் தாலும், அவரது சான்றிதழ்கள் மட்டுமே நேர்முகப்பரீட்சையில் பரிசீலிக்கப்படும். ஆகையால் இவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கோரினேன்.

இதை ஏற்றுக்கொண்ட செயலாளர், நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்க முடியா மைக்கான காரணத்தை கடிதம் மூலம் அவர் கள் அனுப்பினால் போதும். அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்யப்படும் என்று தெரி வித்தார் - இவ்வாறு ஸ்ராலின் விவரித்தார். (அ-1)

# காலியில் சுனாமி வதந்தியால் மக்கள் பதறியடித்து ஓட்டம்!

கொழும்பு, நவ. 04

காலி கடலில் மீண்டும் ஆழிப்பேரலை ஏற்பட்டுள்ளது என்று நேற்று திடீரெனப் பரவிய வதந்தியால் தென்பகுதியில் கடும் பதற்றம் ஏற்பட்டது.

கரையோரத்தை அண்டிய காலி மக்கள் இந்த வதந்தியை அடுத்து அவசர அவசர மாகத் தங்கள் வீடுகளை விட்டு வெளி யேறி பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடத் தொடங்கினர்.

இந்தச் செய்தி தெற்கு முழுவதும் பரவியதால் காலி மாத்திரமின்றி ஹம்பாந் தோட்டை உள்ளிட்ட தென்பகுதி கரையோ ரங்களில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

காலையில் ஏற்பட்ட இந்தப் பதற்றம் பிற்பகல் வரையும் நீடித்தது. மீண்டும் ஆழிப்பேரலை வருவதற்கான அறிகுறி கள் இல்லையென்று தேசிய ஆழிப்பேரலை எச்சரிக்கை நிலையம் அறிவித்தது.

அந்த அறிவித்தலின் பின்னரே கரை யோர மக்கள் மீண்டும் அவர்களின் வீடு களுக்குத் திரும்பினர் என்று தெரி விக்கப் பட்டது. இருப்பினும், சிலர் அச்சம் காரணமாக மாலை வரை வீடு திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பொலிஸார் வீதிகளில் இறங்கி மக்களின் இந்தப் பதற்ற நிலைமையைக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவந்தனர் என்று காலி பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (சி)

# குடும்பஸ்தரைக் காணவில்லை

வத்தளை, சமகிமாவத்தையில் உள்ள வெளியமுனை வீதியில் வசிக்கும் நாகராஜா சத்தியகுமார் (வயது - 48) என்ற தமிழ்க் குடும்பஸ்தர் கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மார்டின் வீதியைச் சொந்த இடமாகக் கொண்ட இவர், கடந்த 20 வருடகாலமாக கொழும்பில் வசித்து வருகின்றார் என்றும்,

காசோலை மோசடி வழக்கு ஒன்று சம் பந்தமாக, புதுக்கடை நீதிமன்றிற்குச் சென்ற போதே இவர் காணாமல் போனார் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சம்பவம் தொடர்பில் காணாமல் போன வரின் மனைவி வத்தளைப் பொலிஸ் நிலை யத்திலும், மக்கள் கண்காணிப்புக் குழுவி லும் முறைப்பாடுகளைச் செய்துள்ளார்.

## உறவினரைப் பயணம் அனுப்புவதற்காக

# கொழும்பிலிருந்து திருமலை சென்ற தாவடி வாசியைக் காணவில்லை

யாழ்ப்பாணம், நவ.4

கொழும்பிலிருந்து சென்று திருகோண மலையில் உறவினர்களைக் கப்பலில் ஏற்றிவிட்டு திரும்பிய கொக்குவில் வாசி குறித்து தகவல் இல்லை என அவரது மகள் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொக்குவில், தாவடி தெற்கை சேர்ந்த மாணிக்கம் பரராஜசிங்கம் (வயது 55) என் பவர் தொடர்பாகவே முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

தமது உறவினர்களை யாழ்ப்பாணத்துக் குக் கப்பலில் அனுப்புவதற்காக பரராஜ சிங்கம் திருகோணமலைக்கு வந்திருந்தார். உறவினர்கள் பயணமானதும் கடந்த 23 ஆம் திகதி கொழும்புக்கு புறப்பட்டார்.

நேற்று வரை அவர் கொழும்பு சென்ற டையவில்லை - என்று முறைப்பாட்டில் தெரி விக்கப்பட்டுள்ளது. (அ-1-25)

## ஞாயிறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள தொண்டமானநகர், புதுமுறிப்பு, செல்வநகர் உட்பட மக்கள் குடியிருப் புக்கள் மீது படையினர் நேற்றுமுன்தின மும் நேற்றும் செறிவான ஆட்லெறித்தாக் குதலை நடத்தினர் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

இதனால் மக்கள் பெரிதும் அல்லோல கல்லோலப்பட்டனர்.

மக்களின் 16 வீடுகள் இந்தத் தாக் குதலினால் அழிந்துள்ளன. 18 வர்த்தக நிலையங்கள் சேதமாகியுள்ளன என்றும் கூறப்பட்டது. (அ-சி)

## உடுவில் விபத்தில் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், நவ.4

உடுவில் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் லொறியும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

உடுவில் பகுதியைச் சேர்ந்த சிவசுப் பிரமணியம் மயூரன் (வயது 33) என்பவரே விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார். (1-25-78)

## இரண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தை மேற்கொள்ள முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்த தாவது:-

முள்ளியவளைக்கு பத்து லொறிகளும் புதுக்குடியிருப்புக்கு எட்டு லொறிகளும் நேற்று வந்து சேர்ந்தன.

இந்தப் பொருள்கள் ஒரு வாரத்துக்கு போதுமானவை. அத்தியாவசிய சேவைகள் நாயகத்தால் அனுப்பப்பட்ட பொருள்க ளும் ஒரு வாரத்துக்கு போதுமானவை.

அதன் பிரகாரம் இப்போதுள்ள உண வுப் பொருள்கள் இருவாரத்துக்கு மக்க ளுக்கு வழங்கப் போதுமானவை - என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-1-ரி)

## முள்ளியானில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

27 ரக விமானங்கள் நேற்று மாலை 6.05 மணி யளவில் குண்டுத்தாக்குதலை நடத்தின.

இதில் அப்பாவிப் பொதுமக்கள் இருவர் காயமடைந்தனர். பொதுமக்களின் மூன்று வீடுகள் அழிந்துள்ளன. கால்நடைகளும் அழிந்தன எனத் தெரிவிக்கப்பட்டது.

முள்ளியானைச் சேர்ந்த ஆழ்வார் உதய குமார் (வயது - 42), நல்லையா சிவஞா னம் (வயது - 43) ஆகியோரே காயமடைந் தனர் எனவும் கூறப்பட்டது. (அ-சி)

## மாங்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலை நடத்தினர்.

பிற்பகல் 5 மணியளவில் படையின ரின் முன்நகர்வு முறியடிக்கப்பட்டது. இதில் 10 படையினர் கொல்லப்பட்ட னர்; பலர் காயமடைந்தனர் - என்றுள்ளது.

படைத்தரப்புத் தெரிவித்ததாவது:-

வன்னிவிளாங்குளத்தில் நிலை கொண்டிருந்த படை யினர் ஏ9 பாதைக்கு மேற்கே, மாங்குளத்துக்கு சமீபமாக நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு நடவடிக்கையில் ஈடு பட்டனர். அப்போது எதிர்கொண்ட விடுதலைப் புலிக ளுடன் மோதினர்.

படையினரின் எதிர்ப்புக்கு முகம் கொடுக்க முடியாது பின்வாங்கி விட் டனர். படையினர் நடத்திய தேடுத லில் இரு புலி உறுப் பினர்களின் சடலங் களையும் இரண்டு ரி56 ரக ஆயுதங் களையும் மீட்டனர் - என் றுள்ளது.

பொருளியல் கல்லூரி
யாழ்:- இணுவில்
(இரு இடத்திலும்)
A/L DAY CLASS
கலை வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்
யாழ் நகரில்:- 5.11.2008 புதன் காலை 8.00
இணுவிலில்:- 6.11.2008 வியாழன் காலை 8.00
அனுமதிகளை அன்றைய தினம் பெற்றுக் கொள்ளவும்

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி யாழ்.நகர்
சிங்களம்
பேராசிரியர்: லீலாகிருஸ்ணன்
ஆரம்பம்:- 05.11.2008
Wed. 9.30 a.m
அனுமதிக்கு முந்துங்கள்
Mon, Wed - 9.30 a.m.

# குடா நாட்டுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய வெள்ளிவிழாவின் போது கஜபா படையணியின் (கஜபா றெஜி மென்டின்) ஸ்தாபகரான மேஜர் ஜெனரல் விஜய விமலரத்தினவின் சேவைகள் நினைவு கூரப்பட்டன. இந்தப் படை யணியைச் சேர்ந்த 3500 பேர் இதுவரை தமது உயிரை நாட்டுக்காக அர்ப்பணித் தமை நினைவு கூரப்பட்டு பேரஞ்சலி செலுத்தப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும், இராணுவத் தில் இருந்து இளைப்பாறுவதற்கு முன்னர் கஜபா படையில் பணிபுரிந்தமையும் விழா நிகழ்வுகளின் போது பிரஸ்தாபிக்கப் பட்டது.

நேற்றுக் காலை நடைபெற்ற கோலாக லமான வெள்ளிவிழா நிகழ்வில் பேசகை யில் இராணுவத் தளபதி மேலும் கூறியதா வது:

இன்னும் 7 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள எமது படையினர் விரைவில் கிளாலி கடல் நீர் ஏரிப்பகுதியைச் சென்றடைவர். அதன் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் தென் பிரதேசம் முற்றாக படையினர் கைக்கு வந்து விடும். விடுதலைப் புலிகளின் பிரசன்னமில்லாத பிர தேசமாக அது மாறிவிடும்.

அதன் தொடர்ச்சியாக குடாநாட்டுக் கான பிரதான (விநியோகப்) பாதையை எமது படையினர் விரைவில் திறப்பதற் கும் வழிகோலப்படும் - என்று கூறினார்.

வெள்ளிவிழாவின் பின்னர் நடை பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து இராணுவத் தளபதி பின்வருமாறு சொன் னார்.- கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக் கும் இடையிலான தரை வழிப்பாதை திறக்கப் படுவது மிக விரைவில் நிஜமாகப் போகிறது.

படையினர் கிளாலிக் கடல் நீரேரியைச் சென்றடைந்ததும் விடுதலைப் புலிகளின் கோட்டையாக விளங்கும் பூநகரி எம்மிடம் வீழ்ந்து விடும். எமது படையினர் விடுத லைப் புலிகளின் சமரிடும் பலத்தில் 80 சத வீதத்தை இல்லாது துடைத்தொழித்து விட் டனர். அதனால் ஏ-9 பாதையின் மேற்குப் பிரதேசம் விடுதலைப் புலிகள் எவருமே இல்லாமல் சுத்திகரிக்கப்பட்டுவிடும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான பிரதான பாதை திறக்கப்படும் அதேவேளை முல் லைத்தீவை கைப்பற்றுவதற்காகவும் படை யினர் அணி திரட்டப்படுவர். ஏ9 வீதியில் 50 கிலோ மீற்றர் தூரத்துக்கு 4 படை அணிகள் இணைந்து பாதையின் கிழக்கே நீண்ட இராணுவ வேலியாக நிலைகொள் வர் - அரண் அமைப்பர். அதன் பின்னர் கிழக் குப் புறம் முழுமையான பாதுகாப்பு வலய மாகி விடும் - என்று கூறினார். (அ)

## ஐ.நாவின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள 2 லட்சத்து 30 ஆயிரம் பொது மக் களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங் கும் நடவடிக்கையின் தொடர்ச்சியாக நேற்று வவுனியாவிலிருந்து உலக உணவுத் திட்டத்தில் 29 லொறிகளில் 438 மெட்ரிக் தொன் உணவுப் பொருள்கள் எடுத்துச் செல் லப்பட்டன என்று ஐ.நா. தெரிவித் துள்ளது.

வன்னியிலிருந்து ஐக்கிய நாடுகள் உட்பட சர்வதேச மனிதாபிமான அமைப் புகள் வெளியேறியதைத் தொடர்ந்து இது வரை நான்கு தடவைகள் வாகனத் தொட ரணிகளில் உணவுப் பொருள்கள் அங்கு அனுப்பட்டுள்ளன என்றும் ஐ. நா. தெரி வித்துள்ளது.

இதுவரை 2 ஆயிரத்து 300 மெட்ரிக் தொன் உணவுப் பொருள்கள் இவ்வாறு விநியோகிக்கப்பட்டுள்ளன என்று குறிப் பிடப்பட்டுள்ளது. (சி)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிக்குள் 23.9 வீதமாக அதிகரிக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. ஒக்டோபர் மாதம் பண வீக்கம் 23.4 வீதமாகக் காணப்பட்டது.

நுகர்வோர் விலைகளைக் குறைப் பதற்கு அவசியமான சீர்திருத்தங்களை மேற்கொள்ளுமாறு இலங்கையைக் கேட்டுள்ள சர்வதேச நாணய நிதியம், பொதுச்செலவீனங்களைக் குறைக்கு மாறும் கோரியுள்ளது.

பொருளாதாரத்தில் காணப்படும் சமத்துவமின்மைகள், உயர் பணவீக்கம் மற்றும் வெளிநாட்டு நிதி அழுத்தங்கள் உட்பட பல காரணிகள் இணைந்து இலங் கையின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு கடும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள் ளன என சர்வதேச நாணய நிதியத்தின் இயக்குநர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் உட்கட்டுமானத் திட்டங் களுக்கு செலவிடுவதற்கு பல மில்லியன் டொலர்களைத் திரட்டும் இலங்கையின் அறிவிப்பு குறித்தும் சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ளது.

இலங்கை மத்தியவங்கி இரண்டு வருட கடன் அடிப்படையில் 300 மில் லியன் டொலர்களைத் திரட்டுவதற்குத் திட்டமிட்டுள்ளது. மேலும் வெளிநாட்டு வர்த்தக வங்கிகளிடமிருந்து 150 டொலர் கடனைப் பெறும் முயற்சியிலும் அது இறங்கியுள்ளது.

வெளிநாட்டு நிதியைத் திரட்டுவது மிகவும் அபாயகரமானதாக அமையலாம் என்றும் தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியம், தற்போது 6.1 ஆகக் காணப்படும் பொருளாதார வளர்ச்சி 2009இல் 5.9 ஆகக் குறைவடையலாம் என்றும் தெரிவித்துள்ளது. (சி)

## யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகிஷ்கரித்தனர். இதனையடுத்து பல் கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர் கள், கல்விசாரா ஊழியர்கள் என அனைத் துத் தரப்பினரும் பகிஷ்கரிப்பில் ஈடுபட் டனர். இதனால் பல்கலைக்கழகச் செயற் பாடுகள் பாதிக்கப்பட்டன.

மரணமான மாணவனுக்கு அஞ்சலிசெலுத் தும் வகையிலான சுவரொட்டிகளும் பல்கலைக்கழக வளாகத்தில் ஒட்டப் பட்டிருந்தன. கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. (அ-50-86)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org